Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO

RAMCO CEMENT

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து

(C/984)

முரசு - 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 ஐப்பசி 08 செவ்வாய்க்கிழமை (25.10.2011) பக்கங்கள் 16 ஓசை - 25




டிஜிற்றல் அடையாள அட்டை (09)



கூட்டமைப்பால் இறையாண்மைக்கு அச்சுறுத்தல் (08)



அப்பாவை கொன்றவர்களை பழிவாங்குவேன் (13)



இந்திய வரம்? (14)

# சர்வதேசத்தின் எதிர்பார்ப்பு நடைமுறைச் சாத்தியமற்றது

## கூறுகிறார் பாதுகாப்புச் செயலர்



(கொழும்பு)

அதிஉயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுதல், கைதிகளை விடுதலை செய்தல், புலிச் சந்தேகநபர்களுக்கு புனர்வாழ்வு அளித்தல் போன்ற நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென சர்வதேச சமூகம் எதிர்பார்க்கின்றது. ஆகையால் இவை அனைத்தும் நடைமுறைச் சாத்தியமற்றதென பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

புலிகளும் புலம்பெயர்ந்த தமிழ்மக்களும் நாட்டிற்கு எதிராக தொடர்ச்சியாக செயற்பட்டு வருகின்றனர். இந்த நடவடிக்கைகளை கட்டுப்படுத்த பல்வேறு வழிகளில் போராட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

புலிகளுக்கு எதிரான சர்வதேச அழுத்தங்களை முறியடிப்பதற்கு எடுக்கப்பட்டு வரும் முயற்சிகளை எவரும் சரியாக மதிக்கவில்லை.

யதார்த்தத்திற்கு முகம்கொடுக்கமுடியாத பலர் துமிந்தவை பார்வையிடச் செல்லவில்லை. ஆனால் நாட்டின் இறைமைக்கு அச்சுறுத்தலாக செயற்பட்டு வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களுடன் சிலர் தொடர்புகளைப் பேணி வருகின்றனர்.

துமிந்தவை வைத்தியசாலைக்கு சென்று பார்வையிட்டமை (15 ஆம் பக்கம் பார்க்க)

## போஷாக்கின்றி சிறுவர் நிலையம்

(கைதடி)

கைதடியிலுள்ள அரச சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் பராமரிக்கப்படும் சிறுவர்களின் போஷாக்கு அடைவுமட்டம் மிகவும் மோசமான நிலையில் உள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. 30 சிறுவர்களைப் பராமரிக்க 2 பராமரிப்பாளர்களே இங்கு உள்ளனர்.

இந்தச் சிறுவர் இல்லத்தில் பராமரிக்கப்படும் சிறுவர்கள், சராசரி குழந்தைகளின் போஷாக்கு மட்டத்தை விடவும் குறைந்த அளவில் உள்ளதனால் மிகவும் பலவீனமாகக் காணப்படுகின்றனர்.

அத்துடன் குறித்த சிறுவர் பராமரிப்பு நிலையத்திலுள்ள சிறுவர்கள் பராமரிப்பில் புறக்கணிக்கப்படுவதாகவும், அவர்களுக்கான உணவுப் பராமரிப்பு மிகவும் மோசமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (எஸ்)

## இனந்தெரியாதோர் தாக்குதல் மற்றுமொரு மாணவன் காயம்

(யாழ்ப்பாணம்)

இனந்தெரியாத நபர்களினால் தாக்கப்பட்டு காயமடைந்த நிலையில் யாழ்.பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவன் ஒருவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை 7.30 மணியளவில் கிளிநொச்சிக்கும் பரந்தன் சந்திக்கும் இடையில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் காயமடைந்தவர் ராசவரோதயன் கவிராயன் (வயது - 26) என்பவராவார்.

ஓட்டோ ஒன்றில் வந்த 6 பேர் கொண்ட குழு இவரை கடுமையாகத் தாக்கிவிட்டுத் தப்பிச்சென்றுள்ளது. தலையிலும் கையிலும் காயமடைந்த மாணவன் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எப்.எஸ்)

## வளமான நாடுகளை ஆக்கிரமிக்க மேற்கின் பலசாலி நாடுகள் முயற்சி

(கொழும்பு)

மேற்கின் பலசாலிகள் என கூறிக்கொள்ளும் சில நாடுகள், சர்வதேச அமைப்புகளூடாக, வளங்கள் உள்ள நாடுகளை ஆக்கிரமிப்பதற்கு, முயற்சித்து வருவதாக, அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த் தெரிவித்துள்ளார்.

இலங்கை தேசிய முன்னணியின் 10 ஆவது சம்மேளனத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர்,

எண்ணெய் வளம் காரணமாகவே, மத்திய கிழக்கு நாடுகள் சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. வரலாற்றில் நாம் இதற்கு பல்வேறு உதாரணங்களை நோக்கலாம்.



அவ்வாறு வளங்கள் உள்ள நாடுகளை அடிமைப்படுத்தி, அங்குள்ள எண்ணெய் வளத்தை சூறையாடும் முயற்சியில், அந்த வல்லரசு நாடுகள் ஈடுபட்டுள்ளன. இன்று, அவர்கள் வேறு வடிவில் இந்நாடுகளை சுரண்டுவதற்கு முற்பட்டுள்ளார்கள். பலம் வாய்ந்த நாடுகள் தமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு பல்வேறு அமைப்புகளை பயன்படுத்துகின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.

## விரிவுரை பகிஷ்கரிப்பு இன்று முக்கிய தீர்மானம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் தாக்கப்பட்டதையடுத்து இடம்பெற்று வரும் விரிவுரை பகிஷ்கரிப்பு தொடர்வதாகவும் மேற்படி சம்பவத்தை மக்கள் மயப்படுத்துவது சம்பந்தமாகவும் நேற்று வடபகுதியில் உள்ள சமூகப் பிரதிநிதிகளும் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகளும் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர்.

இதன்பிரகாரம் கருத்துத் தெரிவித்த ஒன்றியத் தலைவர் மேற்படி தாக்குதலால் ஏற்கனவே தீர்மானித்தபடி வகுப்பு பகிஷ்கரிப்பு இடம்பெற்று வருகிறது. இவ்வேளை இந்த விடயம் குறித்து நேற்று வடபகுதியில் உள்ள சர்வமதத் தலைவர்கள், சமூகப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை தொடர்வது தொடர்பாகவும், அவர்களது ஆலோசனை பெறுவது தொடர்பாகவும் சந்திப்பொன்றை நடத்தினோம்.

அந்த வகையில் தொடர்ச்சியான போராட்டம் முன்னெடுக்கப்படும் பட்சத்தில் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படும் (15 ஆம் பக்கம் பார்க்க)

## டி.என்.ஏ. பரிசோதனைக்காக அனுமதித்த குழந்தை மரணம்

(யாழ்ப்பாணம்)

டி.என்.ஏ. பரிசோதனை மேற்கொள்வதற்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 46 நாட்களான குழந்தை கடந்த வெள்ளிக்கிழமை மரணமானது.

போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் ஊழியர் ஒருவரால் கருவுற்றதாகக் கருதப்படும் பெண்ணினுடைய குழந்தை, பராமரிப்பு நிலையம் ஒன்றில் வைத்து பராமரிக்கப்பட்டது. பிறந்து 46 நாட்களே ஆன இக்குழந்தை டி.என்.ஏ. பரிசோதனைக்காக கடந்த வாரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 3ஆவது நாள் மரணமடைந்தது. குழந்தையின் மரணம் தொடர்பாக விசாரணைகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## மீன்பிடித் தடை உபகரணங்களை கைப்பற்றுவதற்கு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைகளைப் பயன்படுத்தி யாழ். குருநகர் பகுதியில் கடற்றொழிலில் ஈடுபடும் மீனவர்களின் மீன்பிடி உபகரணங்களை தேடிக் கைப்பற்றும் நடவடிக்கையொன்று நேற்றைய தினம் இடம்பெற்றதாக யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் இ.ரவீந்திரன் தெரிவித்தார்.

நேற்றுக்காலை 9 மணியளவில் இடம்பெற்ற இந்த நடவடிக்கையில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தலைமையிலான 50 பேரை உள்ளடக்கிய பொலிஸ் குழுவொன்றும், யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் சார்பில் அதன் உதவிப் பணிப்பாளர் இ.ரவீந்திரன், கடற்றொழில் பரிசோதகர் பி.ரமேஷ்கண்ணா உட்பட அதிகாரிகளும் பங்கேற்றிருந்தனர்.

எனினும் அப்பகுதியில் (15 ஆம் பக்கம் பார்க்க)

# மக்களின் விருப்பு அறிந்தே 2012 இல் அபிவிருத்திப் பணிகள்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை மக்களுடன் கலந்தாலோசனை செய்து 2012 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளுமென யாழ். மாநகரசபை ஆணையாளர் மு.வே.சரவணபவ தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை யாழ் கிறீன் கிறாஸ் ஹோட்டலில் நடைபெற்ற யாழ். மாநகரசபையின் எல்லைப் பரப்பில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டமிடல் தொடர்பாக நடைபெற்ற விசேட கூட்டமொன்றிலேயே அவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

தினமும் யாழ் மாநகரின் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக பத்துவரையான முறைப்பாடுகள் மாநகர சபைக்குக் கிடைத்துவருவதாகக் குறிப்பிட்ட அவர் அடுத்த ஆண்டில் இருந்து பொதுமக்களால் தெரிவிக்கப்படும் தகவல்களில் இருந்து தயாரிக்கப்படும் அபிவிருத்தித் திட்டமிடல்களில் இருந்து தெரிவுசெய்யப்படும் திட்டங்களே யாழ். மாநகர சபையினரால் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதற்கென மாநகர சபை அதிகாரிகள், கிராமசேவையாளர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள், பொது அமைப்புக்களின உறுப்பினர்கள், கிராமசேவையாளர் பிரிவு ரீதியாக நேரடியாகச் சென்று பொதுமக்களால் தெரிவிக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் தகவல்களைச் சேகரிக்கவுள்ளனர்.

இவ்வாறு சேகரிக்கப்படும் தகவல்கள் அறிக்கையாகத் தயாரிக்கப்பட்டு மீண்டும் குறித்த பகுதி மக்களின் பார்வைக்கு வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதன்போது மக்களால் தெரிவிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் ஏதாவது தவறவிடப்பட்டிருந்தால் அதனை மாற்றம் செய்ய முடியும்.

இவ்வாறு பூரணப்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டமிடல் அறிக்கையினை யாழ். மாநகர சபையின் பொதுக்கூட்டத்தில் சமர்ப்பித்து அதனை நடைமுறைப் படுத்துவதற்கான அங்கீகாரம் பெறப்படவுள்ளது எனவும் தெரிவித்தார்.

யாழ் மாநகர சபையின் எல்லைப பரப்பினுள் 47 கிராம சேவகர் பிரிவும் இரண்டு பிரதேச செயலர் பிரிவும் அடங்குகின்றது. உடனடியாக இத்திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்படவுள்ளதாகவும் தெரிவித்த அவர் இதன் மூலம் பொதுமக்களுக்கும் மாநகர சபைக்கும் இடையில் நெருங்கிய உறவைப் பேணமுடியுமெனவும் தெரிவித்தார். (பா)

## விபத்தில் குடும்பஸ்தர் காயம்

(யாழ்ப்பாணம்)

கன்டர் வாகனம் மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் குடும்பஸ்தர் கால் முறிந்ததுடன் படுகாயம அடைந்தார். இதேவேளை கண்டர் சாரதி தப்பியோடியுள்ளார்.

கோப்பாய் பகுதியில் நேற்று 2.45 மணியளவில் இடம்பெற்ற இவ் விபத்துச் சம்பவத்தில் கட்டப்பிராய் பகுதியைச் சேர்ந்த அ.சாந்த குமார் (வயது-33) என்ற குடும்பஸ்தரே படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலை அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# மாணவர் கௌரவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி முருகானந்தா ஆரம்ப வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை மதிப்பளிக்கும் நிகழ்வு இன்று பகல் 11 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. அதிபர் திருமதி. இ.பாலேந்திரா தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கணேசலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக கண்டாவளைக் கோட்டக் கல்விப்பணிப்பாளர், வி.இராஜகுல சிங்கம் மற்றும் கிளிநொச்சி முருகானந்தா மகாவித்தியாலய அதிபர் வரதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.(கே)

---

அனலைதீவு ஸ்ரீ மனோன்மணி ஆலய பரிபாலன சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் கௌரவிப்பு நிகழ்வு அனலைதீவு ஸ்ரீ மனோன்மணி கல்வி நிலையத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது.

பாடசாலையின் தற்போதைய அதிபர் வி.ஓங்காரலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலய முன்னாள் அதிபர் காராளப்பிள்ளை, பிரதம விருந்தினராகவும், அனலைதீவு தெற்கு அரசினர் கலைவன் பாடசாலை அதிபர் எஸ்.விக்னேஸ்வரி, வடலூர் தமிழ் வித்தியாலய அதிபர் கே.கௌரி கேசவநாதன் ஆகியோர் சிறப்பு சிறப்பு விருந்தினராகவும், விருந்தினராகவும கலந்துகொண்டனர். அனலைதீவு தெற்கு கலவன் வித்தியாலயம், வடலூர் தமிழ்கலைவன் பாடசாலை தரம் 5 புலமைப்பரிசில் சித்தியடைந்த மாணவர்கள் கல்வி கற்பித்த இரண்டு ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

கௌரவிக்கப்பட்டவர்களின் விபரம், அனலைதீவு தெற்குக் கலைவன் பாடசாலை :- வி.துவாரகன் (168), இ.நிதர்சனா (167), உ.யஸ்சகன்(157), ச.நிதர்சனன் (155), வடலூர் தமிழ் கலவன் வித்தியாலயம் எஸ்.கிருத்திகா (155), வா.ரணுசன் (154) கௌரவிக்கப்பட்ட ஆசிரியர்கள் அ.ரஞ்சிதவாணி, எம்.தமிழ்ச் செல்வி. (85)

## விபத்தில் ஒருவர் பலி

வவுனியாவில் நேற்று இடம் பெற்ற வாகன விபத்தொன்றில் ஒருவர் பலியாகியுள்ளார்.

வவுனியா மூன்றுமுறிப்பில் மோட்டார் சைக்கிளொன்றுடன் ஜீப ஒன்று மோதியதால், மோட்டார் சைக்கிளில் பயணம்செய்த நபர் பலியாகியுள்ளார். 34 வயதான கமல் துஷ்ரா என்பவரே பலியானதாக அடையாளம் காணப்பட்டுள்ளார். சடலம் வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## அடையாள அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி கண்ணகிபுரம் பகுதியைச் சேர்ந்த பவுலுப்பிள்ளை பரஞ்சோதி என்பவரது தற்காலிக அடையாள அட்டை யாழ். போதனா வைத்தியசாலை வளாகத்தினுள் கண்டெடுக்கப்பட்டு தினமுரசு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

# நிதிப்பற்றாக்குறையால் நிர்மாணப்பணி நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

நெதர்லாந்து அரசின் நிதியுதவியுடன் யுனெப்ஸ் நிறுவனத்தினால் யாழ். பாசையூர் பகுதியில் அமைக்கப்பட்டுவந்த இறங்குதுறை அமைப்பு வேலைகள் நிதிப்பற்றாக்றை காரணமாக நிறுத்தப்பட்டிருப்பதாக யாழ். மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத்துறை அதிகாரி ஒருவர் அறிவித்துள்ளார்.

கடந்த 2010 ஆம் ஆண்டு காலப் பகுதியில் குறித்த பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்த இவ்விறங்குதுறை அமைக்கும் பணிகள் கற்கள் இடப்பட்டதுடன் நிறுத்தப்பட்டிருப்பதாக அவ்அதிகாரி குறிப்பிட்டார்.

குறித்த பாசையூர் பகுதியில் பெருமளவு மீனவர்கள் கடற்தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதுடன் அம் மீனவர்களின் கடற்கலங்களை நிறுத்தி வைப்பதற்கு குறித்த பகுதியில் துறைமுகம் ஒன்று அவசியமாக உள்ளதனையும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஏற்கனவே யாழ். மாநகரசபையின் ஏற்பாட்டில் பாசையூர்ப் பகுதியில் மீன் விலை கூறும் நிலையம் புனரமைக்கப்பட்டு அப்பகுதி மீனவரிடம் கையளிக்கப்பட்டிருந்தமைம் குறிப்பிடத்தக்கது. (பா)

# தவறி விழுந்து தலையில் காயம்

யாழ். போதனா வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்படும் கட்டடத் தொகுதியிலிருந்து விழுந்து பணியாளர் ஒருவர் தலையில் படுகாயமடைந்துள்ளார். நேற்றுப் பகல் இடம்பெற்ற இவ்விபத்துச் சம்பவத்தில் தென்பகுதியிலிருந்து வந்து வைத்தியசாலையின் கட்டடத் தொகுதியில் வேலை செய்த பிரசன்னா (வயது - 20) என்ற இளைஞரே தலையில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுதிக்கப்பட்டுள்ளார்.

## அபராதம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் வாகனம் செலுத்திய நபர் ஒருவரை வழக்குப் பதிவுசெய்து யாழ். பொலிஸார் நேற்று யாழ். நீதவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தினர். மேற்படி வழக்கை விசாரணை செய்த நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராஜா குற்றவாளிக்கு 3500 ரூபா அபராதம் வித்துத் தீர்ப்பளித்தார்.

# நிவாரண விநியோகம்

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சமுர்த்தியில் பயனாளிகளுக்கான ஒக்டோபர் மாதத்திற்கான உலர் உணவு நிவாரண விநியோகம் தற்போது நல்லூர், யாழ்பாணப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களால் வழங்கப்பட்டு வருகின்றது.

கடந்தவாரம் ஆரம்பித்த இவ் விநியோகம் இவ்வாரம் முடிவுறுத்தப்படவுள்ளதால் இதுவரை நிவாரணத்தைப் பெற்றுக்கொள்ளாத பயனாளிகள் உடன் தமது பிரிவுக் கிளைகளுக்குச் சென்று பொருட்களைப் பெற்றுக்கொள்ளுமாறு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் முகாமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, செம்ரெம்பர் மாதத்திற்குரிய பணப் புள்ளிக்குரிய கொடுப்பனவுகள் சமுர்த்தி வங்கிச் சங்கங்களால் சமுர்த்தி முத்திரைப் பயணாளிகளுக்கு தற்போது வழங்கப்பட்டு வருகின்றது. (26)

# அந்தண மாணவர்கள் கௌரவிப்பு




இந்துமத குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அந்தண மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு ஆனைப்பந்தியில் அமைந்துள்ள இந்து குருமார் ஒன்றியத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணிக்கு இந்து குருமார் ஒன்றியத்தின் தலைவர் சபா வாசுதேவ குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

மங்கள விளக்கேற்றத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இந் நிகழ்வில் கேதீஸ்வர சர்மா குருக்கள் வேத பாராயணமும், இந்துகுருமார் ஒன்றியத்தின் செயலாளர் சிவானந்த குருக்கள் வரவேற்புரையும் அதனைத் தொடர்ந்து இந்து குருமார் ஒன்றியத்தின் தலைவர் சபா வாசுதேவக் குருக்கள் தலைமையுரையும் நிகழ்த்தினர்.

அதனைத் தொடர்ந்து, சிற்பி சரவணபவன் சிறப்பு விருந்தினர் உரை மற்றும் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு யா/இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் தியாகலிங்கம் நினைவுச் சின்னம் வழங்கியதுடன் சிற்பி சரவணபவன் காசோலையும் வழங்கிக் கௌரவித்தார்.

இந்நிகழ்வில் யா/இந்து ஆரம்பப் பாடசாலையின் அதிபர் தியாகலிங்கம் பிரதம விருந்தினராகவும், இணுவில் குருகுலத்தைச் சேர்ந்த மகாதேவ குருக்கள், சுன்னாகம் சிவன்கோயில் பிரதம குரு பிரம்ம சர்வேஸ்வரக் குருக்கள் மற்றும் இந்து குருமார் ஒன்றிய பீடாதிபதி மற்றும் சிவத்தொண்டர்கள் உட்பட பெற்றோர்கள் மாணவர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர். (எஸ்)

# சம்ஸ்கிருத நூற்பட்டியல் தொகுக்கும் பணி ஆரம்பம்

சம்ஸ்கிருதநூல்களைத் தொகுத்து நிலையாகக் காட்சிப்படுத்தப்பட இந்துக்குருமார் ஒன்றியம் தீர்மானித்து, அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இலங்கையின் பல பாகங்களிலும் 1881 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை நூற்றுக்கணக்கான சம்ஸ்கிருத நூல்கள் வெளியிடப்பெற்றுள்ளன. 1997 களுக்குப் பின் இலங்கையிலிருந்து மட்டுமன்றி இங்கிருந்து புலம்பெயர்ந்து பல்வேறு நாடுகளிலும் பல்வேறு சம்ஸ்கிருத நூல்கள் அந்த அந்த தேசங்களிலும் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பெற்றுள்ளன. அதிகம் கிரந்த லிபியிலும் மிகச்சில நாகர லிபியிலும் பதிப்பிக்கப்பெற்ற இந்நூல்களை தொகுத்து ஆண்டு வாரியாக தொகுத்து தகவல் புத்தகம் ஒன்று செய்கிற முயற்சி நடைபெறுகின்றது.

வருங்கால சமூகத்தின் நன்மை கருதியும், சம்ஸ்கிருத நூல்கள் எல்லாம் ஒருங்கே இணைக்கப்பட வேண்டும் எனவே வெளியிடப்பெற்ற நூல் தொடர்பான விவரத்தைத் தந்துதவும் வண்ணம் இந்துக்குருமார் ஒன்றியத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். மேலும் சம்பந்தப்பட்ட தகவல்களை hindupriest2@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

அரிய சாதனைகள் அனைத்தும் வலிமையினால் செய்யப்பட்டவை அல்ல; மாறாக மனிதன் ஒவ்வொருவனினதும் விடாமுயற்சியினால்தான் நிகழ்த்தப்படுகிறது.

-சாமுவேல் ஜோன்சன்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## தற்கொலைப்படையும் கேட்கும்!

மொழி ஒரு நதி; அது காலத்தைக் கடந்து ஓடிக்கொண்டிருக்கிறது என்பார்கள். ஒவ்வொரு பிரதேசத்தினதும் பல்லாயிரம் வருடத்து வாழ்க்கையை அவ்வப் பிரதேசத்துக்குரிய மொழி தனக்குள் கொண்டிருக்கிறது.

பல நூற்றாண்டுகளாக நிகழ்ந்துவரும் பண்பாட்டுச் செயற்பாடுகளின் தொடர்ச்சி மொழிவழியாக நிகழ்ந்து வருவதேயாகும். சொல்லப்போனால் அந்தப் பண்பாடே மொழிதான். மனிதர்களை உருவாக்குவதும் மொழிதான்.

"மொழிதான் நமக்கு உலகத்தை அளிக்கிறது. அதேசமயத்தில் அந்த உலகத்துக்கான எல்லைகளையும் அது வரையறுத்து விடுகிறது... இன்னொருபுறம் இந்த உலகின் இருப்பை சாத்தியப்படுத்துவதாகவும் மொழி செயற்படுகிறது" என்றார் நீட்ஷே.

ஒவ்வொருவரிடமும் உள்ளே ரத்தமாகவே ஓடுமளவுக்கு மொழி உயிராகக் கலந்திருக்கிறது. அதற்காகப் பல்லாயிரம் பல லட்சம் உயிர்களை அழிக்கும் போர்கள் செய்யவும் தயங்காததாக மனிதகுலம் இருக்கிறது.

மொழி நமக்கு கிறுகிறுப்பை ஏற்படுத்துகிறது; உணர்ச்சி வசப்பட வைக்கிறது; ஒன்றுபடுத்துகிறது; உயிரை இழக்கவும் கொல்லவுமான ஆவேசத்தையளிக்கிறது; இன்னும் என்னவெல்லாமோ செய்ய வைத்துவிடும் சக்தியைக் கொண்டிருக்கிறது.

மொழியை உயிருக்கு நேராகக் காண்பதும், மொழிக்கு இன்னல் விளைந்தால் சங்காரம் செய்துவிடத் துடிப்பதும், பாடையில் ஏறுவதானாலும் சரி ஓடையில் சாம்பலாய்க் கலப்பதானாலும் சரி உவகையுடன் வரவேற்பதும், மொழிக்காக எத்தனை ஆயிரம் உயிர்கள் வேண்டுமானாலும் அழியலாம் என்று துடிப்பதும் எதனால் நேர்கிறது?

மொழி வெறும் ஊடகம் என்ற அளவில் நின்றுவிடாமல், மனிதனை இயக்குகிற சக்தியாக, சொல்லப் போனால் மொழியே அவனாக மாறுகிற விந்தை எவ்விதம் நிகழ்ந்தது!

முனைவர் க.பஞ்சாங்கம் ஒரு கட்டுரையில் இப்படிச் சொல்கிறார்: "மொழியைத் தவிர மனிதர்கள் வேறு அல்லர். மனிதர்கள் கடவுளால் அல்ல, மொழியால் வடிவமைக்கப்பட்டவர்கள். மனிதத் தன்னிலையின் நனவிலி மனம் முழுவதும் மொழியின் குறியீடுகளால் நிரம்பி வழிகிறது. மொழியின் ஆவணக் காப்பகமாக ஆழப்பட்டுக் கிடக்கிறது. மொழிதான் மனிதனுக்கான பிரச்சினை என்றுகூடச் சாராம்சப்படுத்திவிட முடியும்போல் தோன்றுகிறது" என்கிறார்.

மொழியைக் காரணமாக்கி மனிதர் ரத்தத்தைத் துடிப்புறச் செய்ய முடிகிறது. வன்முறைக்கும் உயிர்க் கொலைகளுக்கும் கூட இந்த மொழி அபிமானம் மனிதரைக் கொண்டுசெல்கிறது.

நமது மொழியைப் பேசாதவன் மீது அந்தரங்கத்தில் நமக்கொரு எதிர்ப்புணர்வு இருந்துகொண்டேயிருக்கிறது. அவனை நம்மிலிருந்து விலக்கிவிட நமது மொழி மீதான அபிமானத்தைக் கவசமாக உயர்த்திப் பிடித்துக் கொள்கிறோம். எந்த பாதகமும் அற்றது இயல்பானது என்று நாம் கருதுகிற மொழிப் பற்றானது, பிறரைச் சகிக்கமுடியா மனநிலைக்கு நம்மைத் தள்ளிச் சென்று விடுவது இவ்வாறுதான்.

இதைப் போலவேதான் இனஅபிமானம், தேசஅபிமானம், சாதி அபிமானம், மதஅபிமானம் எல்லாமே நம்மைப் பிறவற்றிலிருந்து தனிப்படுத்தி வன்முறைக்குத் தயாராக்கி வருவதைக் காண்கிறோம். இவற்றின் காரணமாகவே உலகில் நூற்றுக்கணக்கான போர்கள் காலம் காலமாக நடந்து வருகின்றன என்பதையும், அதன் காரணமாகவே லட்சக்கணக்கான கோடிக்கணக்கான மனிதர்கள் கொல்லப்பட்டு வருகிறார்கள் என்பதையும் நாமறிவோம்.

இதனால்தான், எந்த ஒன்றின் மீதும் கொள்ளும் அபிமானமே உலகின் துக்கங்களுக்கெல்லாம் காரணம் என்று புத்தர் சொல்லியிருக்க வேண்டும். இனமோ, மதமோ, மொழியோ எந்த ஒன்றின் மீதும் விமர்சனத்திற்கு அப்பாலான அபிமானம் வேண்டியதில்லை.

- ஆசிரியர்

# கூட்டமைப்பின் அமெரிக்க விஜயம் ரெலோ உறுப்பினர்கள் புறக்கணிப்பு

(சென்னை)

அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள தூதுக்குழுவில் கூட்டமைப்பின் பங்குதாரரான ரெலோவின் பிரதிநிதிகள் சேர்க்கப்படாததையிட்டு தமிழ்த் தேசிய கூட்டமைப்பினுள் கடும் வாக்கு வாதங்கள் இடம்பெற்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இன்று அதிகாலையில் அமெரிக்கா செல்லவுள்ள குழுவில் சமஷ்டிக்கட்சி, ஈ.பி.ஆர்.எல்.எப். ஆகியவற்றின் பிரதிநிதிகளே சேர்க்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

செல்வம் அடைக்கலநாதன், விநோநோகராதலிங்கம் ஆகியோர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட்டு வென்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆவர். இவர்களுக்கு இடம் தரத் தவறியமை பற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக்குழுத் தலைவர் ஆர்.சம்பந்தனிடம் முறையிடவுள்ளதாகவும் தெரியவருகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தூதுக் குழுவில் ஆர்.சம்பந்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன், மாவை சேனாதிராஜா, எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

கிலாரி கிளின்டன் தவிர வேறு யாரை இந்த தூதுக்குழுவினர் சந்திக்கவுள்ளனர் எனக் கேட்ட போது நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தொடர்புடைய சகலரையும் சந்திக்க முயல்வோம். ஆனால் சகலரும் நேரம் தருவரெனக் கூறமுடியாதெனவும் கூறினார்.

கிழக்கில் காணிப்பதிவு, குடியேற்றம், இராணுவத்தைக் குவித்தல் ஆகிய விடயங்கள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது எதிர்ப்பைத் தெரிவித்திருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கவலைகள் பற்றி யாவரும் அறிவர். இவை பற்றியே நாம் பேசுவோமென சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறினார்.

# சிறுநீரகம் பாதிக்கப்பட்ட கைதியை உடன் விடுவிக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

சுமார் 3 வருடங்களாக வழக்குத் தொடுக்கப்படாமல் கைதியாகவுள்ள 33 வயதான நபர் ஒருவர் இறுதிக்கட்ட சிறுநீரக செயலிழப்பினால் பாதிக்கப்பட்டுள்ளதாக ஹொங்கொங்கை தளமாகக் கொண்ட ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. மன்னார், திருக்கேதீஸ்வரத்தைச் சேர்ந்த இராசரத்தினம் ஜெகதீஸ்வரன் எனும் இந்நபர் வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகவும் தற்போது அவருக்கு சிறுநீரக கோளாறு காரணமாக கொழும்பிலுள்ள தேசிய வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சையளிக்கப்படுவதாகவும் ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையொன்றில்,

மன்னாரைச் சேர்ந்த ஜெகதீஸ்வரன் ஏனைய பலரைப்போல் புலிகளின் கட்டுப்பாட்டில் வசித்தவர். அவர் புலிகளினால் கட்டாய ஆட்சேர்ப்பின் காரணமாக பலவந்தமாக பயிற்சிக்கு உள்ளாக்கப்பட்டார். அவர் றனிதா ஜெகதீஸ்வரனை திருமணம் செய்தபின் அவருடன் வாழ்ந்தார். 2009 ஆம் ஆண்டு அரசாங்கப் படைகளுக்கும் புலிகளுக்கும் மோதல் தீவிரமடைந்ததையடுத்து நூற்றுக்கணக்கான பொதுமக்கள் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளிலிருந்து தப்பிச்செல்ல முயற்சித்தனர். எனினும் ஜெகதீஸ்வரனும் றனிதாவும் முள்ளிவாய்க்காலில் இருந்து தப்பிச் செல்ல முற்பட்ட போது ஜெகதீஸ்வரன் காயமடைந்தார்.

அவர். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் காப்பாற்றப்பட்டு திருகோணமலை ஆதார வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டார். சிகிச்சையின் பின் அவர் வைத்தியசாலையிலிருந்து விடுதலையானார். ஆனால் அவர் புல்மோட்டையில் வைத்து கைது செய்யப்பட்டு ஏனைய நூற்றுக்கணக்கானோருடன் பூஸா தடுப்பு முகாமுக்கு அனுப்பப்பட்டார். அவர் கைது செய்யப்பட்டமைக்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இறுதியாக வெலிக்கடை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டார். அங்கு சில மாதங்களுக்கு முன்னர் சுகவீனமுற்றார் என ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனது கணவர் சட்டவிரோதமான முறையில் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்க்பட்டிருப்பதாகவும் சிறுநீரக நோய்க்குள்ளான நிலையில் அவர் தடுத்துவைக்கப்பட்டிருப்பது சித்திரவதையாக அமைவதாகவும் ஜெகதீஸ்வரினின் மனைவி தெரிவித்ததாகவும் அவ்வறிக்கை தெரிவித்துள்ளது. சர்வதேச மற்றும் உள்ளூர் சட்டங்களை மீறும் விதமாக அப்பாவி நபர்கள் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்ட ஏராளமான சம்பவங்கள் குறித்துதான் அறிக்கையிட்டிருப்பதாக ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பலர் 2-3 வருடங்கள் தடுத்துவைக்கப்பட்டிருந்த பின்னர் வெவ்வேறு மேல் நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தப்பட்டதாகவும் அவ்வாணைக்குழு கூறியுள்ளது. அடிப்படையில் அவர்கள் அனைவரும் கடும் சித்திரவதைகளின் பின்னர் பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் விசாரிக்கப்பட்டனர் எனவும் ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# லிப்டில் துர்நடத்தை இளைஞனுக்கு சிறை

கொழும்பில் உள்ள நட்சத்திர ஹோட்டல் ஒன்றின் லிப்டில் ஏறிச் சென்ற இளம் பெண்ணுடன் அநாகரிகமான முறையில் நடந்து கொண்ட இளைஞர் ஒருவருக்கு கோட்டை நீதவான் ஒருவருட சிறைத் தண்டனை விதித்தார்.

இப் பெண் இந்த ஹோட்டலில் நிகழ்வு ஒன்றிற்காக வந்து லிப்டில் ஏறி மேல் மாடிக்குச் சென்றார். அப்போது லிப்டில் இப் பெண்ணுடன் காணப்பட்ட இளைஞர் அவருடன் பாலியல் சேஷ்டை புரிந்துள்ளார். இவருக்கு எதிராக லிப்டில் ஏறிச் சென்ற எட்டுப்பேர் சாட்சியம் அளித்தனர். விசாரணை முடிவில் கோட்டை நீதவான் லங்கா ஜயரட்ண மேற்படி சிறைத் தண்டனையையும் 1500 ரூபா அபராதமும் விதித்தார். அத்துடன் பெண்ணுக்கு 75 ஆயிரம் ரூபாவை நட்ட ஈடாகச் செலுத்துமா றும் உத்தரவிட்டார்.

சந்தேகநபர் ஆரம்ப விசாரணைகளில் நீதிமன்றத்துக்கு வந்தார் எனவும் பின்னர் வரவில்லை என்பதால் அவரைக் கைது செய்து நீதிமன்றில் ஆஜராக்குமாறும் நீதவான் பிடியாணை பிறப்பித்தார். சந்தேக நபர் இன்றி விசாரணை நடைபெற்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

# யுத்த காலத்திலும் சீரான சுகாதார சேவை

## சுகாதார அமைச்சர் பெருமிதம்

(கொழும்பு)

இலங்கையில் 30 வருட காலம் மோதல் இடம்பெற்ற பிரதேசங்களில் பயங்கரவாதிகளால் மக்களுக்கு பிரச்சினைகள் ஏற்பட்ட நிலையிலும் அப்பிரதேசங்களில் உள்ள வைத்தியசாலைகளுக்கு வசதிகளை பெற்றுத் தருவதை இலங்கை அரசாங்கம் ஒருபோதும் நிறுத்தவில்லை என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

சுகாதார துறைக்கு அழுத்தங்களை ஏற்படுத்தும் சமூக பிரச்சினைகள் தொடர்பான ரியோடி ஜெனய்ரோ நகரில் உலக மாநாடு கடந்த 19 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை நடைபெற்றது. இந்த மாநாட்டில் உரையாற்றிய போதே அமைச்சர் மைத்திரிபால சிறிசேன இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் அமெரிக்காவில் ஒரு நபர் 88 வயது வரை உயிர் வாழ்கிறார். அதேவேளை சோமாலியா மற்றும் குறைந்த வருமானம் பெறும் நாடுகளில் உள்ளவர்கள் 45 முதல் 51 வயது வரையே உயிர் வாழ்கின்றனர்.

30 வருட கால யுத்தத்தின் பின்னர் தற்போது இலங்கையில் பாரிய அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே நாட்டின் அனைத்து பிரதேசங்களிலும் சமமான சுகாதார வசதிகளை பெற்றுத்தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# அடிப்படை வசதியின்றி இயங்கும் நெல்லியடி பஸ்தரிப்பு நிலையம்

## சிரமத்தை எதிர்நோக்கும் பயணிகள்

(கரணவாய்)

நெல்லியடிப் பிரதேசத்தில் பஸ் தரிப்பிடம் இல்லாமையால் போக்குவரத்தை மேற்கொள்ளும் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடமராட்சிப் பிரதேசத்தின் மத்திய பகுதியாக விளங்கும் இப்பிரதேசத்தில் தற்போதுள்ள பஸ் தரிப்பு நிலையத்தில் கழிப்பிட வசதிகள் மற்றும் குடிநீர் வசதிகள் இல்லாமையால் பயணிகள் பெரும் அவஸ்தைக்குள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகிறது. குறித்த பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து நெல்லி யடிப் பிரதேச மக்கள் மட்டுமன்றி பிற பிரதேசங் களிலிருந்தும் அதிகளவான மக்கள் வந்து தமது பயணத்தை மேற்கொள்கின்றனர்.

இந்த நிலையில் தூர இடங்களிலிருந்து வந்து தமது பயணத்தை மேற்கொள்கின்ற மக்கள் இப் பஸ்தரிப்பு நிலையத்தில் தங்கி நின்று பயணம் செய்ய முடியாத நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதைவிட தற்பொழுது பெய்துவரும் கடும் மழையினால் குன்றும் குழியுமாகக் காணப்படும் பஸ்தரிப்பு நிலையத்தில் வெள்ளநீர் தேங்கி நிற்பது மக்களுக்குப் பெரும் இடையூறாக இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இவ்விடயம் குறித்து சம்பந்தப்பட்டோருக்கு பல முறை தெரிவித்தும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனப் பொதுமக்களின் நலனைக் கருத்திற் கொண்டு பெருகி வரும் வாகனப் போக்குவரத்துக்கு ஏற்ப ஒருங்கிணைந்த பஸ் நிலையம் ஒன்றை அமைக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்குமாறு இப பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (உ-18)

# நவீன கற்பித்தல் சாதனங்களை செயலமர்வில் பயன்படுத்த பணிப்பு

(வலிகாமம்)

ஆசிரியர்களிற்கான கருத்தரங்கும் செயலமர்வுகளின்போது வளவாளர்கள், நவீன கற்பித்தல் சாதனங்களைப் பயன்படுத்த வேண்டும் என வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் பணித்துள்ளார்.

வாரந்தோறும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்களிற்கு நடைபெறும் கூட்டத்திலேயே இப்பணிப்பை விடுத்துள்ளார்.

நவீன கற்பித்தல் சாதனங்களான, மல்டி மீடியா, ஓ.ஏ.பி. வீடியோ, சி.டி முதலான கற்பித்தல், சாதனங்களைப் பயன்படுத்தியே ஆசிரியருக்கான செயலமர்வை மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் பாடசாலையிலுள்ள நவீன கற்பித்தல் சாதனங்களைப் பயன்படுத்தி ஆசிரியர்கள் மாணவர்களிற்கு கற்பிக்க வழிகாட்டியாக அமையும்.

இத்தகைய கற்பித்தல் முறையே வினைத் திறன் மிக்க கற்பித்தலாக அமையும் என அவர் தெரிவித்தார். (06)

## கூட்டம்

(வடமராட்சி)

பருத்தித்துறை பிரதேச செயலக காணி பயன்பாட்டுத் திட்டமிடல் குழுக்கூட்டம் எதிர்வரும் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே, இக்கூட்டத்திற்கு உரிய திணைக்களத் தலைவர்கள், நகரசபை மற்றும் பிரதேச சபைச் செயலாளர்கள் உட்பட சகல கிராம அலுவலர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் ஆ. வரதீஸ்வரன் அறிவித்துள்ளார். (உ-116)

### உங்களுக்குத் தெரியுமா மாகாண மட்டப்போட்டி

(வலிகாமம்)

பாடசாலை மாணவர்களிடையே கோட்ட, வலய மட்டங்களில் நடத்தப்பட்ட "உங்களிற்குத் தெரியுமா" வினாடி வினாப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான மாகாண மட்டப் போட்டி எதிர்வரும் நவம்பர் மாதம் ஆறாம் திகதி கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வலய மட்டப் போட்டிகளில் பங்குபற்றி முதல் ஐந்து இடங்களையும் பெற்ற மாணவர்கள் இப்போட்டிகளில் பங்குபற்றவுள்ளனர். (06)

# பூகோளம் வெப்பமடைதலைத் தடுக்க காட்டு வளத்தினைப் பாதுகாப்போம்

## யாழ். மாவட்ட வனபரிபாலன திணைக்கள அதிகாரி

(அச்சுவேலி)

காட்டுவளத்தினை சிறப்பாகப் பேணிப் பாதுகாப்பதன் மூலம் சூழல் மாசடைதலில் இருந்தும் பூகோளம் வெப்பமாதலில் இருந்தும் இன்றைய உலகைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் என யாழ். மாவட்ட வனபரிபாலன திணைக்கள அதிகாரி எஸ். ரவிராஜ் தெரிவித்துள்ளார்.

வனபரிபாலனமும் மரநடுகையும் தொடர்பாக மாணவர்கள் மத்தியில் கருத்து வழங்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பூகோளம் வெப்பமடைதல் உலக ரீதியான பிரச்சினைகளில் இன்று பெரும் பிரச்சினையாக உள்ளது. இதனால், பல தீவுக்கூட்டங்கள் கடலில் மூழ்கிவிடக்கூடிய நிலை ஏற்படலாம். அது மட்டுமன்றி நீர், நிலம், வளி ஆகியனவும் அதிகளவு மாசடைய நேரிடுகின்றது.

இவற்றிலிருந்து நாம் விடுதலை பெற வேண்டுமாயின் மரங்களை நாட்டி பராமரிப்பதன் மூலம் காட்டுவளத்தினையும் பெருக்கிக்கொள்ள வேண்டும்.

1881ஆம் ஆண்டு 84 வீதமாக இருந்த இலங்கையின் காட்டு வளம் இன்று 23 சதவீதத்திற்கும் குறைவாக உள்ளது. பல்வேறு தேவைகளுக்காக காடுகளை அழிப்பதில் மக்கள் காட்டும் கரிசனை காட்டு வளத்தினை மீள்நடுகை செய்வதில் காட்டுவதில்லை. இதனால் சுற்றாடல் மட்டுமன்றி சுற்றாடலில் உள்ள பிற விலங்குகளும் பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாகின்றன.

இதனால் காட்டுவாழ் உயிரினங்கள் அருகிச் செல்வதுடன் அழிவடையவும் நேரிடுவதுடன் சூழல் சமநிலையும் குழப்பமடைகின்றது.

இந்நிலை மாறி மீண்டும் பழைய நிலைக்குத் திருப்ப வேண்டுமாயின் காட்டு வளம் பெருக்கப்பட வேண்டும். இதற்காக மக்கள் மத்தியில் பல்வேறு விழிப்பூட்டும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதுமட்டுமன்றி வீடுகள் மற்றும் பொது இடங்கள் தோறும் மரங்கள் வளர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றார். (03)

## மீட்டல் கையேடுகள்

மாணவர்களின் விஞ்ஞான பாட அடைவு மட்டத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் அலகு மீட்டல் கையேடுகள், விஞ்ஞான செய்முறைக் கையேடுகள் மற்றும் பயிற்சி வினாத் தாள்கள் என்பன வழங்கப்பட்டு வருகின்றன.

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகள் வலயக் கல்வி அலுவலக விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளரிடம் புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் மேற்படி கையேடுகளைப் பெற்று அடுத்துவரும் பாடசாலை நாட்களில் வகுப்பறைக் கற்பித்தலில் பயன்படுத்தி மாணவர்களின் விஞ்ஞான பாடப் பெறுபேற்றை உயர்த்த உழைக்குமாறு கேட்கப்படுகிறது. (10)

# வீடுத்திட்ட செயற்பாடுகளை அதிகாரிகள் பார்வையிட்டனர்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் மக்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுத்திட்ட செயற்பாடுகளை நிறுவன அதிகாரிகள் அண்மையில் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

குறித்த மாவட்டத்தில் ஆனந்தபுரம் அம்பாள்குளம் ஆகிய பகுதிகளில் மீளக்குடியமர்ந்துள்ள வறுமைக்கோட்டிற்குட்பட்ட நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு மேற்படி நிறுவனத்தினால் வீட்டுத்திட்ட வசதிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

இதில் கட்டி முடிக்கப்பட்ட மற்றும் பூர்த்தியடையும் நிலையிலுள்ள வீடுகளை நிறுவன அதிகாரிகள் பார்வையிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (77)

# நிவாரணம், வீட்டுத் திட்ட வசதியின்றி நெடுங்கேணி மதியாமடு கிராம மக்கள்

(யாழ்ப்பாணம்)

நெடுங்கேணி மதியாமடு கிராம மக்கள் அடிப்படை வசதிகள் எதுவுமின்றி நாளாந்தம் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பிரதேச மக்கள் மீள்குடியமர்ந்து இரண்டு வருடங்கள் கழிந்துள்ள நிலையில், நிவாரண உதவிகள், வீட்டுத் திட்ட வசதிகள் இல்லாமல் மழை காலங்களில் சிரமத்துடன் வாழ்ந்து வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

வன்னி மாவட்டத்தில் பல்வேறு நிறுவனங்களினால் மீள்குடியமர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்டுவரும் இந்த வீட்டுத் திட்ட வசதிகள் தமக்கு இதுவரை வழங்கப்படவில்லை. தற்போது ஐ.ஓ.எம். நிறுவனத்தினால் தற்காலிக வீடு அமைத்து வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

இதைவிட சில நிறுவனங்களினால் வழங்கப்படும் உதவிகள் பாரபட்சமான முறையில் வழங்கப்படுவதாகவும், மிக வறுமையான குடும்பங்கள் இதில் விலக்களிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இப்பிரதேசத்தில் குடிநீர், மலசலகூட வசதிகளும இல்லை. அத்துடன் நிவாரணங்களும் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் வாழ்வாதார நடவடிக்கைளில் தாம பெரும் கஷ்டங்களை அனுபவிப்பதாக இந்த மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் குறித்து அரச அரச சார்பற்ற நிறு வனங்கள் பாரபட்சம் காட்டாது வறுமை நிலையிலுள்ள தமக்கு அடிப்படை வசதிகளைப் பெற்றுத் தர நடவடிக்கை எடுக்குமாறு இப பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (77)






பூநகரி மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற வித்தியாலய சாரணர்களுக்கான சின்னஞ்சூட்டும் நிகழ்வும் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் 661ஆவது படைப் பிரிவின் தளபதி கேணல் ஜெயசூரிய மாணவன் ஒருவருக்கு உபரணங்கள் வழங்குவதையும், சின்னஞ்சூட்டப்பட்ட மாணவர்களுடன் விருந்தினர்கள், சாரண ஆசிரியர்கள் நிற்பதையும் காணலாம். (112)



பொலிகண்டி கலை இலக்கிய மொழி நூலக திறப்பு விழா அண்மையில் பொலிகண்டி கந்தவன கல்யாணவேலன் தேவஸ்தானத்தில் நடைபெற்ற போது தேவஸ்தான பிரதம குரு வைத்தியநாதக் குருக்கள் மாணவனுக்கு பரிசில் வழங்குவதைக் காணலாம். (116)



இணுவில் அறநெறிப்பாடசாலைச் சமூகமும் பொது மக்களும் இணைந்து நடத்திய செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகனுக்கானபாராட்டு விழா நிகழ்வில் அண்ணா நிறுவன உரிமையாளர் பொ.நடராசா நினைவுக் கேடயம் வழங்கி கௌரவிப்பதைக் காணலாம். (44)

## பனம் விதை நாட்டல்

(முழங்காவில்)

பனை அபிவிருத்திச் சபையின் ஒழுங்குபடுத்தில் பல்லவராயன்கட்டுப்பகுதியிலும், கரியாலை நாகபடுவான் குடியேற்றத்திட்டத்தில் பத்தாயிரம் பனம்விதைகள் நாட்டும் பணி ஆரம்பிக்கப்பட்டு நிறைவுபெற்றுள்ளது. கிளிநொச்சி மாவட்ட பனைஅபிவிருத்திச் சபை இணைப்பாளர் செ. ஜெகநாதனின் ஆதரவுடன் அப்பகுதி கிராம முன்னேற்றச்சங்கத்தினர் இப்பணியை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (112)

## விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளின் சுகாதாரக் கழகங்களில் உள்ள தெரிவு செய்யப்பட்ட எழுபது ஆசிரியர்களிற்கான HIV தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடைபெறவுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர், ஆ.இராஜேந்திரன் அறிவித்துள்ளார்.

இக்கருத்தரங்கு எதிர்வரும் 29ஆம் திகதி சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஒழுங்கு படுத்தலின் கீழ் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (06)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(25.10.2011 –செவ்வாய்க்கிழமை)

பஞ்சாங்கக் குறிப்புக்கள்
கர வருஷம்
ஐப்பசி 08 ஆம் நாள்.
இராகுகாலம் 03.02–4.32, சுபநேரம் 10.32 –12.02வரை
நட்சத்திரம்: அத்தம் பி.இ 12.41 வரை
திதி: திரயோதசி காலை 7.17 வரை
சதுர்த்தசி பி.இ.4.56 வரை
இரவு சந்திரோதயத்தில் நாக சதுர்த்த சிஸ்நானம்

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:**– பணக் கஷ்டம், குடும்பத்தில் குழப்பநிலை, நண்பர் வரவு, புதிய நபர் சந்திப்பு, வீண் அலைச்சல்.

**ரிஷபம:**– குடும்பத்தில் மகிழ்ச்சி, பணமவரும், அயல்வீடு ப[illegible], தேவையற்ற பேச்சு, வீண் வார்த்தைப் பிரயோகம்.

**மிதுனம் :**–காசுக்கஷ்டம், குடும்பத்தில் கவலை, தெய்வதரிசனம், சுற்றத்தார் ஆதரவு, உடம்பு பலவீனம்.

**கடகம்:**– குடும்பத்தில் குதூகலம், காசுவரும், புதியபொருள் சேரல், வீண் வதந்தி, அயலார் உதவி.

**சிம்மம்:**– பணக்கஷ்டம், நண்பர், வருகை, கடன் படுதல், குடும்பத்தில் குழப்பநிலை, வீண் கோபம்.

**கன்னி :**– குடும்பத்தில் மகிழ்ச்சி, பணம் வரும், நண்பர் வருகை, சகோதரர் பாசம், பெரியோர் பாராட்டு.

**துலாம் :**–காசுக்கஷ்டம், கடன்படுத்தல், வீண் கோபம், மனக் கவலை, அற்பர் நேசம்.

**விருச்சிகம்:**– குடும்பத்தில் குதூகலம், பணம் வரும் அதிர்ஷ்டம், வரலாம் பிணக்குத் தீர்த்தல், உடம்புசுகம்.

**தனுசு:**– பணம் வரும், குடும்பத்தில் மகிழ்ச்சி,நண்பர் வரவு, வெளியார் கவலை, நினைத்ததைச் சாதித்தல்.

**மகரம:**– குடும்பத்தில் கவலை, பணக் கஷ்டம், கடன் படுத்தல், வீண் பேச்சு, உடம்பு பலவீனம்.

**கும்பம் :**– காசுக் கஷ்டம், குடும்பத்தில் குழப்பநிலை, வீண் கோபம், நண்பர் உதவி, உடம்பு சுகம்.

**மீனம் :**– குடும்பத்தில் மகிழ்ச்சி, காசுவரும் நண்பர் உதவி உடம்பு சுகம், விபத்து வரலாம்.

# மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும்

**- நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின்**

(யாழ்ப்பாணம்)

கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான பல்வேறு வேலைத்திட்டங்கள் எம்மால் முன்னெடுத்துச் செல்லப்படும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தீவகப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வேலணை துறையூரில் புதிதாக அமைக்கப்பட்ட ஐஸ்கட்டி தொழிற்சாலை திறப்பு விழா நிகழ்வில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், தீவக பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதில் நாமும் கௌரவ ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் பல்வேறு வகையான திட்டங்களை வகுத்து செயலாற்றி வருகின்றோம். அவ்வாறே தீவக மக்களும் எம்மோடு கைகோர்த்து நிற்பதுடன் அரசாங்கத்திற்கு ஆதரவான கொள்கையுடன் செயற்பட்டு வருகின்றார்கள்.

கடந்த 30 வருடத்திற்கும் மேலாக நீடித்த போரினால் மிகவும் பாதிக்கப்பட்டவர்கள் கடற்றொழிலாளர்களே. கடல் வலய தடை பாஸ் நடைமுறை என்பவற்றால் மிக மோசமாக பாதிக்கப்பட்டார்கள். ஒரு குறிப்பிட்ட கடல் எல்லைக்குள்ளேயே மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் இருந்தது. ஆனால் இன்று அந்த நிலை மாற்றமடைந்து கடற்றொழிலை சுதந்திரமாக மேற்கொள்ளக் கூடிய சூழல் பிறந்துள்ளது.




எனவே எமது தீவக மக்களாகிய நீங்கள் எம்மோடு ஒன்றாக இணைந்து கைகோர்த்து நிற்கின்றீர்கள். அவ்வாறே பிரதேச வேறுபாடு இன்றி ஒற்றுமையுடன் செயலாற்றுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வேலணை பிரதேச சபைத் தலைவரும் ஈ.பி.டி.பி.யின் வேலணை பிரதேச அமைப்பாளருமான சிவராசா (போல்) கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சின் அலுவலர்கள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாச பிரதிநிதிகள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## இறங்கு துறை ஒன்றை அமைக்குமாறு கோரிக்கை

(யாழ். நிருபர்)

வலிகாமம் வடக்கு சேந்தாங்குளம் பகுதிகளில் மக்கள் மீளக்குடியமரத் தொடங்கியுள்ள போதிலும் இவர்களுக்கான அடிப்படை வசதிகள் பற்றாக் குறையாகவே உள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இப்பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்துள்ள கடற்றொழிலாளர்கள் தமது தொழில் விருத்திக்குத் தேவையான வளங்களைப் பெற்றுத்தரவேண்டுமெனவும் தமது மீன்பிடிப்படகுகளை நிறுத்துவதற்கு பாதுகாப்பான இறங்கு துறை ஒன்று அமைக்கப்படவேண்மெனவும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (10)

## புங்குடுதீவு பிரதேச அபிவிருத்தி மக்களுடன் கலந்துரையாடல்

(தீவகம்)

புங்குடுதீவு பிரதேசத்திற்கு கடந்த சனிக்கிழமை விஜயம் மேற்கொண்ட வேலணை பிரதேச சபைத்தலைவர் சி. சிவராசா அப்பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பாக அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடினார்

இதில் இப்பிரதேசத்தில் மேற்கொளளப்பட்டுவரும் வீதிப் புனரமைப்பு மற்றும் புனரமைக்கப்படவுள்ள வீதிகள் தொடர்பாகவும் கலந்துரையாடினார்.

இதன்போது சபைத்தலைவர் புங்குடுதீவு பிரதேசத்துக்கான அபிவிருத்தித் திட்டங்கள் மிக விரைவில் செயற்படுத்தப்படும் என தெரிவித்ததுடன் நயினாதீவு பிரதேச அபிவிருத்தி தொடர்பாகவும் கவனத்தில் எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார். (85)

## பிரஜாவுரிமை பத்திரம் வழங்கல்

(யாழ். நிருபர்)


இந்தியாவில் பிறந்த பிள்ளைகளுக்கான பிரஜாவுரிமைப் பத்திரங்களை வழங்கும் நிகழ்வு கடந்த வாரம நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட மேலதிக மாவட்ட அரசாங்க அதிபா திருமதி ரூபினி வரதலிங்கம் இந்தியாவில் பிறந்த பிள்ளைகளுக்கான பிரஜாவுரிமைச் சான்றிதழ்களை வழங்கினார்.

நடமாடும் சேவையில் பெற்றுக் கொள்ளப்பட்ட இந்தியாவில் பிறந்த பிள்ளைகளுக்கான விண்ணப்பப் படிவங்களின் பேரிலேயே பிரஜாவுரிமைச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. (10)

# காரைநகர் பிரதேசத்தில் பெரும்போக செய்கை ஆரம்பம்

## கட்டாக்காலி மாடுகளையும் கட்டுப்படுத்த நடவடிக்கை



(யாழ். நிருபர்)'

காரைநகரில் பெரும்போக நெற்செய்கைக்கான ஆரம்ப நடவடிக்கைகளில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். அண்மையில் பருவமழை ஆரம்பித்த நாளிலிருந்து வயல்களில் உழுதல், பசளையிடல், வரம்பு கட்டுதல் போன்ற வேலைகள் நடைபெற்று வருகின்றன. வெள்ளம் தேங்கி நிற்கக்கூடிய பள்ளக் காணிகளில் விதைப்பு நடைபெறுகிறது.

கடந்த காலங்களில் கட்டாக்காலி கால்நடைகளினால் விவசாயிகள் பெரும் பாதிப்பினை எதிர்நோக்கியிருந்தனர். இம்முறை காரைநகர் பிரதேச சபை கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

கடந்த 20 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் கட்டாக்காலி கால்நடைகளைப் பிடிக்கம் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக காரைநகர் பிரதேச சபையின் உபதலைவர் சந்திரசேகரம் துர்க்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கால்நடை வளர்ப்போர் தமது ஆடு, மாடுகளை கட்டிவளர்க்க வேண்டும். வயல்களில் அத்துமீறிவரும் கால்நடைகள் கிராமத்தில் கால்நடை பிடிப்போரால் பிடிக்கப்படும். கட்டாக்காலி கால் நடைகளைப் பிடிப்பதற்கு 9 கிராமசேவையாளர் பிரிவிலும் 27 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் கிராம சேவையாளர்களின் உதவியுடன் கட்டாக்காலி கால்நடைகளைப் பிடிக்கும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

பிடிக்கப்படும் கால்நடைகள் பத்து நாட்களுக்குள் உரிமையாளர்களினால் உரிமை கோரப்படாது விட்டால் அவை பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (10)

# ஆவரங்கால் இந்து இளைஞர் சம்பியன்




படம் : தயாளபாலன்

சம்பியனான ஆவரங்கால் இந்து இளைஞர், இரண்டாமிடத்தைப் பெற்ற ஆவரங்கால் மத்தி கழகங்களுக்கு கிண்ணங்கள் வழங்கப்பட்டபோது...

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட மாவட்ட மட்ட கரப்பந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை ஆவரங்கால் இந்து இளைஞர் அணி கைப்பற்றிக் கொண்டது.

இப்போட்டி மல்லாகம் ஸ்ரீமுருகன் விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் இரவு மின்னொளியில் இடம்பெற்றது.

இதில் ஆவரங்கால் மத்தி அணியும், ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும் மோதின. மூன்று செட்களைக் கொண்ட இத்தொடரின் முதலிரு செட்களையும் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி கைப்பற்றி முன்னிலையிலிருந்தது. இந் நிலையில் மூன்றாவது செட்டை ஆவரங்கால் மத்தி அணி கைப்பற்றிக் கொண்டது.

இதன் மூலம் அடுத்த இரு செட்களையும் கைப்பற்ற இரு அணிகளும் போராடும் என ரசிகர்களால் எதிர்பார்க்கப் பட்டது. இதில் சிறப்பான ஆட்டத் திறனை வெளிப்படுத்திய ஆவரங்கால் இந்து இளைஞர் அணி மூன்றாவது செட்டைக் கைப்பற்றியது. இறுதியில் 3-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்ற ஆவரங்கால் இந்து இளைஞர் அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

தொடர்ந்து நடைபெற்ற மூன்றாமிடத்திற்கான போட்டியில் காங்கேசன்துறை ஐக்கியம் அணியும், அச்சுவேலி ஸ்ரார் அணியும் மோதின.

இதில் காங்கேசன்துறை ஐக்கியம் அணி 3-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக்கொண்டது.

இறுதிப் போட்டியின் ஆட்டநாயகனாக ஆவரங்கால் இந்து இளைஞர் அணியைச் சேர்ந்த ஜனகனும், தொடர் நாயகனாக ஆவரங்கால் மத்தி அணியைச் சேர்ந்த சிவசொருபனும் தெரிவானார்கள். (93, 118)

# இன்றைய ஆட்டம்

(யாழ்ப்பாணம்)

சென் பற்றிக்ஸ் கல்லூரி மற்றும் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணிகளுக்கிடையிலான நட்பு ரீதியான கால்பந்துப் போட்டி இன்றைய தினம் நடைபெறவுள்ளது.

ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள இப்போட்டி இன்றைய தினம் 2.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதில்14, 16, 18, 20 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் போட்டிகள் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கால்பந்தாட்டத்தில் இரு கல்லூரி அணிகளும் பலம் வாய்ந்த அணிகள் என்பதால் இன்றைய ஆட்டங்கள் ரசிகர்களுக்குப் பெரு விருந்தாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (93)

விளையாட்டுச் செய்திகள்

# மாவட்ட மட்ட கூடைப்பந்து நாளை அரையிறுதிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் கூடைப்பந்தாட்டப் போட்டித் தொடரின் ஆண்களுக்கான அரையிறுதி ஆட்டங்களுக்கு சென்றலைஸ் சொக்ஸ், பற்றிசியன்ஸ், கே.கே.எஸ். ஜொலிஸ்ரார் அணிகள் தகுதி பெற்றுள்ளன.

சர்வதேச லயன்ஸ் கழகம் 301ஏ அனுசரணையுடன் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்துடன் இணைந்து நடத்தும் மாவட்ட மட்ட கூடைப்பந்தாட்டப் போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்று வருகின்றது.

இதன் காலிறுதி ஆட்டங்கள் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இரண்டாவது காலிறுதிப் போட்டியில் காங்கேசன்துறை ஐக்கியம் அணியும், ஜொலிஸ்ரார் அணியும் மோதின. இதில் காங்கேசன்துறை ஐக்கியம் அணி 54-48 புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற மூன்றாவது காலிறுதிப் போட்டியில் சென்றலைஸ் புளூஸ் அணியும், சென்றலைஸ் சொக்ஸ் அணியும் மோதின. இதில் 81-69 என்ற புள்ளிகள் அடிப்படையில் சென்றலைஸ் சொக்ஸ் அணி வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற நான்காவது காலிறுதிப் போட்டியில் கே.சீ.சீ. அணியும் பற்றிசீயன்ஸ் அணியும் மோதின.

இதில் பற்றிசீயன்ஸ் அணி 65-60 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

நாளைய தினம் இரவு நடைபெறவுள்ள முதலாவது அரையிறுதிப் போட்டியில் சென்றலைஸ் சொக்ஸ் அணியை எதிர்த்து பற்றிசீயன்ஸ் அணியும், இரண்டாவது அரையிறுதியில் கே.கே.எஸ். அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் அணியும் மோதவுள்ளன.

இதேவேளை, பெண்களுக்கான முதற்சுற்றுப் போட்டிகளில் பமிலியன்ஸ், வட்டபிளாய் அணி வெற்றிபெற்றது.

இந்து மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து ஆடிய வட்டபிளாய் அணி 30-7 என்ற புள்ளிகள் அடிப்படையிலும்,

கே.சீ.சீ. அணியை எதிர்த்து ஆடிய பமிலியன்ஸ் அணி 29-17 என்ற புள்ளிகள் அடிப்படையிலும் வெற்றிபெற்றது.

இன்றைய தினம் நடைபெறவுள்ள பெண்கள் பிரிவுப் போட்டியில் கே.சீ.சீ. அணியை எதிர்த்து வட்டபிளாய் அணி மோதவுள்ளது. (93)

# கிண்ணம் வென்றது சென்சேவியர்



(நெல்லியடி)

பருத்தித்துறை லீக் அணிகளுக்கிடையில் இடம்பெற்ற கால்பந்தாட்டத் தொடரில் சக்கோட்டை சென்சேவியர் அணி சம்பியனாகியுள்ளது.

கரவெட்டி கலட்டி ஐக்கியம் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட இக் கால்பந்துப் போட்டி நேற்று முன்தினம் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் கச்கோட்டை சென்சேவியர் அணியும், கரவெட்டி நவசக்தி அணியும் மோதின. முற்பாதி ஆட்டத்தில் முழுமையாக ஆதிக்கம் செலுத்திய சென் சேவியர் அணி 2-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

பிற்பாதி ஆட்டம் ஆரம்பமாகி சூடு பிடிக்கத் தொடங்கியிருந்தபோதிலும் இரு அணிகளாலும் கோல் எதனையும் போட முடியவில்லை. இருப்பினும் பிற்பாதி ஆட்டத்தில் 55ஆவது நிமிடத்தில் கரவெட்டி நவசக்தி வீரர் ஒரு சிறப்பான கோல் ஒன்றைப் போட்டார். இதனைத் தொடர்ந்து ஆட்டம் மேலும் விறுவிறுப்பாக போட்டி நிறைவுக்கு வந்தது. இதில் சென்சேவியர் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்போட்டியில் ஆட்டநாயகனாக சென்சேவியர் அணி வீரர் கியூட் பசில்ராஜ் தெரிவானார். (12)

# ருவென்ரி 20 கிரிக்கெட் கிளிநொச்சி ம.வி. வெற்றி

(சுன்னாகம்)

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணிக்கெதிரான நட்புறவு ருவென்ரி 20 போட்டியில் கிளிநொச்சி மகா்வித்தியாலய அணி ஒன்பது ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

கிளிநொச்சி மகா வித்தியாலயம், சுன்னாகம் ஸ்கந்தவரோயாக் கல்லூரியின் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் இடம்பெற்ற இப்போட்டி அண்மையில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய கிளிநொச்சி ம.வி. அணி 20 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 91 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டிலக்சன் 29 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் சிறிகுமரன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு ஆடிய ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி 20 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 82 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் தனுசன் 17, டிலக்சன் 14 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கஜீவன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

ஏற்கனவே, இரு அணிகளுக்கிடையில் நடைபெற்ற ஒரு நாள் போட்டியிலும் கிளிநொச்சி ம.வி. அணி வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# 16 வயதுப் பிரிவில் மத்திய கல்லூரி சம்பியன்



(யாழ்ப்பாணம்)


யாழ். கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான 16 வயதுப் பிரிவு கால்பந்துப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணி சம்பியனாகியுள்ளது. யாழ். கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான கால்பந்துப் போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வந்தது.

இதில் 16 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியும், மூன்றாமிடத்திற்கான போட்டியும் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன் இறுதிப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணியும், நாவாந்துறை ஆர்.சி. அணியும் மோதின. ஆரம்பம் முதலே சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய யாழ். மத்திய கல்லூரி அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது.

தொடர்ந்து நடைபெற்ற மூன்றாமிடத்திற்கான போட்டியில் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய அணியும், சென் பற்றிக்ஸ் கல்லூரி அணியும் மோதின. இதில் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. (20)

# கிண்ணம் வென்றது போபண்ணா ஜோடி



(ஸ்டாக்ஹோம்)

சுவீடனின் ஸ்டாக்ஹோம் நகரில் நடந்த சர்வ தேச ரென்னிஸ் போட்டித் தொடரின் ஆண்கள் இரட்டையர் பிரிவின் இறுதி ஆட்டத்தில் இந்தியா வின் ரோகன் போபண்ணா- பாகிஸ்தானின் குரேஷி ஜோடி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

ஸ்டாக்ஹோமில் நேற்று முன்தினம் நடை பெற்ற இந்த இறுதிப் போட்டியில் பிரேசிலின் மார்சிலோ மெலோ-புருனோ சோரெஸ் இணையை ரோகன் போபண்ணா-குரேஷி ஜோடி சந்தித்தது.

இதில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத் திய போபண்ணா-குரேஷி ஜோடி 6-1, 6-3 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கோப்பையை தட்டிச் சென்றது. அவர்கள் 57 நிமிடத்திற்குள் ஆட்டத்தை முடி வுக்கு கொண்டு வந்தனர். இந்த சீசனில் போபண்ணா-குரேஷி கூட்டணி பெற்ற 2ஆவது ஏடிபி பட்டம் இதுவாகும்.

# ஐந்து ஆண்டுகளின் பின்னர் டெஸ்ட் அணியில் ருடொல்ப்

(கேப்டவுன்)

அவுஸ்ரேலியாவுடனான 2 டெஸ்ட் போட்டிகளுக்கு மான தென்னாபிரிக்க அணியில் 5 ஆண்டுகளின் பின் ஆரம்பத் துடுப் பாட்ட வீரர் ஜக்ஸ் ருடொல் பிற்கு இடம் கிடைத்துள்ளது.

அவுஸ்ரேலிய - தென்னா பிரிக்க அணிகளுக்கு இடையி லான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் வரும் நவம்பர் 9ஆம் திகதி ஆரம்ப மாகவுள்ளது. இந்தத் தொடருக் கான 14 பேர் கொண்ட தென்னா பிரிக்க அணி அறிவிக்கப் பட் டுள்ளது. இதில் ஸ்மித் அணித் தலைவராக செயற்படவுள்ள தோடு சுழற்பந்து வீச்சாளர் இம் ரான் தாஹிர், சகல துறை வீரர் வெர்னொன் பிளெண்டர் இணைக கப்பட்டுள்ளனர்.

எனினும் கடைசியாக கடந்த ஜனவரி மாதம் நடந்த இந்தியா வுடனான டெஸ்ட் போட்டியில் விளையாடிய அணியில் இடம் பிடித்திருந்த வெயின் பார்னல், ரியான் மெக்லரன், அல்லிரோ பீறறர்ஸன் ஆகியோருக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை.

ஆனால் கடைசியாக கடந்த 2006ஆம் ஆண்டு தென்னா பிரிக்காவுக்காக டெஸ்ட் போட்டி யில் விளையாடிய ஜக்ஸ் ருடொல்ப் அணியில் சேர்க்கப் பட்டுள்ளார்.

அணி விபரம் கிராம் ஸ்மித் (தலைவர்), ஏ.பி. டிவிலியர்ஸ் (உபதலைவர்), ஹாஷிம் அம்லா, மார்க் பௌச்சர் (வி.கா.), ஜே.பி. டுமினி, போல் ஹரிஸ், இம்ரான் தாஹிர், ஜக் கலிஸ், மோர்னி மோர்கல், வர்னோன் பிலெண்டர், பிரின்ஸ், ஜக்ஸ் ருடொ ல்ப், டெல் ஸ்டைன், லொன் வலோ செட்சோப்.



மொஸ்கோவில் நடைபெற்ற கிரம்ளின் ரென்னிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவில் சம் பியன் பட்டம் வென்ற சுலோவோக் கியாவின் சிபுல்கோவா மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதைக் காணலாம்.

# அமெரிக்க வீராங்கனை நீச்சல் போட்டியில் சாதனை



(பெர்லின்)

அமெரிக்க நீச்சல் வீராங்கனை மெலிஸ்ஸா பிரான்க்லின் பெர்லின் உலகக் கிண்ண நீச்சல் போட்டியில் புதிய உலக சாதனை படைத்தார்.

பெண்களுக்கான 200 மீற்றர் பாக்ஸ்ட் ரோக் நீச்சல் போட்டியை 2 நிமிடம் 00.03 வினாடிகளில் முடித்தே அவர் புதிய உலக சாதனை படைத்தார் முன்னதாக கடந்த 2009ஆம் ஆண்டு ஜெர்மனியில் நடந்த இந்த பெர்லின் உலகக் கிண்ண போட்டி யில் ஜப்பான் வீராங் கனை ஷிஹோ சகாய் 2 நிமி டம் 0.15 வினாடி களில் முடித்ததே சாதனை யாக இருந்தது.

இதன்படி உயர் தொழில்நுட்பத்திலான நீச்சல் உடைக்கு கடந்த ஆண்டு ஆரம்பத்தில் தடைவிதிக் கப்பட்டதன் பின் நீச்சல் அரங்கில் பதிவான முதல் உலக சாதனை இதுவாகும்.

16 வயதான மெலிஸ்ஸா பிராங்க் கடந்த ஜூலையில் சீனாவில் நடந்த உலக சம்பியன் நீச்சல் போட்டியில் மூன்று தங்கப் பதக்கங்களை வென்றவராவார்.

# வீதி விபத்தில் 5 மரதன் வீரர்கள் பலி


(ஜொகனஸ்பெர்க்)

தென்னாபிரிக்காவில் மரதன் ஓட்டப்பந்தயத் திற்காக பயிற்சி எடுத்த, 5 ஓட்டப்பந்தய வீரர்கள் வீதி விபத்தில் பலியாகியுள்ளனர்.

இதுபற்றி அந்நாட்டின் போக்குவரத்துத் துறை அமைச்சர் சிபுசிசோ டெபிலி தெரிவித்ததாவது, அடுத்த மாதம் நடைபெறும் மரதன் போட்டியில் பங்கேற்க சாலையில் ஓடி பயிற்சி எடுத்துக் கொண் டிருந்த 6 தென்னாபிரிக்க மரதன் ஓட்டப்பந்தய வீரர்கள் மீது குடிபோதயில் இருந்த ஓட்டுனரால் தாறுமாறாக ஓடிய வாகனம், வீரர்கள் மீது மோதி யதில், இதில் 5 வீரர்கள் இறந்ததாகவும், ஒருவர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெறுவதாகவும் தெரிவித்தார். சம்பவம் விபத்தாக கருதப்பட்டாலும், ஓட்டுனர் குடிபோதயில். இருந்த தால், அவர் மீது கொலைக் குற்றம் சுமத்த வேண் டும எனறார்.

சில ஆண்டுகளுக்கு முன் இதேபோல் சாலை விபத்தில், டிரக் ஒன்று மோதி ஒரு வீரர் உயிரிழந் துள்ளதால், இந்தச் சம்பவம் குறித்து தீவிரமாக விசா ரணை நடத்தப்படும் என்றும், வீரர்களின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது அது, மிகுந்த துயரத்தை தருவதாகவும் அந்நாட்டின் ஒலிம்பிக் கமிட்டி தலைவர் கிடியன் சாம் தெரிவித்துள்ளார்.

# பந்தய விபத்தில் இத்தாலி வீரர் பலி



(செபாங்க்)

மலேசியாவில் நடந்த பைக் ரேஸ் விபத்தில் இத் தாலி வீரர் பரிதாபமாக இறந்தார். ஏராளமான ரசிகர்கள் மத்தியில் நடந்த இந்த விபத்து அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

மலேசியாவின் செபாங்க் நகரில் மலேசியன் கிராண்ட் பிரிக்ஸ் மோட்டார் சைக்கிள் பந்தயம் நேற்று முன்தினம் நடந்தது. உலகின் முன்னணி வீரர்கள் பலர் பங்கேற்றனர். போட்டியை காண ஏராள மான ரசிகர்கள் அரங்கத்தில் கூடியிருந்தனர். 21 சுற்றுகள் கொண்ட இப்போட்டி விறுவிறுப்புடன் தொடங்கியது. வீரர்கள் அசுர வேகத் தில் மோட்டார் சைக்கிளில் பறந்தனர்.

2ஆவது சுற்றின் போது, இத்தாலி வீரரான ஹோண்டா அணி யின் சைமன்செல்லி, யமஹா அணியின் காலின் எட்வர்ட்ஸ், வலன்டினோ ரோஸி ஆகியோரை முந்திச் செல்ல முயன்றார். அப்போது, எதிர்பாராதவிதமாக மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டன. இதில், கீழே விழுந்த சைமன்செல்லி மீது மோட்டார் சைக்கிளில் ஏறியதால் ஹெல்மட் உடைந்தது. அதனால் தலை, கழுத்து பகுதியில் பலத்த காயமடைந்தார். இதே போல், எட்வர்சும் கீழே விழுந்து படுகாயமடைந்தார். இதை நேரில் பார்த்த ரசிகர்களும், டிவியில் ரேசை பார்த்துக் கொண்டிருந்தவர்களும் அதிர்ச்சியில் உறைந்தனர்.

உடனடியாகப் போட்டி இரத்து செய்யப்பட்டு, 2 வீரர்களும் மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். அங்கு சிகிச்சை பலனின்றி சைமன்செல்லி இறந்தார். எட்வர்ட்ஸ் தொடர்ந்து சிகிச்சை பெறுகிறார். 24 வயதாகும் சைமன்செல்லி 2008ஆம் ஆண்டு உலக சம்பியன் பட்டத்தை வென்றவர். இதற்கு முன், கடந்த 2003இல் ஜப்பான் கிராண்ட் பிரிக்ஸ் ரேசில் டைஜிரோ கடோவும், கடந்த ஆண்டு சோயா தோமிஜவாவும் விபத்தில் சிக்கிப் பலியாகினர்.

# கெய்ல் நீக்கம்



மேற்கிந்தியத்தீவு கிரிக்கெட் சபையுடனான 2011-12ஆம் ஆண்டுக்கான வீரர்கள் ஒப்பந் தத்தில் முன்னாள் அணித் தலை வர் கிறிஸ் கெய்ல், கிரோன் பொல்லார்ட் மற்றும் ட்வாயன் பிராவோ ஆகியோர் சேர்க்கப் படவில்லை.

எனினும் இரண்டு ஆண்டு தடைக்குப் பின் அணிக்கு திரும் பிய மாலன் சாமு வேல்ஸசிக்கு வீரர்கள் ஒப்பந்தத்தில் இடம் கிடைத்துள்ளது.

இதில் சிரேஷ்ட வீரர் சந்தர் போலுக்கு மாத்திரம் 'ஏ' தர ஒப்பந்தம் வழங்கப்பட்டுள் ளது. அணித் தலை வர் டெரன்சமி க்கு 'பி' தர ஒப் பந்தமே வழங்கப் பட்டுள்ளது.

லெண்ட்ல் சைம ன்ஸ், டினேஷ ராம்டின் ஆகி யோருக்கு மேற் கிந்திய சபை ஒப்பந்தத்தில் இடம் கிடைக்க வில்லை. கடந்த முறை ஐ.பி.எல். இல் விளை யாடுவதற்காக ஒப்பந்தத்தில் இருந்து விலகிக் கொண்ட கெய்ல், பொலார்ட் மற்றும் பிராவோ ஆகி யோர் இம்முறை சேர்க்கப்பட வில்லை.

# இரண்டாவது ஒரு நாள் தென்னாபிரிக்கா வெற்றி



(போர்ட்எலிசபெத்)

அவுஸ்ரேலிய அணிக் கெதிரான இரண்டாவது ஒரு நாள் போட்டியில் தென்னா பிரிக்க அணி 80 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.

தென்னாபிரிக்க, அவுஸ் ரேலிய அணிகளுக்கிடையி லான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் இரண்டாவது போட்டி நேற்று முன்தினம் போர்ட்எலிசபெத் தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய தென்னா பிரிக்க அணி 50 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக் களை இழந்து 303 ஓட்டங் களைப் பெற்றது. இதில் கலிஸ் 76, ஸ்மித் 57, டுமினி 56 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பொலிஞ்சர் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு ஆடிய அவுஸ்ரேலிய அணி 50 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 223 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் வோனர் 74, மைக் ஹசி 37 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மோர்கன் நான்கு, ஸ்டெயின் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக மோர்கன் தெரிவானார். இதன் மூலம் ஒரு நாள் போட்டித் தொடரில் இரு அணிகளும் ஒவ்வொரு வெற்றியைப் பதிவாக்கியுள்ளன.

# வலுவான நிலையில் பங்களாதேஷ் அணி

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் அணி வலுவான நிலையில் உள்ளது.

மேற்கிந்தியத்தீவு, பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி சிட்டகொங்கில் நடைபெற்று வருகின்றது.

இரண்டாம், மூன்றாம் நாள் ஆட்டங்கள் மழையால் பாதிக்கப்பட்ட நிலையில், நேற்றைய நான்காம் நாள் ஆட்த்தைத் தொடர்ந்த பங்களாதேஷ் அணி, ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 350 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்தியது. இதில் ரகீம் 68 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் பிசோ மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிவரும் மேற்கிந்தியத்தீவு கள் அணி, நேற்றைய நான்காம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்த வேளை ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 144 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் சந்தர்போல் 49 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் சன்னி நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

# வலுவடைகிறது புலனாய்வு சேவை ஆட்சேர்ப்பு நடவடிக்கை தீவிரம்

(கொழும்பு)

நாட்டின் புலனாய்வுச் சேவையை வலுவாக்கும் முகமாக பொலிஸ் திணைக்களம் புதிய ஆட்சேர்ப்புத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த விருக்கிறது.

ஏற்கனவே பொலிஸ் சேவையில் உள்ளவர்களிடமிருந்தே இந்த ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

இதனை முதற்கட்டமாக பொலிஸ் திணைக்களத்தின் அரச புலனாய்வு சேவைக்கு பொலிஸ் கான்ஸ்டபிள்களை இணைத்துக் கொள்வதற்கான எழுத்துப் பரீட்சை எதிர்வரும் 29ஆம் திகதி அன்று நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சை களனி குருகுல வித்தியாலயம் பெலியத்த றுஹுணு விஜயபா மகா வித்தியால்யம் அநுராதபுரம் நிவத்தக்க வேனிய மகாவித்தியாலயம் மற்றும் அநுராதபுரம் சுவர்ணபாலி மகளிர் கல்லூரி என்பவற்றில் காலை 10 மணி தொடக்கம் பகல் 12 மணிவரை இடம்பெறவுள்ளது.

பரீட்சைக்கு விண்ணப்பித்து தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான அனுமதிப் பத்திரங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிலையில் பரீட்சை நடைபெறும் தினத்திற்கு முன்தினம் வரை அனுமதிப் பத்திரங்கள் கிடைக்காதவர்கள் 011-2430362 என்ற இலக்கத்திற்குத் தொடர்பு கொண்டு அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

# குறைவடையும் மழை வீழ்ச்சி சரிகிறது மின்சார உற்பத்தி

(கொழும்பு)

கடந்த 50 வருடங்களின் பின்னர் மின் உற்பத்தி நிலையங்களுக்கு அருகிலுள்ள நீரேந்து பிரதேசங்களில் ஏற்பட்டிருந்த வறட்சி காரணமாக நீர் மின் உற்பத்தி 10தொடக்கம் 15வீதம் குறைவடைந்துள்ளதாக இலங்கை மின்சார சபையின் தலைவர் பேராசிரியர் விமல தர்ம அபேவிக்ரம தெரிவிக்கிறார்.

எதிர்காலத்தில் மழை வீழ்ச்சி ஏற்பட்டால் மின் உற்பத்தியை அதிகரித்துக் கொள்ள முடியுமென அவர் தெரிவித்துள்ளார். நாட்டின் மொத்த மின்சார தேவையில் 40 வீதத்திற்கு மேல் நீர் மின் உற்பத்தியே மேற்கொள்ளப்படுவதாக சபையின் தலைவர் தெரிவிக்கிறார்.

நீரேந்து பகுதிகளில் போதியளவு நீர் சேருகின்ற பட்சத்தில் வறட்சியான கால நிலை நிலவுகின்ற மாதங்களில் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியுமென அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# இலங்கையின் இறையாண்மைக்கு கூட்டமைப்பு பெரும் அச்சுறுத்தல்

## போர்க்கொடி தூக்குகிறது ஹெலஉறுமய

(கொழும்பு)





**தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து இலங்கையின் இறையாண்மைக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் அமெரிக்காவும் இந்தியாவும் செயற்படுகின்றன. இதற்கு கூட்டமைப்பின் அமெரிக்க விஜயம் இதன் ஒரு கட்டமே யாகும். எனவே தமிழ்க் கூட்டமைப்பின் தேசத்துரோக செயல்களை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என அர சாங்கத்தின் பங்காளிக் கட் சியான ஜாதிக ஹெல உறுமய வின் பொதுச் செயலாளரும் அமைச்சரு மான சம்பிக்க ரண வக்க தெவித்துள்ளார்.**

கேணல் கடாபியின் கொலையுடன் உண்மையான போர்க் குற்றவாளிகள் யார்? என்பது வெளிப்பட்டுள்ளது. எனவே ஐ.நா. இலங்கைக்கு எதிராக செயற்படுவதை நிறுத்திவிட்டு அமெரிக்கா மற்றும் பிரிட்டன் போன்ற நாடுகளுக்கு எதிராக கடும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழு அமெரிக்காவுக்கு விஜயம் செய்வது. குறித்து கருத்து தெவிக்கையிலேயே அமைச்சர் சம்பிக்க ரணவக்க மேற்கண்டவாறு கூறியுள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பொறுத்தவரையில் புலிகளின் பிரிவினைவாதக் கொள்கையுடன் முன்னோக்கிச் செல்கின்றவர்கள் கடந்த காலத்திலும் தற்போதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நடவடிக்கைகள் நாட்டிற்கு அச்சுறுத்தலாகவே அமைந்துள்ளன. இவர்கள் தற்போது சர்வதேச நாடுகளுடன் இணைந்து இலங்கைக்கு எதிரான சதிகளில் ஈடுபட்டுள்ளனர்.

கூட்டமைப்பு, அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளுக்கு விஜயம் செய்து அரசியல் தீர்வு குறித்து பேச இருப்பதாகவும் குறிப்பாக ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனை சந்திக்க உள்ளதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன. உள்நாட்டு விவகாரங்களை வெளிநாடுகளில் பேசுவதற்கு உண்மையில் கூட்டமைப்புக்கு எந்த உரிமையோ அதிகாரமோ கிடையாது.

ஒரு அரசியல் கட்சியை அழைத்து இலங்கையின் தீர்வுகள் குறித்து அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கின்றன.

என்றால் அது நாட்டிற்கு எதிரான துரோகத்தனமாகும். அது மட்டுமின்றி இலங்கையின் இறையாண்மைக்கும் அச்சுறுத்தலான விடயமாகும்.

இலங்கைக்கு எதிரான நடவடிக்கைகளில் இந்தியா, அமெக்கா மற்றும் கனடா உட்பட மேற்குலக நாடுகள் மிகவும் தீவிரமாக செயற்படுகின்றன. போலிக்குற்றச் சாட்டுக் களை சுமத்தி விசாரணைகளை முன்னெடுப்பதே அவர்களின் நோக்கம். இதற்கு உதவி ஒத்தாசைகளை வழங்கவே கூட்டமைப்பு சர்வதேசத்தினால் பயன்படுத்தப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் சபை உண்மையான குற்றவாளிகளை இனங்கண்டு கொள்ள வேண்டும். அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளே உலகத்தின் முதல் வரிசை போர்க்குற்றவாளிகள் ஆவர். இவர்களுக்கு எதிரான விசாரணைகளே அவசிய மாகும். இன்று லிபியாவிற்கு நடந்தது நாளை சிரியா மற்றும் ஈரான் போன்ற நாடு களுக்கு நடைபெறலாம். தமிழ்க் கூட்ட மைப்பின் செயற்பாடுகளை கட்டுப்படுத்த வேண்டியது அவசியமாகும் எனவும் ரணவக்க மேலும் கூறியுள்ளார்.

# ரயில் விபத்து விசாரணை பூர்த்தி

(கொழும்பு)

அளவ்வ ரயில் விபத்து குறித்து விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை இந்த வாரத்திற்குள் வெளியிடப்பட உள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவிக்கிறது.

அறிக்கை தயாரிக்கும் நடவடிக்கை ஏற்கனவே பூர்த்தியடைந்து விட்டதாக திணைக்கள உயரதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

அறிக்கை வெளியிடப்பட்டதன் பின்னர் போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம மற்றும் ரயில்வே திணைக்கள சிரேஷ்ட அதிகாரிகள் ஆகியோரிடையே இது குறித்து விசேட கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாக ரயில்வே திணைக்களத்தின் உயரதிகாரி சுட்டிக்காட்டினார்.

இந்த கலந்துரையாடலின் பின்னரே அளவ்வ ரயில் விபத்து தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த செப்டம்பர் மாதம் 17ஆம் திகதி அளவ்வ ரயில் நிலையத்திற்கு அருகில் மூன்று ரயில்கள் மோதி விபத்துக்குள்ளானதில் மூன்று பேர் உயிரிழந்ததுடன் 30இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

# போருக்குப் பின் இலங்கையின் போக்கு அமெரிக்க இராஜதந்திரிகளுக்கு விளக்கம்

## காங்கிரஸ் தலைமையகத்தில் கருத்தரங்கு

(கொழும்பு)

போருக்குப்பின் இலங்கையின் அபிவிருத்தி என்னும் தொனிப்பொருளிலான விசேட கருத்தரங்கு ஒன்று அமெரிக்க காங்கிரஸ் தலமையகத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

அமெரிக்காவில் உள்ள இராஜதந்திரிகளுக்கு இலங்கையின் உண்மை நிலவரங்களை தெளிவு படுத்துவதற்காகவே மேற்படி நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிக்கிறது.

சனல் - 4 காணொளிக்கு எதிராக இலங்கை அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட்ட பதில் காணொளியும் அடுத்த மாதம் 2ஆம் திகதி அமெரிக்காவின் வொஷிங்டனில் காண்பிக்கப்படவுள்ளது.

போரின் பின்னரான இலங்கையின் அபிவிருத்தி எனும் தொனிப்பொருளில் அமெரிக்க காங்கிரஸ் தலைமையகத்தில் நடைபெறவுள்ள நிகழ்வில் இந்தக் காணொளி காண்பிக்கப்படவுள்ளதாக அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க காங்கிரஸ் இலங்கை நட்புறவு ஒன்றியத்தின் இணைத் தலைவர்களினால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன் பின்னர் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் முன்னெடுக்கப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களைத் தெளிவுபடுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

# புதிய மருத்துவ மனைகள் சுகாதார அமைச்சு ஏற்பாடு

(கொழும்பு)

சுகாதார சேவையில் மேலும் இரண்டு புதிய அரச மருத்துவமனைகள் இணைக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த இரு மருத்துவ மனைகளும் ஹம்பாந்தோட்டை மற்றும் நுவரெலியாவிலும் நிர்மாணிக்க திட்டமிடப்பட்டுள்ளன. இதற்கென நெதர்லாந்து அரசாங்கம் ஆயிரத்து 370 கோடி ரூபாய் நிதியினை வழங்க முன்வந்துள்ளது.

இந்த மருத்துவமனைகளுக்கான நிர்மாணப் பணிகள் எதிர்வரும் டிசம்பர் மாதம் ஆரம்பிக்கப்படும் என சுகாதார அமைச்சு தொவித்துள்ளது.இதேபோல் கொழும்பு தேசிய வைத்திய சாலையின் வெளிநோயாளர் பிரிவிற்காக 25 மாடிகளைப் கொண்ட கட்டட நிர்மாணப் பணியும் எதிர்வரும் டிசம்பர் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

90 கோடி ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ள இந்த வேலைத் திட்டத்திற்கு சீன கடனுதவி பெறப்படவுள்ளது. இந்த கட்டட நிர்மாணப் பணிகள் மூன்று வருட காலப்பகுதியில் நிறைவடையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தேச வெளிநோயாளர் பிரிவுடன் ஐந்நூறு வாகனங்கள் நிறுத்தக்கூடிய தரிப்பிடம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளது.

# நாடு தழுவிய பிரசாரப் போர் ஜே.வி.பி கிளர்ச்சிக்குழு தீவிரம்

(கொழும்பு)

ஜே.வி.பியின் கிளர்ச்சிக்குழு நாடு தளுவிய தீவிர பிரசாரப் போரில் இறங்கியுள்ளது. இதன் முதற்கட்டமாக ரோஹன விஜேவீரவின் உரிமைகளை நாம் பாதுகாப்போம் என்ற தொனி பொருளில் சுமார் 50 கருத்தரங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அந்தக் குழுவின் சிரேஸ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதன் முதலாவது கருத்தரங்கு இன்று மாலை கொழும்பு பொது நூலகத்தில் இடம்பெற உள்ளது. நாடு முழுவதும் இடம்பெறும் இந்தக் கருத்தரங்கில், ஜே.வி. பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜீத் குமார, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கே. சுபசிங்ஹ, அரசியல் துறைப் பொறுப்பாளர் புபுது ஜயகொட, மேல்மாகாண சபை உறுப்பினர் வருண ராஜபக்ஷ, மத்திய செயற்குழு உறுப்பினர் துமிந்த நாகமுவ உள்ளிட்ட பிரமுகர்களும் தனது கருத்துரைகளை நிகழ்த்த உள்ளனர் எனத் தெரியவருகிறது.

# செயல் இழந்த செய்மதி கிழக்கு இலங்கையில் வீழ்ந்ததா?

(கொழும்பு)

விண்வெளியில் செயலிழந்த ஜேர்மனியின் ஆய்வுச் செய்மதியின் உடைந்த பாகங்கள் சில தென்கிழக்காசியாவில் விழுந்திருக்கலாம் என்று ஜேர்மனிய விஞ்ஞானிகள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

சிறிய பேருந்து ஒன்றின் அளவுடைய - 1.87 தொன் எடையான இந்தச் செய்மதி செயலிழந்து, 30 துண்டுகளாக உடைந்து 450 கி.மீ வேகத்தில் பூமியில் விழுந்துள்ளது.

1990ஆம் ஆண்டில் விண்வெளிக்கு அனுப்பப்பட்ட இந்த செய்மதி 1999ஆம் ஆண்டில் செயலிழந்த நிலையில் புவிச்சுற்று வட்டப்பாதையில் சுற்றிக் கொண்டிருந்தது.

இந்தச் செய்மதி கடந்த சனிக்கிழமை இரவு 9.45 மணிக்கும், 10.15 மணிக்கும் இடையில் புவியை நெருங்கியதாகவும், அது தரையில் விழுவதற்கு 10 தொடக்கம் 15 நிமிடங்களே எடுத்திருக்கும் என்றும் ஜேர்மனி விண்வெளி ஆய்வு நிலையம் கூறியுள்ளது.

இந்தத் துண்டுகள் எங்கு விழுந்தன என்பது இன்னமும் உறுதி செய்யப்படவில்லை என்றும் இவை மனிதர்கள் வசிக்கும் பகுதியில் விழவில்லை என்றும் அந்த நிலையம் குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை அமெரிக்க இராணுவ விஞ்ஞானிகள் இந்த செய்மதிப் பாகங்கள் இலங்கையின் கிழக்குப் பகுதி மற்றும் மியான்மர் கரையோரத்துக்கு அப்பாலுள்ள அந்தமான் கடல், மியான்மர் அல்லது சீனாவின் உள்பகுதியில் விழலாம் என்று எதிர்பார்த்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கிடையே ஜேர்மனிய செய்மதி தென்கிழக்காசியாவில் வீழ்ந்துள்ளதாக அமெரிக்க விஞ்ஞானி ஒருவர் கூறியுள்ளார். எனினும் இவை எங்கு விழுந்தன என்பதை அவர் உறுதி செய்யவில்லை.

இந்த செய்மதிப் பாகங்கள் பூமியில் மனிதர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதற்கு 2000இல் ஒரு பங்கு வாய்ப்பு இருப்பதாக விஞ்ஞானிகள் முன்னரே கூறியிருந்தனர்.

# டிஜிட்டல் அடையாள அட்டை புதிய திட்டம் விரைவில்

(கொழும்பு)

ஆட்பதிவுத் திணைக்களத்தினால் விரைவில் விநியோகிக்கப்படவிருக்கும் அடையாள அட்டையில் மேலும் பல தகவல்கள் உள்ளடக்கப்படவுள்ளன. பாதுகாப்புத் தொடர்புடைய முக்கிய தகவல்களைக் கொண்டதாக இந்த ஆள் அடையாள அட்டைகள் எதிர்காலத்தில் விநியோகிக்கப்படவுள்ளன.

அத்துடன் இந்த ஆள் அடையாள அட்டைகள் நவீனத்துவமாக டிஜிட்டல் முறையில் வடிவமைக்கப்படவுள்ளதாகவும் அடையாள அட்டைகள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. ஒருவர் இந்த அடையாள அட்டையை முதல் தடவையில் இலவசமாகப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# பெண்களைக் கடத்திய இருவர் பொலிஸாரால் மடக்கிப்பிடிப்பு

(கொழும்பு)

திருகோணமலை - மொரவெவ - திரியாய் சந்தியிலிருந்து உப்புவெலி - நொரக்காடு சந்திவரையான பகுதிக்கு இடையில் இரு பெண்களை கெப் வாகனத்தில் கடத்திச் சென்ற வேளை மொரவெவ பொலிஸார் கெப் வாகனத்தை தடுத்து நிறுத்தி குறித்த இரு பெண்களையும் மீட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை 2மணியளவில் நடந்த இந்தச் சம்பவத்தில் கெப் வாகனத்தில் இருந்த இரு சந்தேகநபர்களையும் பொலிஸார் கைது செய்தனர். மொரவெவ நாமல்வத்தை பகுதியில் கெப் வாகனம் சென்று கொண்டிருந்த போது அதிலிருந்த பெண் கூக்குரலிட்டு கத்தியுள்ளார்.

இதனையடுத்து மொரவெவ பொலிஸாருக்கு குற்றச் செயல் ஒன்று நடப்பதாக அறிவிக்கப்பட்டது. உடனடியாக செயற்பட்ட பொலிஸார் கெப் வாகனத்தை மடக்கிப் பிடித்து இரு பெண்களையும் காப்பாற்றியுள்ளனர்.

வீடு செல்ல போக்குவரத்து வசதியில்லாது வீதியில் நின்று கொண்டிருந்த பெண்கள் இருவர் புத்தளத்தில் இருந்து திருகோணமலை நோக்கிச் சென்ற கெப் வாகனத்தில் நேற்று அதிகாலை 1.20 அளவில் ஹொரவபத்தானை பகுதியில் வைத்து ஏறி கோமரங்கடவல செல்ல திரியாய் சந்தியில் தம்மை இறக்கிவிடுமாறு கெப் வாகன சாரதியிடம் கோரியுள்ளனர்.

இதனை அடுத்து அவர்களுக்கு உதவி செய்வது போல் அழைத்துச் சென்ற சாரதி திரியாய சந்தியில் கெப் வாகனத்தை நிறுத்தாது அவர்களை கடத்திச் சென்றுள்ளார்.

இந்த சம்பவத்துடன் கைது செய்யப்பட்ட இருவரும் புத்தளம் பகுதியைச் சேர்ந்தவர்களாவர்.

# மகாபொல கொடுப்பனவை அரசு உயர்த்த வேண்டும்

## வலுவடைகிறது கோரிக்கை

(கொழும்பு)

உயர்க்கல்வி கற்கும் மாணவர்களுக்கான மகாபொல புலமைப்பரிசில் கொடுப்பனவை அதிகரிக்கவேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டிருக்கிறது.

கடந்த 5 வருடங்களுக்கு மேலாக மகாபொல புலமைப் பரிசிலுக்கு வழங்கப்படும் பணத்தொகை மீளாய்வுக்கு உட்படவில்லை என அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் சஞ்சீவ பண்டார தெரிவித்துள்ளார்.

தற்போது அதிகரித்துள்ள வாழக்கைச் செலவை ஈடுசெய்யும் வகையில் ஆகக்குறைந்தது 4000 ரூபாவாக அதிகரிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் அவர் 2012 இற்கான பஜெட் இல் கல்வித்துறைக்கான நிதியில் பாரிய வெட்டு இடம்பெற்றுள்ளது.

2011இல் 37 ஆக இருந்த நிதி ஒதுக்கீடு 2012 இல் 2.6 ஆக குறைக்கப்பட்டுள்ளது. உயர்கல்வித்துறைக்கு சென்ற வருடம் 2% ஒதுக்கப்பட்டிருந்தது ஆனால் அது 1.9% ஆக குறைக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

அரசாங்கத்தை குறைகூறிய அவர் 2005 இல் இருந்து 2010 இற்கு கல்விக்கான நிதி ஒதுக்கீடு 50% குறைக்கப்பட்டுள்ளது எனச் சுட்டிக்காட்டின இவ்வாறு நிதியை குறைப்பதூடாக இலவசக்கல்வியை எதிர்காலத்தில் கேள்விக்குறியாக்கியுள்ளது எனக் குற்றஞ் சாட்டியுள்ளார்.

# பெண் நோயாளிகள் பயணத்தில் சிரமம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் இருந்து கொழும்பு வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்காகச் செல்லும் பெண் நோயாளர்களுடன் பெண் சிற்றூழியர்கள் அனுப்பப்படுவதில்லை என பெண் நோயாளர்கள் கவலை வெளியிட்டுள்ளார்கள்.

இதனால் போக்குவரத்தில் பெண் நோயாளர்கள் பெரும் சிரமங்களுக்குள் ஆளாக்கப்படுவதாகவும், பலதரப்பட்ட இன்னல்களுக்கு மத்தியில் பயணிப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இனிவரும் காலங்களில் கொழும்பு வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக செல்லும் வேளைகளில் தம்முடன் ஒரு பெண் சிற்றூழியரை அனுப்பிவைக்குமாறு யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாகத்தினரிடம் பெண் நோயாளர்கள் வேண்டுகோள் விடுக்கின்றார்கள். (எஸ்)

# வங்கிச் சேவை

(யாழ்.நிருபர்)

இலங்கை வங்கியின் கொக்குவில் கிளை பிரதி சனிக்கிழமை தோறும் நண்பகல் 12.00 மணிவரை இயங்கி வருவதாக அதன் முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

தங்க நகை அடகுக்கடன் பெறும் வாடிக்கையாளர்களின் நன்மை கருதியே இவ்வங்கிக் கிளை சனிக்கிழமைகளிலும் இயங்கிவருகிறதென அவர் மேலும் தெரிவித்தார். (10)

# மட்டு சிறையில் கைதி மரணம்

(கொழும்பு)

மட்டக்களப்புச் சிறைச்சாலையிலுள்ள கைதியொருவர் சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை உயிரிழந்துள்ளார்.

வாழைச்சேனையைச் சேர்ந்த 34வயதுடைய கைதியே சுகயீனம் காரணமாக உயிரிழந்தவர் ஆவார். குறித்த கைதி சுகயீனமடைந்த நிலையில் சிறைச்சாலை அதிகாரிகளினால் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டபோது சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர் கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் அவுஸ்ரேலியாவுக்கு சட்டவிரோதமாக ஆட்கடத்தும் நடவடிக்கைக்கு உடந்தையாகவிருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற விசாரணையின் பின்னர் சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

# சீருடைகள் கொள்ளை கடற்படைவீரர் கைது

(கொழும்பு)

பூனவ, கடற்படை முகாம் களஞ்சியத்திலிருந்து கடற்படை சீருடைகள் 160 பொதிகள் மற்றும் கடற்படையினர் அணியும் பதக்கங்கள் பொத்தான்கள் ஆகியனவற்றைக் கொள்ளையடித்தார் என்ற சந்தேகத்தின் பேரில் கடற்படை வீரரான ஜீ.உபுல் நிசாந்த என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறிப்பிட்ட கடற்படை வீரரால் கொள்ளையடிக்கப்பட்டிருந்த பொருட்களின் ஒரு பகுதி அநுராதபுரத்திலும் குருநாகலிலும் விற்பனை செய்யப்பட்டிருந்ததும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. இதனையடுத்து இந்தச் சம்பவத்துடன தொடர்புடைய மேலும் பலரைக் கைது செய்யும் நடவடிக்கைகளில் மதவாச்சி பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட கடற்படை வீரர் அநுராதபுர மேலதிக நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதனையடுத்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.



தீபாவளி பண்டிகையை முன்னிட்டு யாழ்.நகரப் பகுதிகளில் புடைவை வியாபாரம் களைகட்ட ஆரம்பித்துள்ளது. இதில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்திற்கு முன்னால் உள்ள வீதிப்பகுதிகளில் யாழ்.மாநகர சபையினால் ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில் நடைபாதை வியாபாரிகள் வியாபார நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபடுவதைக் காணலாம். (படம் - பார்த்தீபன்)

# மனித உரிமைகள் ஆணையாளர் பதவி "கொமன்வெல்த்" அமைப்பில் வேண்டாம்

## எதிர்க்கிறது இலங்கை அரசு

(கொழும்பு)

கொமன்வெல்த் அமைப்பில் 11 நாடுகளால் முன்வைக்கப்பட்டுள்ள ஜனநாயகம், சட்டம், ஒழுங்கு மற்றும் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் பதவியை உருவாக்குவது தொடர்பான யோசனையை பேர்த் மாநாட்டில் இலங்கை கடுமையாக எதிர்க்கவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவுஸ்ரேலியாவின் பேர்த் நகரில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை தொடங்கவுள்ள கொமன்வெல்த் உச்சி மாநாட்டில் பங்கேற்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்றுப் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

மூன்று நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டின் முடிவில் அடுத்த கூட்டத்தை நடத்தவுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவுஸ்ரேலியப் பிரதமர் ஜூலியா கிலாட்டிடம் இருந்து கொமன்வெல்த் தலைமைப் பொறுப்பை ஏற்கவுள்ளார்.

அத்துடன் 2009 இல் போர்ட ஒவ் ஸ்பெயினில் நடைபெற்ற கொமன்வெல்த் மாநாட்டில் முன்னாள் மலேசியப் பிரதமர் தலைமையில் கானா, ஜமைக்கா, பாகிஸ்தான், உகண்டா, அவுஸ்ரேலியா, மொசாபிக், பிரித்தானியா, கயானா, கனடா, கரிபாதி ஆகிய 11 நாடுகளின் வல்லுநர்கள் குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட ஜனநாயகம், சட்டம், ஒழுங்கு, மனித உரிமைகள் ஆணையாளர் பதவியை உருவாக்கும் யோசனை குறித்து இந்த மாநாட்டில் விவாதிக்கப்படவுள்ளது.

சுதந்திரமான இந்தப் பதவியை கொமன்வெல்த் அமைப்பில் உருவாக்குவதற்கு இலங்கையின் சார்பில் கடும் எதிர்ப்பை வெளியிடவுள்ளது.

இந்தப் பதவியை உருவாக்கும் முடிவை உடனடியாக எடுப்பதற்குப் பிரித்தானியா, கனடா, நியுசிலாந்து ஆகிய நாடுகள் வலியுறுத்தி வருகின்றன.

ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தை விடுதலைப் புலிகளின் பரப்புரைகளை ஊக்குவிக்கவே பயன்படுவதாகவும், இதுவே இதுபோன்ற பொறிமுறை தவறாகப் பயன்படுத்தப்படுவதற்கு தகுந்த சான்றாக இருப்பதாகவும் இலங்கை அரசாங்க வட்டாரங்கள் கூறியுள்ளன.

## ஹெரோயின் விற்பனை கண்டியில் மூவர் கைது

(கொழும்பு)

கண்டியில் சட்டவிரோதமாக ஹெரோயின் போதைப் பொருள் விற்பனை செய்ய முயன்றதாகத் தெரிவிக்கப்படும் மூன்று பேர் 8.380 கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் அலவத்துக்கொட பொலிஸரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் கொழும்பு கிரித்கொட பகுதியிலிருந்து கொண்டு வந்து கண்டியில் ஹெரோயின் போதைப் பொருள விற்பனை செய்ய முயன்றதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் தற்போது போதைப் பொர்ருள் வியாபாரத்தில் ஈடுபட முடியாத நிலைமை காணப்படுவதாகவும் இதனால் கண்டியில் போதைப் பொருள விற்பனை செய்வதற்காக இங்கு வந்ததாகவும் பொலிஸார் கூறினர்.

# ஐ.நா.பணியாளர்கள் யாழில் சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் சபை ஸ்தாபிக்கப்பட்டு 66 ஆவது ஆண்டு பூர்த்தியாவதை ஒட்டி யாழ்.நகரில் பல்வேறு சிரமதானப் பணிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் உள்ள யு.என்.எச்.சி.ஆர்அலுவலகப் பணியாளர்கள் மேற்படி இச்சிரமதானப் பணிகளை ஏற்பாடு செய்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபை ஸ்தாபிக்கப்பட்டு நேற்றுடன் 66 ஆண்டுகள் பூர்த்தியடைகின்றன. அதேவேளை, ஐக்கிய நாடுகள் சபை ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து குறிப்பிடத்தக்க முன்னேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் சுட்டிக்காட்டியுள்ளார்.

உலக சனத்தொகை ஏழு பில்லியனை எட்டுவதை இன்று முதல் மனித குடும்பம் வரவேற்பதாக ஐ.நா.தகவல் சேவை குறிப்பிட்டுள்ளது.

நாம் நீண்ட காலம் வாழ்வதுடன், எமது பிள்ளைகளும் அதனைவிட அதிக காலம் வாழ வேண்டுமென ஐ.நா.தகவல் சேவையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஜனநாயக சட்டத்தின் கீழ் அமைதியான முறையில் நம்மில் அதிக மானவர்கள் சமாதான சூழலில் வாழ வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வடக்கில் மீன்பிடித் துறைமுகங்கள் நோர்வேயின் உதவி பெற முயற்சி

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் அமைக்கப்படவுள்ள துறைமுகங்களிற்கு நோர்வே அரசாங்கத்திடம் நிதியுதவி கோரப்படும் என கடற்றொழில் நீரியில் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ண தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த அமைச்சர் ராஜித சேனாரத்ன, யாழ்.மாவட்ட நீரியல் வளத்துறை திணைக்களத்தின் யாழ்.மாவட்ட காரியாலயத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது மேற்படி தக்வலைத் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தினால் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது. யாழ்.மாவட்டத்தில் கப்பல் மற்றும் படகுப் போக்குவரத்தை அதிகரிக்கும் நோக்கத்துடன், குடாநாட்டின் பல இடங்களில் துறை முகங்கள் அமைக்கப்பட வேண்டும். அத்துடன் குருநகர், இன்பசிட்டி பகுதிகளில் துறைமுகங்கள் அமைத்தால் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள இலகுவாக அமையும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதேவேளை, மீன்பிடிப் படகுகளில் 25 குதிரை வலுக்கொண்ட படகுகளே மீன்பிடிக்க அனுமதி வழங்க முடியும் என கடற்படையினர் கூறுவதாகவும் மற்றும் பொருளாதார அமைச்சும் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சு 30 குதிரை வலுக கொண்ட படகுகளைப் பயன்படுத்தி தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட முடியும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அறிவித்தலுக்கு அமைவாக மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவது என்பதை எழுத்து மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.

மேலும் வல்வெட்டித்துறை மற்றும் குருநகர் பகுதிகளில் 150 இற்கும் மேற்பட்ட ரோலர் படகுகளைப் பயன்படுத்தி தொழிலில் ஈடுபடுகின்றனர். அவை உடனடியாகத் தடுத்து நிறுத்தப்படல் வேண்டும்.

இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகளின் அத்துமீறல் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தல் வேண்டும் என சம்மேளனத்தினால் பல கோரிக்கைகள் முனவைக்கப்பட்டன.

இக்கோரிக்கைகளுக்குப் பதிலளித்த அமைச்சர் ராஜித சேனாரத்ன, யாழ்.மாவட்டத்தில் மட்டுமன்றி வடமாகாணத்தில் குருநகர், மாதகல், பருத்தித்துறைப் பகுதிகள் தவிர்ந்த ஏனைய சில இடங்களில் துறைமுகங்க[illegible] அமைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

அத்தோடு அவரசரகாலச் சட்டம் நீக்கப்பட்டதன் பின்பு 30 குதிரைவலுக் கொண்ட படகுகளைப் பயன்படுத்தி மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ரோலர் படகுகளைப் பயன்படுத்தி மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவது நாடளாவிய ரீதியில் தடை செய்யப்பட்டுள்ளது.

மேலும், இந்திய இழுவைப் படகுகள் அத்துமீறல் தொடர்பாகப் பேச்சு வார்த்தை நடைபெற்று வருகிறது. மிக விரைவில் அதற்கான தீர்வு பெற்றுத் தரப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார். (எஸ்)

# மண்டைதீவில் உவர்நீர்த் தடுப்பணை திட்டத்தைப் பூரணமாக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுக் கிராமத்தின் மிகுதியாகவுள்ள இரண்டு கிலோ மீற்றர் நீளமான உவர்நீர்த் தடுப்பணையினையும் புனரமைப்புச் செய்து மேற்படி திட்டத்தைப் பூரணமாக்கும்படி செய்யும்படி அப்பகுதி மக்கள் யாழ்.மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தைக் கோரியுள்ளனர்.

மண்டைதீவுக் கிராமத்தைச் சூழவுள்ள சுமார் ஐந்து கிலோ மீற்றர் நீளமான உவர் நீர்த்தடுப்பணை உள்ளது. இந்த உவர் நீர்த்தடுப்பண்ணையானது கடந்த யுத்தகால நடவடிக்கைகளின் போது பராமரிப்பு இன்றி சேதமடைந்து காணப்பட்டது.

இதன் காரணமாக அக்கிராமத்தின் வயல் நிலங்களில் உவா நீர் புகுந்து நெற்பயிர்ச் செய்கையை மேற்கொள்ள முடியாதபடி வயல் நிலங்கள் உவர்த்தன்மையாக மாறியிருந்தன. அத்துடன் அக்கிராமத்தின் நிலத்தடி நீரும் மாசடைந்துள்ளது. எனவே இக்கிராமத்தின் விவசாய தேவையையும் குடிநீர்ப் பிரச்சினைகளையும் தீர்க்கும் முகமாக குறித்த உவர் நீர்த்தடுப்பணை புனரமைக்கப்படும் பணிகள் ஆரம்பிக கப்பட்டிருக்கின்றன. இவ் உவர் நீர்த்தடுப்பணையின் மூன்று கிலோமீற்றர் தடுப்பணை புனரமைக்கும் பணிகள் தற்சமயம் முடிவடையும் நிலையை எட்டியுள்ளது. இந்நிலையிலேயே மிகுதியாகவுள்ள இரண்டு கிலோ மீற்றர் உவர் நீர்த் தடுப்பணையினையும் புனரமைத்துத் தரும்படி அக்கிராம மக்கள் கோரியுள்ளனர்.


இவ்விடயம் சம்பந்தமாக மணடைதீவு கிராமமட்ட விவசாய அமைப்புக்கள் யாழ்.மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகளுடன் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது. (பா)

# பருவமழை ஆரம்பித்துள்ளதனால் மீள்குடியேறிய மக்கள் பெரும் துன்பம்

## செல்வம் எம்.பி. வேதனை

(கொழும்பு)

வடக்கு, கிழக்கில் பருவமழை ஆரம்பித்துள்ளமையினால் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு தகரக் கொட்டைகளில் வாழும மக்கள் சொல்லொண்ணாத் துனபங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.



மீள்குடியேற்றம் செய்யப்பட்டவர்களது அடிப்படைத் தேவைகளை விரைவாக நிறைவேற்றத் தவறியமையினாலேயே இவ்வாறான நிலைக்கு அவர்கள தள்ளப்பட்டுள்ளனர் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மெனிக்பாம் முகாமில் உள்ளவர்களுக்கு நீண்டகாலமாக அம் முகாமுக்குள் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்களும் மழையின் காரணமாகப் பெரும் இடையூறுகளுக்கு முகம் கொடுத்து வருவதாக எனக்குத் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் மழை காலங்களில் ஒதுங்குவதற்குக் கூட ஓர் கட்டட வசதியற்ற பிரதேசங்களில் வசித்து வருகின்றனர். அனைவருமே சுகாதாரப் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டியேற்படும். எனவே தாம் இயல்பு வாழ்க்கைக்கு செல்லலாம் என்ற கனவுடன் தமது பிரதேசத்திற்கு சென்றவர்களை மீண்டும் மீண்டும் துன்பத்திற்கு ஆளாக்காது அவர்களுக்கான மாற்று ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க வேணடியது சம்பந்தப்பட்ட தரப்பினருடைய கடமையாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கைகலப்பில் முடிந்த காணித்தகராறு குடும்பஸ்தரின் உயிரைப் பலி எடுத்தது

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் நேற்றையதினம் காணி தொடர்பான பிரச்சினையில் உறவினர்கள் இருவருக்கு இடையில் ஏற்பட்ட கைகலப்பில் குடும்பஸ்தர் ஒருவர் பலியாகியுள்ளார்.

வேப்பங்குளம் சிலாபத்துறைப் பகுதியைச் சேர்ந்த அப்துல் றஹீம் பர்ஸின் (வயது-34) என்ற குடும்பஸ்தரே இந்தச் சம்பவத்தில் பலியானவர் ஆவார்.

மன்னார் மாவட்டத்தின் முசலிப் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட வேப்பங்குளம் சிலாபத்துறை என்னும் கிராமத்தில் நேற்று முற்பகல் 10 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

காணி தொடர்பான பிரச்சினையில் பலியான நபருக்கும் அவரது உறவினர் ஒருவருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு கைகலப்பாக மாறியதாகவும், இதன்போது குறித்த நபரின் தலையில் அவரின் உறவினர் பொல்லால் அடித்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாக்குதலுக்குள்ளான நபர் சிலபாத்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மன்னார் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக மன்னார் வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் எம்.எச்.ஆசாத் தெரிவித்துள்ளார்.

## அக்கா - தம்பி மோதல் விளைந்தது விபரீதம்

(கொழும்பு)

பாணந்துறை, முங்வத்தை - அலுபோமுல்ல பிரதேசத்தில் சம்பவமொன்றில் அக்காவுக்கும் இடம்பெற்ற தம்பிக்கும் இடையே ஏற்பட்ட வாக்கு வாதம் முற்றியதை அடுத்து இருவருக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டுள்ளது.

தம்பியின் எதிர்பாராத தாக்குதலால் பாதிக்கப்பட்டு வாந்தி எடுத்த அக்கா பாணந்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இதைக் கேள்வியுற்று அதிர்ச்சியடைந்த தம்பி (சச்சின் ஜெயசுந்தர - வயது 22) வீட்டின் பின்புறம் சென்று தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார். சடலங்கள் பிரதேச பரிசோதனையின் பின்னர் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

# 2ஜி குற்றப்பத்திரிகை

**ஆ.** ராசா, சித்தார்த்த பெஹுரா, ஆர்.கே.சந்தோலியா என்ற மூன்று அமைச்சர், அரசு அலுவலர்கள், கனிமொழி, சரத்குமார், யூனிடெக், ஸ்வான், ரிலையன்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் ஆகியோர்மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்து 2ஜி வழக்கு நவம்பர் 11 முதல் நடைபெறும் என்று சி.பி.ஐ நீதிமன்றம் கூறியுள்ளது.

இரண்டு, மூன்று வழக்குகளாக இதனைப் பிரித்து நடத்தினால் உபயோகமாக இருக்கும். ரிலையன்ஸ்-ஸ்வான், எஸ்ஸார்-லூப், யூனிடெக், (டாடா?) ஆகியோர் செய்துள்ள கார்பொரேட் முறை கேடுகள். டாடா தவிர்த்து பிறர்மீது வலுவான சாட்சியங்கள் உள்ளன. அவர்களைத் தனியாக விசாரித்து, கடுமையான அபராதங்கள் விதித்து, சில மாதங்கள் சிறைத்தண்டனை கொடுத்து, முடித்துவிடலாம்.

அடுத்து ராசா, பெஹுரா, சந்தோலியா ஆகிய பொது ஊழியர்கள். இவர்கள்மீது இரண்டு குற்றச் சாட்டுகள்: முதலாவது - சட்டத்தை வளைத்து, திருத்தி, முறைகேட்டில் ஈடுபடுவதன்மூலம் சில கார்பொரேட் நிறுவனங்களுக்குச் சாதகமாக நடந்துகொண்டது.

இரண்டாவது - நேரடியாகவோ மறைமுகமாகவோ லஞ்சமர்கப் பணம் பெற்றுக்கொண்டது. இதில் முதலாவதற்கு நிறையச் சாட்சியங்கள் உள்ளன. அதற்கான தண்டனை அதிகமாக இருக்க முடியாது. இரண்டாவதற்கான சாட்சியங்கள் மிக வலுவாக இல்லை.

இங்கு கலைஞர் தொலைக் காட்சி விவகாரம் மட்டுமே வலுவாக இருப்பது போலத் தோன்றுகிறது. ஆனால் அதுவும் சட்டம் எதிர்பார்க்கும் வலுவில் இல்லை.

அடுத்து, மேலே உள்ளதுடன் இணையும் கலைஞர் தொலைக்காட்சி ஷாஹித் பால்வா கம்பெனியிடமிருந்து 'கடன்' பெற்ற விவகாரம். நேரடியாகப் பார்த்தால் இதனை லஞ்சம் என்பதுடன் இணைக்கமுடியும் என்றாலும் சட்ட ரீதியாக இதனை நிரூபித்தல் மிக மிகக் கடினம்.

நாட்டின் மிக முக்கியமான ஊழல் வழக்கு என்று கட்டம் கட்டப்பட்ட இது, மிகச் சாதாரணமான ஒரு வழக்கு என்ற பெருமையை மட்டுமே பெறப்போகிறது.

இந்தப் பிரச்சினைக்கு யார் அடிப்படைக் காரணம்? ஒருவரை என்று குற்றம் சாட்ட முடியாது.

தயாநிதி மாறனின் முரட்டுத்தனம்.

இராசாவின் திருட்டுத்தனம்.

இவர்கள் இருவரையும் முற்று முழுதாக ஆதரித்த கருணாநிதியின் பிடிவாதம் மற்றும் முட்டாள்தனம்.

இதனைக் கண்டுகொள்ளாமல் முகத்தைத் திருப்பிக்கொண்ட மன்மோகன் சிங்கின் கையாலாகாத்தனம்.



இது தன் பிரச்சினை அல்ல என்று கை கழுவிவிட்ட சோனியா காந்தியின் அசட்டுத்தனம்.

இவை அனைத்தும் சேர்ந்து இன்று பாதிப்புக்கு உள்ளாவது, இந்தியாவின் தொலைத் தொடர்புக் கொள்கையே. இதன் விளைவுகள் அடுத்த பத்தாண்டுக்கு இந்தியாவில் எதிரொலித்துக்கொண்டே இருக்கும்.

- பத்ரி சேஷாத்ரி



கடா.:.பி தன்னுடைய அரசை மக்களுக்கான அரசாக நடத்தியவரல்லர். அவர் சர்வாதிகாரிதான், மக்களைப் பொருட்படுத்தாதவர்தான். சர்வாதிகாரிகளின் முடிவு இப்படித்தான் இருக்கும்.

ஆனால் அவரின் இந்த முடிவு அவருடைய சர்வாதிகாரத்திற்கான முடிவல்ல. ஏகாதிபத்தியங்களை அனுசரித்துப் போகாததற்கான முடிவு. இன்னும் தெளிவாகச் சொன்னால் லிபியாவின் வளங்களை அமெரிக்கா கொள்ளையடிக்க அனுமதிக்காததற்கான முடிவு. அப்படி அவர் அனுமதித்திருந்தால் இன்றும் லிபியாவின் அசைக்க முடியாத அரசுத் தலைவராக அவரால் நீடித்திருந்திருக்க முடியும்.

- நல்லூர் முழக்கம் இணையத்திலிருந்து

## சக்தி ஜோதி கவிதைகள்



### மாதவம்

என் நண்பர்கள் எவ்வளவோ சுதந்திரத்தோடு இருக்கிறார்கள்
பகல் இரவு என்னும் வேறுபாடு இல்லை
ஒளிவு மறைவு என்பதுகூட இல்லை
நல்லவர்கள் அவர்கள்
அவர்களை நான் ஆராய விரும்புவதேயில்லை
அவர்களுக்கு அந்தரங்கங்களும் இல்லை
அவர்களிடத்தில் ஒரு புதிரையும் நான் பார்க்கவில்லை
வியப்புகள் ஏதுமற்ற அவர்களைப் பார்க்கையில்
சில போது பாவமாகக்கூட இருக்கிறது
புதிர்களற்ற உடல் வெறும் கூடுதானே
பெண்ணுடல் புதிர்களால் ஆனது
இரக்சியங்களின் பிறப்பிடம் கடலை விட ஆழமானது
உயர்ந்த மலைகளை விட உயரமானது
பிரபஞ்சத்தைக் கடந்து செல்வது
வானிலும் மிதக்கும்
நீரிலும் மிதக்கும் இரகசியங்கள் கொண்டது
கண்களுக்கு புலப்படுவதுபோல் இருக்கும்
நாற்பத்தொன்பது ஜென்மங்களும்
பெண்ணாகவே பிறக்க வேண்டும்.

### கூடு விட்டு கூடு

நிறைவேறாத கனவுகளோடு
நான்
மரணத்தைத் தழுவ விரும்புவது குறித்து
துக்கமில்லை

ஆசைகள்
லட்சியங்கள்
கனவுகள்
உன் முன் அணிவகுக்கின்றன
மரணத் தறுவாயில்

மனதெல்லாம் நிரம்பித் தளும்பும்
கனவில்
மரணத்தின் மொழியை
புரிந்து கொள்ளவே தீரா விருப்பம்
அலெக்ஸாண்டர் முதல்
ஆண்டியப்பன் வரை
கனவுகளால் நிரம்பிய மரணங்கள்

ஒவ்வொரு மரணமும்
விதைத்துப் போகின்றது
இன்னும் இன்னும்
கனவுகளை.

## ஜெயலலிதா எழுதிய நாவல்



**மு**ப்பது ஆண்டுகளுக்கு முன்னால் ஜெயலலிதா என்றொரு எழுத்தாளர் இருந்தார். அவர் எண்பதுகளில் கல்கியிலும் குமுதத்திலும இரண்டு முழுநீள நாவல்களை எழுதியவர். சிறுகதைகளும் கவிதைகளும் எழுதியுள்ளாரா என்பது தெரியவில்லை.

திரைப்படங்களில் நடித்து புகழ்பெற்று தமிழகம் அறிந்த நடிகையாக வாழ்ந்த நாட்களில் எழுதியவை அந்த இரண்டு நாவல்களும். பின்னாளில் அவர் புரட்சித்தலைவியாகி தமிழக முதல்வர் ஆனதெல்லாம் வரலாறு. அவர் எழுத்தாளராக இருந்தார் என்பதுதான் ஆச்சர்யமான செய்தி. எழுத்தாளராகவே இருந்திருக்கலாம்!

கல்கி இதழில் 80 ஆம் ஆண்டு 'உறவின் கைதிகள்' தொடராக வெளிவந்தது. ஜெ எழுதிய இந்நாவல் குறித்து கேள்விப்பட்டிருந்தாலும் அது புத்தக வடிவத்தில் இதுவரை பதிப்பிக்கப்படவேயில்லை. யாரோ புண்ணியவான் பைண்ட் பண்ணி வைத்திருந்தது பழைய புத்தகக் கடையில் கிடைத்தது.

நமக்குத் தெரிந்த ஜெயலலிதா சிறுவயது முதலே கல்வியில் சிறந்து விளங்கியவர், எதறகும் அஞ்சாதவர், கொஞ்சம் முரட்டுத்தனமான அதே சமயம் வீரமான பெண் என்பதாக இருக்க... நாவலை வாசிக்க தொடங்கியதுமே நமக்கு அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சிதான்! நமக்குத் தெரிந்த முரட்டு முதல்வர் அல்ல இதை எழுதியது! மனது முழுக்க காதலும் அனபும் நிறைந்த ஒரு இளம்பெண்ணின் மனநிலையில் எழுதப்பட்டிருந்தது. காதலின் ஏக்கமும் தவிப்பும் காதலனுடனான அந்த நொடிகளின் உக்கிரமும் நாவலெங்கும் நிறைந்திருந்தது.

முதல் அத்தியாயத்தில் நடிகனின் அறிமுக காட்சியில் தொடங்கி இறுதிஅத்தியாயத்தில் அவனுடைய மரணம் வரை ஒரே மூச்சில் படித்துவிட முடியும் அவ்வளவு வேகமான எழுத்து நடை. ஒரு அத்தியாயத்தில் நடிகன் மாணவியிடம் தொலைபேசி எண்ணை கொடுத்துவிட்டு வர.. அவள் அழைக்க.. அந்த அத்தியாயம் முழுகக இருவருக்குமான தொலைபேசி உரையாடல் மட்டும்தான். உரையாடல் என்றால் வசனங்கள் இல்லாமல் இருவருக்குமான மௌனமே நிறைந்திருப்பது அருமை. எழுத்தில் மௌனத்தை கொண்டுவருவது மிகவும் கடினம் என்பார்கள். அதேபோல காதலின் தவிப்பையும் ஏக்கத்தினையும் கூட நன்றாகவே எழுதியிருக்கிறார்.

இந்நாவல் அவருடைய வாழ்க்கையின் அடிபபடையில் எழுதப்பட்டதாக சிலர் கூறினாலும் அப்படி எதையும் நம்மால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஒரு அழகான புனைவாகவே இது இருக்கிறது.

தொடர்கதை வடிவத்தில் எழுதப்பட்டிருந்தாலும் சுஜாதாவின் தொடர்கதைகளைப் போல ஒவ்வொரு அத்தியாயத்தின் முடிவிலும் தேவையில்லாத டுவிஸ்ட்டோ அதிர்ச்சியோ இல்லாமல் மென்மையாக தொடர்ந்திருப்பது பிடித்திருந்தது. வாய்ப்பு கிடைத்தால் அனைவருமே படிக்க வேண்டிய நாவல் இது. அம்மாவின் புகழ்பாடும் அதிமுகவினர் இதை புத்தகமாக கொண்டுவர முயற்சி செய்யலாம். கலைஞர் மட்டும்தான் எழுதுவாரா எங்க தலைவியும் இலக்கியம் படைச்சிருக்காங்க பாருங்க என மார்தட்டிக்கொள்ள உதவும். ஜெ குமுதத்தில் எழுதிய இன்னொரு நாவலை தேடிக்கொண்டிருக்கிறேன்.

- அதிஷா

## வன்முறைதான் கவர்ச்சியானது



**ப**ல வேளைகளிலும் இலங்கைப் போர்ச் சூழலை, முஸ்லிம் என்ற அடிப்படையிலிருந்தே புரிந்து கொள்ள விரும்பியிருக்கிறேன். பின்னர் சில மாற்றங்களும் ஏற்பட்டிருக்கிறது. மிகமோசமாக வரலாற்றிலிருந்து துடைத்தெறியப்படும் சிறு சமூகமொன்றின் பக்கம் சாய்வாக நின்று புரிந்து கொள்ளவும் எதிர்வினையாற்றவும் முயற்சிப்பதாக உணர்ந்திருக்கிறேன். "தமிழ் பேசும் மக்களுக்கான போராட்டம்" என அறிவித்து களத்தில் செயற்பட்ட ஆயுதக் குழுக்கள், கட்சிகள், புத்திஜீவிகள் தமிழைப் பேசுகின்ற பிற சமூகங்களை (முஸ்லிம்கள், மலையக மக்கள்) பொருட்படுத்தாது ஓரத்தில் வைத்தே செயற்பட்டனர். அவர்களின் அரசியல் திட்டங்களிலும், அது சார்ந்த செயற்பாடுகளிலும் இந்த விளிம்பு நிலை சமூகங்களை உள்ளெடுக்கவில்லை.

இவர்கள் ஆளப்பட வேண்டியவர்கள் என்றும் அதிகாரம் செலுத்துவதற்கு தேவையான சனக் கூட்டம் என்றுமே அர்த்தப்படுத்தி வந்திருக்கிறார்கள். இன்றும்கூட இதுதான் நிலைமை. அதிகம் செல்வாக்கற்ற மாற்றுக் குழுக்கள் எப்போதும் முஸ்லிம்கள் மற்றும் மலையக மக்கள் போன்றவர்களின் பக்கம் சாய்வாகவே செயற்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவுகூரவேண்டும். ஆயுதப் போராட்டத்திற்கான தேவை நியாயமானது. அதைப் பொறுப்பேற்று நடத்திய நிறுவனங்களின் அரசியல் புரிதல்கள் மிகக் கேவலமானவை...

உண்மையில் என்னை அடையாளப்படுத்த நினைத்தது ஒரு போராளியாகத்தான். அதற்கான சந்தர்ப்பங்கள் கைகூடவில்லை. அதற்கான முக்கிய காரணம் எனக்கிருக்கின்ற அளவுககதிகமான பயமதான். என்னை மிகச் சிறந்த பயந்தாங்கொள்ளி என்றே நான் கருதுகிறேன். அதிக கொலைகளைச் செய்தவர்கள், நாடுகளைக் கைப்பற்றி அதிகாரம் செலுத்தியவர்கள் என இன்றும் நினைத்துப் பார்க்கும்போது என்னைக் கவர்ந்தவர்களாகவே உணர்கிறேன்.

இன்று வரையில் கூட வன்முறைதான் மிகக் கவர்ச்சியான ஒன்றாகத் தெரிகிறது. அதற்கு மாற்றீடான ஒன்றை தத்துவங்களோ, மதங்களோ, அறிவியலோ, இலக்கியமோ இன்னும் உருவாக்கி விடவில்லை. சமூகம், கலாசாரம் ஏன் நமது எல்லா உற்பத்திகளும் சிந்தனைகளும் வன்முறையின் பேராசை கொண்டவைதானே.... எழுத்தாளனாகவோ கவிஞனாகவோ அடையாளப்படுத்துவதை விட நாம் ஏன் வன்முறை செலுத்துபவர்களாக இருக்கிறோம் எனப் புரிந்துகொள்ள முயற்சிப்பதையே எனது அடையாளமாகக் கொள்ள விரும்புகிறேன். வெளிப்படையாக இதைச் சொல்லிக் கொள்வதில் எனக்கு எந்தத் தயக்கங்களும் இல்லை.

- றியாஸ் குரானா

## இந்தியச் செய்திகள்

(புதுடில்லி)

# மந்திரிகளின் சொத்து விவகாரம் ராகுலின் தலையீடு அம்பலமாகியது

மத்திய மந்திரிகள் மற்றும் அவர்களது நெருங்கிய உறவினர்கள் சொத்து விவரங்களை வெளியிட வேண்டும் என்ற பிரதமர் மன்மோகன் சிங் உத்தரவுக்கு பின்னால் ராகுல்காந்தியின் கைங்கரியம் இருப்பது இப்போது வெளியாகி இருக்கிறது.

மத்திய மந்திரிகள் சிலர் ஏற்கனவே ஊழல் புகாரில் சிக்கி வழக்குகளை சந்தித்து வருகின்றனர். இன்னும் சிலர் மீது ஊழல் மற்றும் இலஞ்ச குற்றச் சாட்டுகள் எழுந்துள்ளன.


இந்த நிலையில் மத்திய மந்திரிகள் தங்களது சொத்து விவரங்களை தெரிவிக்க வேண்டும் என்று பிரதமர் மன்மோகன்சிங் உத்தரவிட்டார்.

அதன்படி மந்திரிகள் அளித்த சொத்து விவரங்கள் தவிர அவர்களது மனைவி, பிள்ளைகள் மற்றும் நெருங்கிய உறவினர்களின் சொத்துக்களும், விவரங்களும் கடந்த மாதம் வெளியிடப்பட்டன.

மந்திரிகள் மட்டுமின்றி அவர்களது நெருங்கிய உறவினர்களின் சொத்து விவரங்களையும் வெளியிடச் செய்த மன்மோகன்சிங்கிற்கு பாராட்டுக்கள் குவிந்தன. மத்திய அரசு வெளிப்படையாக செயற்படுவதை உறுதிப்படுத்த எடுக்கப்பட்ட சிறப்பான நடவடிக்கை எனறு அவருக்கு புகழாரம் சூட்டப்பட்டன.

ஆனால் இந்த முடிவை எடுத்தது மன்மோகன்சிங் அல்ல. காங்கிரஸ் பொதுச செயலாளர் ராகுல்காந்தி தான் என்று இப்போது தெரிய வந்துள்ளது. இதன் மூலம் மன்மோகன்சிங் மற்றும் மந்திரி சபை எடுக்கும் முக்கிய முடிவுகளில் ராகுல் காந்தியின் தலையீடு இருப்பது பட்டவர்த்தனமாகி உள்ளது.

மந்திரிசபையோ அல்லது பிரதமரோ எடுக்கும் முக்கிய முடிவுகளில் ராகுல் தலையிடுவதில்லை என்று பொதுவான கருத்து நிலவி வந்தது. ஆனால் இந்தக்



கருத்தை இந்த விவகாரம் பொய்யாக்கி இருக்கிறது.

மந்திரிகளின் உறவினர்கள் சொத்து விவரங்களை வெளியிடச் செய்ய பிரதமரை அவர் வலியுறுத்திய தகவல், மத்திய அரசின் முக்கிய முடிவுகளில் ராகுலின் தலையீடு இருப்பதை அம்பலப்படுத்தி உள்ளது.

# சிதம்பரத்துக்கு எதிரான வழக்கு நவம்பர் மாதம் 8 இல் விசாரணை

(புதுடில்லி)

ஊழல் வழக்கில் மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரத்தையும் துணை குற்றவாளியாக சேர்க்க வேண்டும் என்று ஜனதா கட்சித் தலைவர் சுப்ரமணிய சுவாமி தாக்கல் செய்த மனு மீதான விசாரணையை நவம்பர் 8 ஆம் திகதிக்கு சி.பி.ஐ நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

பண்டிகை காலம் என்பதால் நீதிமன்ற அலுவலர்கள் பலர் விடுமுறையில் உள்ளனர். எனவே இந்த வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக சுவாமி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

2ஜி ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றை ஒதுக்கீட்டில் ப.சிதம்பரத்துடன் சேர்ந்து தான் ஆ.ராசா விலைநிர்ணயம் செய்தார் என்பதால் அவரையும் இந்த வழக்கில் சேர்க்க வேண்டும் என்று சுவாமி மனுத் தாக்கல் செய்துள்ளார்.

2ஜி ஊழலில் சிதம்பரத்தின் பங்கு குறித்து விசாரிக்க வேண்டும் என்று பா.ஜ.க உள்ளிட்ட எதிர்க்கட்சிகளும் மத்திய அரசை வலியுறுத்தி வருவது குறிப்பிடத் தக்கது.

# உள்ளாட்சி மன்றத் தேர்தல் மக்கள் தீர்ப்பை ஏற்கின்றோம்

## கம்யூனிஸ்ட் செயலாளர் தா.பாண்டியன்



(சென்னை)

சென்னை தேர்தல் முடிவுகளை மக்கள் தீர்ப்பாக இந்திய கம்யூனிஸ்டு ஏற்றுக்கொள்கிறது என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் தா.பாண்டிய்யன் தெரிவித்துள்ளார்.

அவர் இதுதொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

நான்கு கோடியே 80 இலட்சம வாக்காளர்களைக் கொண்ட, உள்ளாட்சி நிர்வாக பொறுப்புகளுக்கு, ஒரு இலட்சத்திற்கும் மேற பட்ட பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு, நகர்ப்புற, கிராமப்புற மக்கள் மூன்று கோடியே 60 இலட்சம் பேர் தேர்தலில் பங்கேற்று வாக்களித்தது ஜனநாயக அமைப்பில் பங்கேற்க மக்களுக்கு இருக்கும் ஆர்வத்தை காட்டுவதாக அமைந்துள்ளது.

உள்ளாட்சி தேர்தலில் 6 மாநகராட்சி மேயர்களாகவும், நூற்றுக்கும் மேற்பட்ட நகராட்சி, பேரூராட்சி தலைவர்களாகவும், ஆயிரக்கணக்கில் மன்ற உறுப்பினர்களாகவும், பெண்கள் தேர்ந்து எடுக்கப்பட்டுள்ளதை வளர்ச்சியின் அடையாளமாகக் கருதலாம். தேர்ந்தெடுக்கப்பட்ட அனைவர்க்கும், கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பெண் பிரதிநிதிகளுக்கு சிறப்பான வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பொறுப்பேற்றுள்ள அனைவரும் மக்களின் அடிப்படை சுகாதார, குடிநீர், சாலை வசதி, கழிவுநீரை அகற்றுவது, போன்ற உளாட்சி கடமைகளை முனைநது நடைமுறைப்படுத்த வேண்டுகிறோம்.

தேர்தல் முடிவுகளை மக்களின் தீர்ப்பாக கம்யூனிஸ்டு கட்சி ஏற்று, வாக்களித்த மக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 600 ஆண்டு பழமையான இராஜகோபுரம் இடிந்தது

## ஆந்திராவில் சம்பவம்

ஆந்திர மாநிலம் குன்டூர் மாவட்டம் பாபட்லாவில் 600 ஆண்டு பழமையான பெருமாள் கோவில் உள்ளது. கிரினிகண்டசோழ மன்னரால் கி.பி.1425 ஆம் ஆண்டு கட்டப்பட்ட பெருமாள் கோவில் கோபுரம் இடிந்து விழும் அபாயம் இருப்பதாக கூறப்பட்டது. என்றாலும் அந்த கோபுரத்தை இடிக்காமல் விட்டுவிட்டனர்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் மதியம் இந்த இராஜகோபுரம் திடீரென இடிந்து விழுந்தது. அப்போது கோவிலில் குறைந்தளவு பக்தர்கள்தான் இருந்தார்கள். இடிபாடுகளில் சிக்கி 2 பேர் காயம் அடைந்தனர். அவர்கள் அங்குள்ள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

இராஜகோபுரம் இடிந்ததால் பாபட்லா மக்கள் பெருமாள் கோவிலுக்கு வந்து தோஷ நிவாரன பூஜை நடத்தினர். ஆந்திர அறநிலைத்துறை அதிகாரிகள் இடிந்த இராஜகோப்ரத்தை நேரில் பார்வையிட்டனர். அவர்கள் கூறும்போது, பெருமாள் கோவிலில் புதிதாக ராஜகோபுரம் கட்டப்படும். இதற்கு எவ்வளவு செலவா[illegible] என்பது பற்றி பொறியாளர்கள் கணக்கிட்டு வருகிறார்கள்.

விரைவில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பெருமாள் கோவில் இராஜகோபுரம் கட்டப்படும் என்றார். இராஜகோபுரம் இருந்த பகுதியில் புதையல் இருப்பதாக அப்பகுதி மக்கள் கருதுகிறார்கள். இதனால் அவர்கள் அப்பகுதியை நாசப்படுத்தி விடக்கூடாது என்பதால் அங்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

# மத்திய அமைச்சர்களுக்கு தலைமைத்துவப் பணிகள்

## பிரதமர் மன்மோகன் உத்தரவு



(புதுடில்லி)

மத்திய அமைச்சர்களான பிரணாப் முகர்ஜி மற்றும் ப.சிதம்பரம் இருவருக்கும் பாரத பிரதமர் மன்மோகன் சிங் கூறியதாவது, நான் அயல்நாட்டுப் பயணம் மேற்கொள்ளும்போது இருவரும் டெல்லியிலேயே இருந்து மத்திய அரசின் நடவடிக்கைகளை கண் காணித்து செயற்படுத்த வேண்டும் என்று கூறியுள்ளார். அரசியல் விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு கூட்டம் நடந்தால் அதற்குத் தலைமை தாங்க வேண்டும் என்றும் அவர்களுக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

நவம்பர் மாதத்தில் பிரான்ஸ், மாலைத்தீவுகள், இந்தோனேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு அடுத்தடுத்து அவர் சுற்றுப் பயணம் மேற்கொள்வதையடுத்து மத்திய அரசின் முக்கிய முடிவுகளை எடுப்பதற்குப் பொறுப்பானவர்கள் இருக்க வேண்டும் என்பதற்காக இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

நவம்பர் 2 - 5 வரை பிரான்ஸ் நாட்டிலும், நவம்பர் 11 - 12 மாலைதீவிலும் சுற்றுப்பயணம் செல்லும் பிரதமர் மன்மோகன் சிங் நவம்பர் 18 - 20 வரையில் இந்தோனேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குச் செல்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



டில்லி சர்வதேச விமான நிலையம் வந்திறங்கிய பூட்டான் மன்னர் வாங்க் மற்றும் அவரது மனைவியைக் காணலாம்.

# ஏ.ரி.எம். ஊடாக தங்க நகைகள்

(சென்னை)

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு நாட்டிலேயே முதன்முறையாக தங்கம் மற்றும் வைர நகைகளை வழங்கும் ஏ.டி.எம் இயந்திரத்தை கீதாஞ்சலி குழுமம் மும்பையில் நிறுவியுள்ளது.

கீதாஞ்சலி நிறுவன தலைமை செயல் அதிகாரி சஞ்சீவ் அகர்வால் கூறியதாவது, தங்கம் மற்றும் வைர நகைகளை விற்பனை செய்வதற்கு என்றே ஏ.டி.எம் இயந்திரத்தை நாட்டிலேயே முதன்முறையாக மும்பையில் நிறுவி உள்ளோம்.

வியாபார நிறுவனங்கள், விமான நிலையங்கள் மற்றும் கோயில்கள் உள்ளிட்ட 75 இடங்களில் இது போன்ற ஏ.டி.எம்களை நிறுவ இக்குழுமம் திட்டமிட்டுள்ளது.

தங்கம் மற்றும் வெள்ளி நாணயங்கள், காதணிகள், மத ரீதியான நகைகள், வைரக்கல் பதித்த நகைகள் ஆகியவை பல்வேறு எடை அளவுகளில் கிடைக்கும். ரூ.1,000 முதல் ரூ.30,000 விலையிலான மொத்தம் 36 வகையான நகைகளை இந்த இயந்திரத்தின் மூலம் பணம் செலுத்தி வாங்கிக் கொள்ளலாம்.

இதன்மூலம் அடுத்த 3 ஆண்டுகளில் ஆண்டுக்கு ரூ.450 கோடி முதல் ரூ.500 கோடி வர்த்தகம் நடைபெறும் என்று தெரிவித்தார். தங்க நாணயங்கள் வழங்கும் ஏ.டி.எம் இயந்திரங்கள் துபாய், சீனாவில் ஏற்கனவே நிறுவப்பட்டு இருப்பது குறிப்பிடத் தக்கது.

உலகச் செய்திகள்

# பெனாசிர் பூட்டோவின் தாயார் காலமானார்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் மறைந்த முன்னாள் பிரதமர் பெனசிர் பூட்டோவின் தாயார் நசரத் பூட்டோ, நேற்று காலமானார். பாகிஸ்தான் அதிபர் ஜுல்பிகர் அலி பூட்டோவின் மனைவியான நசரத் பூட்டோ, 1929, மார்ச் 23ஆம் திகதி ஈரானின் எஸ்பகான் என்ற இடத்தில், பிரபல தொழிலதிபருக்கு மகளாகப் பிறந்தார். அதன் பின் அவரது குடும்பம், பாகிஸ்தானின் கராச்சி நகருக்கு குடிபெயர்ந்தது.கடந்த 1951ல், ஜுல்பிகர் அலி பூட்டோ, நசரத்தை இரண்டாவது மனைவியாக மணந்தார். 1979ல் ஜுல்பிகர் தூக்கிலிடப்பட்ட பின், பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவராகப் பொறுப்பேற்று வழிநடத்தினார்.

அதன் பின் தனது மகள் பெனசிர் பூட்டோவிடம் கட்சியை ஒப்படைத்தார்.கடந்த 1990களில், பெனசிர் பூட்டோ துபாயில் வசிக்கத் தொடங்கிய போது, அவரோடு துபாய் சென்றார். 2007இல பெனசிர் நாடு திரும்பிய போதும் கூட, நசரத் துபாயிலேயே இருந்தார்.அல்சீமர் நோயால் அவதிப்பட்டு வந்த அவர் நேற்று துபாயில் காலமானார். அவரது உடல், சிந்து மாவட்டத்தில் உள்ள லர்கானாவுக்குக் கொண்டு வரப்பட்டு இறுதிச் சடங்குகள் செய்யப்படும்.

# தந்தையைக் கொன்றவர்களை பழிவாங்குவேன் - இது சபதம்

## கடாபியின் மகன் தொலைக்காட்சியில் உரை


(திரிபோலி)

லிபியாவில் சிர்த் நகரில் சுட்டுக்கொல்லப்பட்ட கடாபிக்கு 2 மனைவிகள் மூலம் 7 மகன்கள் மற்றும் ஒரு மகள் இருந்தனர். அவர்களில் 2 பேர் தங்கள் குடும்பத்துடன் அல்ஜீரியாவுக்கு தப்பி சென்றுவிட்டனர். நேட்டோ படை குண்டு வீச்சில் ஒருவர் பலியாகிவிட்டார். முட்டாசிம் என்ற மகன் கடாபியுடன் கொல்லப்பட்டார்.

மற்றொரு மகன் சயீப் அல்- இஸ்லாம் என்பவர் தலைமறைவாகி விட்டதால் உயிருடன் இருக்கிறார். அவர் சிரியாவில் இருந்து ஒளிபரப்பாகும் ஒரு தனியார் டி.வி.யில் திடீரென தோன்றினார். அப்போது தனது ஆதரவாளர்களுக்கு உரை நிகழ்த்தினார்.

அவர் கூறியதாவது:-

நான் சாகவில்லை, இன்னும் உயிருடன் சுதந்திரமாக இருக்கிறேன். லிபியா மக்களுக்காக நான் இறுதிவரை போராடுவேன். என் தந்தையை (கடாபியை) கொன்றவர்களை எதிர்த்து போராடி பழிவாங்குவேன்.



அதுவரை எனது போராட்டம் ஓயாது என்று ஆவேசமாகப் பேசினார். சயீப் அல்-இஸ்லாம் கடாபி இராணுவத்தில் கொமாண்டராக இருந்தார். புரட்சிப் படையை எதிர்த்து போரிட்டு வந்த அவர் திடீரென சரண் அடைவதாக அறிவித்தார். பின்னர் தலைமறைவாகி விட்டார்.

# இந்திய-பாக் யுத்தம் மூண்டால் பாகிஸ்தான் பக்கம் ஆப்கானிஸ்தான்

அமெரிக்கா அல்லது இந்தியாவுடன் பாகிஸ்தான் யுத்தம் புரிய நேரிட்டால் பாகிஸ்தானுக்கு எப்பொழுதும் ஆப்கானிஸ்தான் ஆதரவளிக்கும் என ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீட் கர்ஸாய் கூறியுள்ளார்.

பாகிஸ்தானின் ஜியோ நியூஸ் தொலைக்காட்சிக்கு அளித்த செவ்வியொன்றிலேயே ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார். இச்செவ்வியின் சில பகுதிகள் நேற்று ஒளிபரப்பப்பட்டன.

பாகிஸ்தான், அமெரிக்காவுக்கிடையில் யுத்தமொன்று ஏற்பட்டால், பாகிஸ்தானின் தரப்பில் ஆப்கானிஸ்தான் இருக்கும்" என ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி கூறினார்.

பாகிஸ்தான் தாக்கப்பட்டால் அதன் மக்களுக்கு ஆப்கானிஸ்தானின் உதவி தேவைப்பட்டால் ஆப்கானிஸ்தான் உங்களுடன் இருக்கும்" எனவும் அவர் கூறினார்.

குறிப்பாக, இந்தியாவினால் பாகிஸ்தான் தாக்கப்பட்டால் பாகிஸ்தானுக்கு ஆப்கானிஸ்தான் ஆதரவளிக்குமா என ஆப்கானிஸ்தான் ஜனாதிபதியிடம் கேட்கப்பட்டது. அப்போது, பாகிஸ்தான் மீது யார் தாக்கினாலும் பாகிஸ்னுக்கு ஆப்கானிஸ்தான் ஆதரவளிக்கும். பாகிஸ்தானின் ஒரு சகோதரனாக ஆப்கானிஸ்தான் விளங்கும். ஆப்கானிஸ்தான் ஒருபோதும் தனது சகோதரனுக்கு துரோகமிழைக்காது" என ஆப்கான் ஜனாதிபதி ஹமீட் கர்ஸாய் பதிலளித்தார்.

# கடாபி உடலை உறவினர்களிடம் ஒப்படைக்க முடிவு

(திரிபோலி)

லிபியா அதிபர் கடாபி கடந்த 20ஆம் திகதி சிர்த் நகரில புரட்சிப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார். அவர் துப்பாக்கிச் சண்டையில் கொல்லப்பட்டதாக அறிவிக் கப்பட்டது. ஆனால் அவரை உயிருடன் பிடித்து தெருத் தெருவாக இழுத்து சென்று சித்ரவதை செய்து அடித்துக் கொன்றதாக சர்ச்சை எழுந்துள்ளது.

இது ஒரு புறம் இருக்க அவரது உடல் மிஸ்ரதா நகரில் ஒரு இறைச்சிக் கடையில் குளிரூட்டப்பட்ட அறையில் ஒரு பெட்டியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. இஸ்லாமிய முறைப்படி ஒரு நபர் இறந்த 24 மணி நேரத்தில் உடல் அடக்கம் செய்யப்பட வேண்டும். ஆனால் கடாபி இறந்து 4 நாட்களாகியும் இன்னும் அவரது உடல் அடக்கம் செய்யப்படவில்லை. ஏனெனில் மிஸ்ரதா நகரில் அவரை புதைக்க அப் பகுதி மக்கள் விரும்பவில்லை. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். தற்போது கடாபியின் மனைவி, மகள் மற்றும் 2 மகன்கள் லிபியாவில் இருந்து தப்பி பக்கத்து, நாடான அல்ஜீரியாவில் தஞ்சம் அடைந்துள்ளனர். அவர்கள் கடாபி, அவரது மகன் முட்டாசிம் ஆகியோரின் உடல்களை தங்களிடம் ஒப்படைக்கும்படியும், அவர் கள் கொல்லப்பட்டது குறித்து விசாரணை நடத்தும் படியும் ஐ.நா. சபையிடம் கோரிக்கை விடுத்தனர்.

அதற்கு லிபியாவின் இடைக்கால அரசு எந்த வித



கருத்தும் தெரிவிக்கவில்லை. ஆனால் கடாபியின் உடலை பிரேத பரிசோதனை செய்யமாட்டோம். மேலும் ஒரு ரகசிய இடத்தில் அவரது உடல் புதைக்கப்படும் என்றும் தெரிவித்தது. தற்போது, இந்த நிலையை இடைக்கால அரசு மாற்றிக் கொண்டுள்ளது. கடாபியின் குடும்பத்தினர் தற்போது லிபியாவில் இல்லாததால் அவரது நெருங்கிய உறவினர்களிடம் ஒப்படைத்து அடக்கம் செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அதற்கான ஆலோசனையில் இடைக்கால அரசின் தலைவர் முகமது ஜிப்ரில் ஈடுபட்டுள்ளார். இந்த தகவலை அவரது ஆலோசகர் அகமது ஜிப்ரில் தெரிவித்துள்ளார்.

# பதிவிறக்கப் பெட்டகம்

எப்பாடுபட்டேனும் ஒரு கண்ணோட்டத்திற்கு விசுவாசமாக இருப்பது என்ற கருத்து எனக்குச் சலிப்பூட்டுகிறது. நம்மைச் சூழ்ந்துள்ள வாழ்வு மாறிக்கொண்டே இருக்கிறது. அதற்கேற்றாற்போல் நாமும் நமது சாய்வுகளை மாற்றிக்கொள்ள முயற்சி செய்ய வேண்டும் – குறைந்தது பத்தாண்டுக்கொரு முறையாவது – என்று நான் கருதுகிறேன். ஒரு கண்ணோட்டத்திற்குத் தீரமிக்க அர்ப்பணிப்பு காட்டுவது என்னைப் பொறுத்தவரை அந்நியமானதொரு விஷயம். அடக்கமின்மையையே அது குறிக்கிறது.

**– போரிஸ் பாஸ்டர்நாக்**

மனித இயல்பே இரட்டை மனதுடையதோ? பெயர், ஊர் தெரிந்தவர்களின் உயிர், உடைமைக்கு ஆபத்து நேர்ந்துவிட்டால் நாம்தான் எவ்வளவு கிளர்ந்து எழுந்து விடுகிறோம். ஆனால் நமக்கு நெருக்கமாயல்லாதவர்களுக்கு எவ்வளவு பயங்கரக் கொடுமைகள் இழைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுக்கும் அனுஷ்டிப்பதானால் நமக்கு ஒவ்வொரு நாளும் துக்கம் அனுசரிக்கும் நாளாக இருக்க வேண்டும். ஆனால் சினிமாக் கொட்டகையில் தன்னைத் தாக்க வரும் பத்து ரவுடிகளைக் கதாநாயக ரவுடி அடித்து நொறுக்குவதைப் பார்க்க கூட்டம் நிரம்பி வழிகிறது.

**– அசோகமித்திரன்**

மராட்டிய சிவாஜியின் சாகச வரலாற்றுக்கும், தமிழர் வீரத்துக்கும் மிகப் பெரிய வித்தியாசம் இருக்கிறது. சிவாஜி தன்னுடைய நிலத்தை வெளியிலிருந்து வந்த ஆதிக்க வாதிகளான முகலாய மன்னர்களிடமிருந்து காப்பாற்றிக் கொள்வதற்காகப் போரிட்டான்.

ஆனால் தமிழ் மன்னர்கள் மற்றவர்களின் ராஜ்ஜியங்களைத் தங்களுடைய ஆட்சியின் கீழ்க் கொண்டுவருவதற்காகப் போரிட்டார்கள். கிழக்காசிய நாடுகளில் பறந்த சோழ மன்னர்களின் புலிக் கொடிக்கும், அதன் பின் பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு இந்தியாவில் பறந்த பிரிட்டிஷ் கொடிக்கும் அதிக வித்தியாசமில்லை. இரண்டிலும் தெரிவது ஒரே நிறம்தான்: அது ஏகாதிபத்தியத்தின் நிறம்.

**– சாரு நிவேதிதா**

நோயாளியைக் கருணையுடன் பார்க்கும் உளவியல் நிபுணன் தன்னை உயர்ந்த நிலையிலும், தான் ஆய்வு செய்யும் நோயாளியைத தனக்குக் கீழாகவும் பார்க்கிறான். அவனது கருணை நாம் ஆதரவற்ற நாய்க்குட்டியைப் பார்த்துக் கருணை கொள்வது போலத் தான். குடிசைப் பகுதிகளில் ஆய்வு நடத்தும் சமூகவியலாளன் குடிசைவாசிகளைப் பார்த்துக் கருணையுடன் நடந்து கொள்வதும், கிராமங்களைப் பற்றிய ஆய்வு செய்யும் நபர்கள் தங்களை உயர்ந்த நிலையில் நிறுத்திக் கிராம ஜனங்களைப் பார்த்துப் பரிதாபப்படுவதும் அதேபோன்றதுதான்.

**– ஜி.எஸ்.ஆர். கிருஷ்ணன்**

புரட்சியின் தலைவர்களின் ஆணைகளும் அவர்கள் விதிக்கும் மரண தண்டனைகளும் மனிதர்களிடத்தில் மாற்றம் ஏற்படுத்தும் என்பதை என்னால் ஏற்க முடியாது. அது வெறும் பிரமையே. அருவமான முழக்கங்கள், சூத்திரங்களின் பெயரால் செய்யப்படும் வன்முறையை நான் நிர்த்தாரணமாக எதிர்க்கிறேன். உன்னதமான இலக்கைத் தூய்மையான வழிமுறைகள் மூலமே அடைய முடியும். மனிதனிடம் இருக்கிற தீமையை அல்லது விலங்குத்தன்மையைப் போக்குவதற்கு அச்சுறுத்தலையும் கொடிய பயங்கரவாதத்தையும் பயன்படுத்தினால் நாம் உருவாக்க விரும்பும் 'இலட்சிய மனிதன்' சர்க்கஸ் கூடாரத்தில் சவுக்குக் கொண்டு விலங்குகளைப் பழக்கும் மனிதனாகத்தான் இருப்பானேயன்றி ஏசுகிறிஸ்துவாக அல்ல. பொய்மையைக் கொண்டு ஒரு புதிய சமுதாயத்தைக் கட்ட முடியாது.

**– Dr.Zhivago நாவலில்**

மனிதர்கள் சுதந்திரமாக இருக்கும்படி விதிக்கப்பட்டுள்ளனர். ஒரு காகிதத் துண்டு தான் காகிதத் துண்டாக இருக்கும் நிலையைப். போக்கிக் கொள்ளும் சுதந்திரத்தைக் கொண்டிருப்பதில்லை. ஆனால் காகிதத் துண்டில் உள்ளவற்றைப் படிப்பதை நிறுத்திவிடும் சுதந்திரம் மனிதர்களுக்கு உண்டு. இத்தகைய சுதந்திரம் பற்றிய விழிப்புணர்வு அச்சமூட்டக்கூடியதாக இருக்கலாம். இது மலைமுகட்டின் மீது நின்றுகொண்டிருக்கையில் ஏற்படும் தலைச்சுற்றலுக்கு ஒப்பானது. இன்னும் ஓரங்குலம் நகர்வதற்கான சுதந்திரம் அதலபாதாளத்திற்கு நம்மை இட்டுச் சென்றுவிடும் என்பது நமக்குத் தெரியும். எனவே சுதந்திரத்திலிருந்து நாம் ஒளிந்து கொள்கிறோம்.

**– சார்த்தர்**

சட்டத்தை மீறுதல் என்பதால் மட்டுமே குற்றம் நிகழ்வதில்லை. மற்றொருவனின் வாழ்நிலை அபாயத்திற்குள்ளாவதற்கோ அல்லது வழிதவறிச் செல்வதற்கோ, ஏன் அது நாசமடைவதற்கோ நாமும் பொறுப்பாவதன் மூலமே குற்றம் நிகழ்கிறது.

**– மார்ட்டின் ஹைடெக்கர்**

அரசியலிலிருந்து தப்பியோடுதல் என்பது சாத்தியமில்லை. அது காற்றைப் போல.

**– நகூப் மக்ஃபூல் நாவலில்**

# இந்திய வரம்?

- கிருஷ்ணமூர்த்தி அரவிந்தன் கட்டுரையிலிருந்து...

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த ரஞ்சன் மாத்தாய், இந்திய அரசின் உதவியில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீடமைப்பை நேரிற் சென்று பார்வையிட்டார்.

கிளிநொச்சி மாவட்டம் - பச்சிலைப் பள்ளிப் பிரதேசத்தில் ஏ9 (கண்டி - யாழ்ப்பாணம்) வீதியோரத்தில், இயக்கச்சிக்கு அண்மையில் உள்ள கரந்தாய என்ற இடத்தில் இந்த வீட்டுத்திட்டம் அமைந்துள்ளது. இதில் ஐம்பது வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

இந்த வீடுகளை இந்தியாவே தன்னுடைய நேரடிப் பொறுப்பில் கட்டியுள்ளது. வீடுகளை அமைப்பதற்கான காணிகளை வழங்கியமை மட்டுமே இலங்கை அரச அதிகாரிகளின் பொறுப்பு என்று சொல்லப்படுகிறது. வீடுகளுக்கான பயனாளிகளைத் தெரிவு செய்வதும் இலங்கை அரச அதிகாரிகளின் பொறுப்பாகும்.

மற்றும்படி வீடுகளின் வடிவமைப்பு, அதை கட்டிமுடிப்பது எல்லாமே இந்தியாவின் பொறுப்பு. இந்த வீடுகள் ஒவ்வொன்றும் இலங்கை ரூபாயில் 1.2 மில்லியன் பெறுமதியில் அமைக்கப்பட்டவை என்று சொல்லப்படுகிறது. அதாவது பன்னிரண்டு லட்சம் ரூபாய் செலவில் ஒவ்வொரு வீடும் அமைக்கப்படுகிறது. இந்தச் செய்தியை மாத்தாய் வந்தபோதே தாம் அறியக் கூடியதாக இருந்ததாக இந்த நிகழ்வின் போது உடனிருந்த ஒரு அதிகாரி தெரிவிக்கிறார்.

ஆனால், இங்கே அதிசயமும் ஆச்சரியமும் என்னவென்றால், இந்த வீடுகள் இப்போது அமைக்கப்பட்டிருப்பது சுமார் ஐந்து லட்சத்துக்கும் ஆறுலட்சத்துக்கும் இடைப்பட்ட இலங்கை ரூபாயின் பெறுமதியிலேயே. அப்படியென்றால் மீதிப்பணத்திற்கு என்ன நடந்தது? இடையில் யார் அதை வழிமாற்றியது?

'ஊழல் செய்வதில் இந்தியர்கள் புகழ்பெற்றவர்கள், கூச்சமடையாதவர்கள்' என்று கூறப்படுவதுண்டு. இது உலகறிந்த விசயமும் கூட. ஆனால், பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவியிற்கூடவா இப்படிக் கொள்ளை? என்று நிலைமையை நேரிற் பார்த்த மாத்தாயே அதிர்ந்து போனாராம்.

இந்த நிகழ்வுக்கு யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தில் இருக்கும் திரு. மகாலிங்கம் என்பவரும் வந்திருந்தார். அவரிடம் இலங்கை அதிகாரிகளில் ஒருவர் 'என்ன நடந்தது?' என்று விவரம் கேட்டிருக்கிறார். அதற்கு அவர் எந்தப் பதிலும் சொல்லவில்லை என்று சொல்லப்படுகிறது.

சரி, ஐந்தோ ஆறோ லட்சம் ரூபாய்க்கு அமைக்கப்பட்ட வீடுகளாக இருந்தாற் கூடப் பரவாயில்லை. ஆனால், அவற்றை ஒழுங்காகத் தரமான முறையில் அமைத்திருக்கலாம். அப்படி அமைக்கப்படாததே இங்கே பிரச்சினை. அதிலும் அடிப்படைத்தகுதிகள் இல்லாதிருப்பதே இப்போது பிரச்சினை என்கின்றனர் இலங்கை அதிகாரிகளும் மக்களும்.

முக்கியமாக சில வீடுகள் இப்போதே - மக்கள் இன்னும் குடியேறுவதற்கு முன்பே - பாதிப்படைந்துள்ளன. சில வீடுகள் வெடித்துள்ளன. சில வீடுகளின் அத்திபாரக்கட்டுகளே உரிய முறையில் அமைக்கப்படவில்லை என்பது வெளிப்படையாகவே தெரிகிறது.

மலசலகூடங்கள் பாவிப்பதற்கு முன்னரே உடைந்துள்ளன. அவற்றை அயலவர்கள் ஆதாரபூர்வமாகச் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த வீடுகள் ஒவ்வொன்றும் இரண்டு அறைகளும் ஒரு சிறிய உள்மண்டபமும் கொண்டவை. சமையற்கூடம் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் புகை போக்கி கிடையாது. இந்த நிலையில் தாம் எப்படிச் சமைப்பது? என்று கேட்கின்றனர் மக்கள். பிரதேசத்தின் அமைப்புக்கும் மக்களின் நிலைமைக்கும் - இயல்புக்கும் ஏற்ற சமையற்கூடமாக அவை அமைக்கப்படவில்லை என்று இந்த வீடுகளுக்கு அண்மையில் வசிப்போர் கூறுகிறார்கள்.

மாத்தாய் இந்த வீடுகளைப் பார்த்ததும் தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளார். அவர் முறைப்படி இந்த வீடுகளை இலங்கை அதிகாரிகளிடம் ஒப்படைக்கவே அந்த நிகழ்வில் கடந்த 09. 10. 2011 அன்று அங்கே கலந்து கொண்டிருந்தார். 'மக்கள் குடியேறுவதற்கு முன்னர் செய்ய வேண்டிய வேலைகளைச் செய்து விடவேணும்' என்று மாத்தாய் அறிவுறுத்தியிருக்கிறார். ஆனாலும் 'இந்த அறிவிப்போ உத்தரவோ நடைமுறைப்படுத்தப்படும் என்று சொல்வதிற்கில்லை' என்கின்றனர் பிரதேச வாசிகள்.

காரணம், இந்த வீடுகளை அமைக்கும் காலத்திலிருந்தே தாம் அவதானித்து வருவதை வைத்துப் பார்த்தால், 'போடுவது பிச்சை. அதாவது தருவது இலவசம். அதில் பிறகென்ன நிபந்தனைகளும் தரமும் வேணும்' என்று கேட்டிருக்கிறார்கள் ஒப்பந்தகாரர்கள். இனியும் இதுதான் நடக்கப்போகிறது என்று சனங்கள் கூறுகின்றனர்.

'இதைக் கண்காணிப்பதற்கோ நடவடிக்கை எடுப்பதற்கோ தமக்குச் சொலலப்படவில்லை. அதாவது அதிகாரமளிக்கப்படவில்லை' என்கின்றனர் இலங்கை அதிகாரிகள். மட்டுமல்ல, 'இந்த விசயத்தில் தாம் எதையும் பேச விரும்பவில்லை' என்றும் அவர்கள் சொல்கின்றனர்.

இதில் கவனிக்க வேண்டிய இன்னொரு விசயமும் உண்டு. முதலில் இந்த ஒப்பந்தத்தை எடுத்தவர், ஒரு இந்தியர் என்றும் அவரிடமிருந்து பின்னர் பல கைகளுக்கு மாறி மாறி தற்போது இலங்கையர்களே வீடமைக்கும் வேலைகளைச் செய்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய உதவித்திட்டம் தொடர்பாக



உத்தியோகபூர்வமாக அதிகாரிகள் மட்டும் வாய்திறக்க மறுக்கிறார்கள் என்றில்லை. அரசியல்வாதிகளும் இதைப பற்றிப் பேசவில்லை. அதற்கு அவர்கள் தயாரும் இல்லை. ஆனால், இந்த முன்னோடித்திட்டத்திலேயே இத்தகைய குறைபாடுகள் என்றால் மொத்தமாக அமைக்கப்படவுள்ள ஐம்பதினாயிரம் வீடுகளின் கதியென்ன? என்ற கேள்வி எழுகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் மேலும் பல முன்னோடி வீடுகள் இவ்வாறு அமைக்கப்பட்டு வருகின்றன. அவற்றின் நிலையும் ஏறக்குறைய இதுதான்.

இலங்கையில் அரசியற் பிரச்சினையில் இந்தியா ஒரு உருப்படியான தீர்வை வழங்க முயற்சிக்கவும் இல்லை. அதற்காக அது விசுவாசமாகச் செயறபடவும் இல்லை என்ற விமர்சனங்கள் பகிரங்கமானவை. இன்னும் மங்கலும் குழப்பமும் கூடிய அணுகுமுறைகளையே இலங்கை விவகாரத்தில் அது பின்பற்றி வருகிறது. இத்தகைய அணுகு முறையினால், இந்தியா முழுவெற்றியைப் பெற்றுள்ளது என்றில்லை. இந்தியாவின் கைகளை மீறியே சென்று கொண்டிருக்கிறது நிலைமை. பிராந்திய ஆதிக்கத்தில் சீனா, தீர்மானகரமான சக்தியாகத் தனக்குரிய இடத்தைப் பெற்றுக் கொண்டு வருகிறது. ஆனால், இந்தியா இன்னும் நிதானத்துக்கே வரவில்லை.

அதைப்போலவே 'யுத்தத்தினாற் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீடமைப்பிலும் இந்தியா குறைபாட்டுடன் தான் நடந்து கொள்கிறது' என்ற சலிப்பு இந்தியாவைப் பற்றிய எதிர்மறைச் சித்திரத்தையே தமிழ் மக்களிடத்தில் மேலும் உருவாக்கும்.


# நிம்மதி இழக்க வைக்கும் நிழல்கோடுகள்

இனம் தேசியம் என்கிற எல்லைகளுக்கு அப்பாலுள்ள இலங்கையை மீண்டும் கற்பனை செய்து பார்க்கும்படி நான் பரிந்துரைக்கிறேன். தமிழ் ஈழம் என்கிற பிரதேசமோ அல்லது மத நம்பிக்கையற்றவர்கள் மத்தியில் ஏராளமான புத்தர் சிலைகளை நிறுவும் முயற்சியும் எங்களுக்கு அவசியம் இல்லை. சிங்களவர்களையும் தமிழர்களையும் இங்கேயும் அங்கேயுமாக குடியேற்றும் முயற்சியும் தேவையற்றது. எங்களுக்குத் தேவையானது வேறொன்று.

எங்களுக்கு இன்னுமின்னும் அதிகமான இனங்கள் தேவையில்லை. இலங்கையில் உள்ள ஒரே ஒரு பிரச்சினை இந்த இன - தேசிய மோதல்களே. எங்களிடையே அளவுக்கதிகமாக புத்தர் மீது நேசங்கொண்ட சிங்கள பேரினவாத வெறியர்கள் உள்ளனர். எங்களிடையே அளவுக்கதிகமாக புலிக்கொடிகளை அசைக்கும் தமிழீழ நேசங்கொண்ட தேசியவாதிகள் உள்ளனர். எல்லாமே அளவுக்கதிகமானவை. இந்தத் தனிநபர்கள் வாழ்க்கையை ஒரு தீவிரமான கருத்தினூடாகப் பார்க்கிறார்கள். இனங்களின் பிரத்தியேகத் தன்மை ஊடாக சமூக ஒட்டுறவை அடையும் ஒரு உலகத்துக்கு தீவிரவாதக் கறைகள் அகற்றப்பட்ட இன - தேசிய அனுபவங்கள் அவசியமாகின்றன.

இலங்கையின் தேசியத்துக்கான எல்லைகள், அநேகமான சிறு பான்மை இனத்தவரை வெளியே நிறுத்திசுற்றிலும் சுவர்களை எழுப்பியுள்ளன. அங்கு சிறுபான்மை இனம் வெளியார்களாக உணரப்பட வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

தமிழ் சமூகத்திலுள்ள சிலர் இந்த இனங்களை விலக்கி வைக்கும்




பிரத்தியேகத் தன்மைக்கு தங்களுக்கே உரிய பிரத்தியேகத் தன்மையூடாகவே பதில் அளித்திருந்தார்கள். இது தான் தமிழ் தேசியவாதம். அவர்களின் இன - தேசியவாதம், சிங்களவர்களின் இன -தேசியவாதத்துக்கு முன்னால் கொடூரத் தன்மையில் சற்றும் குறைவானதல்ல.

தமிழ் இன - தேசியவாதம் நிலமைகளை சீராக்க உதவவில்லை. மாறாக அதை மேலும் மோசமடையவே வைத்தது. அதையும்விட அங்கு இருந்த தீர்மானகர சக்திகள், இதற்கான ஒரே பதில் தமிழர்களுக்கான தனிநாடு ஒன்றுதான் என நம்பினார்கள். இந்த சுயமாக தீர்மானம் மேற்கொள்ளும் சக்திகள் இன்னும் அழகாக கூறுவது 'சிங்கள பேரினவாதிகளே நீங்கள் தெற்கை வைத்துக் கொள்ளலாம், தமிழ் பேரினவாதிகளான எங்களுக்கு வடக்கை மட்டும் தந்து விடுங்கள்' என்று.

இந்த இன - தேசியவாதிகள் மிகவும் சுலபமாக எண்ணுவது போலத் தெரிவது என்னவென்றால் சிங்கள மற்றும் தமிழ் மக்கள் இந்த நாட்டில் அந்நியமானவர்களாக எண்ணாமலிருந்தால் பிரச்சினைகள் யாவும் முடிவுக்கு வந்துவிடும் என்று. நம்பிக்கையாக இரத்தக் கலப்புள்ளவர்களும் மற்றும் முஸ்லிம்களும் அடுத்ததாக முறைப்பாடு செய்ய விரும்பமாட்டார்கள் என்று. இதில் துயரமான யதார்த்தம் என்னவென்றால் இந்த இன- தேசியவாதம் ஒருபோதும் பிரச்சினையை தீர்க்காது. அது பிரச்சினைக்கு எரியூட்டவே செய்யும். நாங்கள் எமது வாழ்க்கையை இனம் தேசியம் என்கிற பிரிவினைகளுக்கு அப்பால் மீண்டும் கற்பனை செய்து பார்க்கவேண்டும்.

நாங்கள் மட்டுப்படுத்தப் பட்டதாகவுள்ள இந்த இன - தேசிய தீர்மானகரத்திலிருந்து விழித்துக் கொள்ள வேண்டும். ஒரு அருமையான நாட்டின் மனிதர்களுக்கான ஒரு சமூகத்தை உருவாக்குவதில் உள்ள உண்மையான சாத்தியங்களை அனுபவிக்க மனிதர்களாகிய எங்களை அது ஒருபோதும் அனுமதிக்காது. சாதாரணமாக சிங்களவர்களுக்கும் மற்றும் தமிழர்களுக்கும் மட்டுமே உருவாக்கப்பட்ட ஒரு பூமியல்ல இது. ஆனால் சலுகைகள் குறைவாக வழங்கப்பட்ட பெண் மற்றும் ஒதுக்கப்பட்ட மத்தியதரத்தினர் போன்றவர்களையும் வரவேற்கிற பூமி. உலகமயமாக்கப்பட்ட ஒரு வீட்டை உருவாக்குவதை, இன்னும் சொல்வதானால் எங்களது மட்டுபபடுத்தப்பட்ட இன - தேசிய ஈடுபாடுகளிலிருந்து விடுதலை அடைவது தான் இலங்கை ஒரு தீர்வை எட்டுவதற்கான மிக அருகிலுள்ள வழி. நாங்கள் சமூகங்களை உருவாக்கவும் மற்றும் பழமைவாத உருவகங்களிலிருந்து விடுபட்டு இன்னமும் மேம்பட்ட உருவாக்கமுள்ளவர்களாக எங்களை நிலைநிறுத்திக் கொள்வதற்கு தேவையான பல விதமான சாத்தியங்களைப பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும்.

இன்னும் இந்த இலட்சியங்கள் மீதுள்ள மிகுந்த மரியாதையுடன் நான் சொல்வது இவைகள் நம்மை விட்டு போக அனுமதிக்கும்படி. போகட்டும், இல்லாவிட்டால் சில அறிவார்ந்த சாதனைகளை எம்மால் கைப்பற்ற முடியாதிருக்கும். நியாயமாக நான் நம்புவது அதுதான் நம்முடைய சந்ததிக்கு நல்லது என்று. எங்கள் பிள்ளைகள் மட்டுப்படுத்தப்பட்ட தேசிய எல்லைகள் என்று முத்திரையிடப்படாத பூமியில் வளர்வதாக இருக்கும். அந்தப் பூமி எந்த மனிதனுக்கும் ஊக்கம் தருவதாக இருக்கும். அது இன்னும் உங்களின் தோலின் நிறம் அல்லது பேசும் மொழி என்பனவற்றுக்கு முன்னுரிமை வழங்காமல் சமாதானம், நீதி, சுதந்திரம் மற்றும் சமத்துவம் என்பதை உத்தரவாதப் படுத்தும்.

எதுவும் எப்போதும் நிரந்தரமானதல்ல என்பதை அது ஏற்றுக் கொள்ளும். அந்த விடயங்கள் காலத்துடன் மாறுதலடையும். ஒருநாள் அது இந்த தூய இன அடையாளங்களை காலம் கடந்த ஒரு கதையாக ஆக்கும்.

நன்றி : கிரவுன்ட் வியூஸ்

# வடமராட்சி கிழக்கு மீனவர்களின் பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் ஐஸ் தொழிற்சாலையொன்று அமைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஐ.ஓ.எம் நிறுவனம் இதற்கான நிதியுதவியினை வழங்க முன்வந்திருப்பதாகவும் கடற்றொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடமராட்சி கிழக்குப் பகுதி மீனவர்கள் அப்பகுதியில் ஐஸ் உற்பத்தி தொழிற்சாலையொன்று இல்லாததன் காரணமாக நீண்ட தூரம் வந்து யாழ். நகரிலிருந்தும் வவுனியாவிலிருநதும் ஐஸ் எடுத்து வந்து தமது மீன் பதனிடல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே இப்பிரதேசத்தில் ஐஸ் உற்பத்தித் தொழிற்சாலையொன்றை நிறுவி அதன் மூலம் வடமராட்சி கிழக்கு மீனவர்களுக்கு தேவையான ஐஸ் உற்பத்தி செய்து வழங்குவதற்கு யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துவருகிறது.

நேற்றுமுன்தினம் வேலணை, துறையூர் பகுதியில் இவ்வாறு அமைக்கப்பட்ட ஐஸ் உற்பத்தி தொழிற்சாலையையும் குளிரூட்டி அறையினையும் கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன திறந்துவைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதுபோன்ற வசதிகள் வடமராட்சி கிழக்குப் பகுதி மக்களுக்கும் ஏற்படுத்திக் கொடுக்கும் முயற்சிகள் தற்சமயம் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரியவருகின்றது. (பா)

# வெளிநாட்டு இலங்கையர்களின் இணையத்தளங்களால் அபகீர்த்தி

## தடை குறித்தும் ஆலோசனை

(கொழும்பு)

வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களால் நடத்தப்படும் இணையத்தளங்களால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும், அவரது அரசாங்கத்திற்கும் அபகீர்த்தி ஏற்பட்டுள்ளதாகவும், எனவே அந்த இணையத்தளங்களை இலங்கையில் பார்வையிட முடியாதபடி தடைசெய்வது பற்றி தாம் சட்டமா அதிபருடன் ஆலோசனை நடத்தி வருவதாகவும் ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் கனேகல தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனையை கேட்டிருப்பதாகவும், அவரின் ஆலோசனை கிடைத்தவுடன் அந்த இணையத்தளங்கள் தடைசெய்யப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் உள்ளவர்களால் நடத்தப்படும் இணையத்தளங்களிலேயே அரசுக்கு அபகீர்த்தி ஏற்படும் வகையில் செய்திகள் வெளியிடப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

# நாட்டில் இனச்சுத்திகரிப்பு என்ற குற்றச்சாட்டில் உண்மை இல்லை



(கொழும்பு)

நாட்டில் இனச்சுத்திகரிப்பு மேற்கொள்ளப்படுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்களில் எவ்வித உண்மையுமில்லையெனவும், அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்களை கூட்டமைப்பினர் முன்வைக்கக்கூடாதெனவும் ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் மிகவும் சவால்களுக்கு மத்தியில் ஈட்டப்பட்ட சமாதானத்தை சீர்குலைக்கும் முயற்சிகளுக்கு அனுமதி அளிக்கப்பட மாட்டாது.

பொரளையில் ஆரம்பத்தில் 68 வீதமான சிங்களவர்கள் வசித்து வந்தனர். தற்போது 40 வீதமான சிங்கள மக்களே பொரளையில் வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறான ஓர் சந்தர்ப்பத்தை அடிப்படையாகக் கொண்டு பொரளையில் சிங்கள இனச் சுத்திகரிப்பு இடம்பெறுவதாக குறிப்பிட முடியாது.

முன்னாள் புலி உறுப்பினர்கள் சமூகத்துடன் இணைக்கப்பட்டு வருகின்றனர். இவ்வாறு சமூகமயப்படுத்தப்படும் அவர்கள் சாதாரண பணிகளில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கடாபியின் கொலை தொடர்பில் மேற்கு நாடுகள் இரட்டை நிலைப்பாடு

(கொழும்பு)

இலங்கை மீது போக்குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் மேற்கத்தைய நாடுகள், லிபியாவின் முன்னாள் தலைவர் கேணல் முவம்மர் அல் கடாபியின் கொலை தொடர்பில் இரட்டை நிலைப்பாடுகளை கடைபிடிப்பதாக சட்டவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

உயிருடன் பிடிக்கப்பட்ட கடாபி பின்னர் தாக்கப்பட்டு கொல்லப்பட்டமை யுத்த குற்றங்களில் ஒன்றுதான் என்று சிரேஷ்ட சட்டத்தரணி கோமின் தயாசிறி குறிப்பிட்டுள்ளார்.

அதேபோன்று, இலங்கைமீது யுத்தக்குற்றச்சாட்டுகளை சுமத்தும் மேற்குலக நாடுகளின் ஊடகங்கள், கடாபி தாக்கப்பட்டமையை உலகம் முழுவதும் நேரடியாக ஒளிபரப்பியதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



லிபியாவின் நெருக்கடிக்கு அமெரிக்க உள்ளிட்ட மேற்குலக நாடுகள் ராணுவ ரீதியான தலையீட்டை மேற்கொள்ளாத போதும், அவர்கள் நேரடியான பொறுப்பு கூற வேண்டியுள்ளவர்களாக இருப்பதாக சிரேஷ்ட சட்டத்தரணி கோமின் தயாசிறி குறிப்பிட்டார்.

அதேவேளை, சனல்-4 போன்ற ஊடகங்களும் கேணல் முவம்மர் கடாபியின் கொலை தொடர்பில் அமைதியான போக்கை கடைபிடித்து வருவதாகவும் அவர் குற்றம்சுமத்தியுள்ளார்.

# சிறை அதிகாரிகளின் சீருடையை அணிந்து நடமாடிய யுவதி கைது

(கொழும்பு)

அநுராதபுரம் புதிய பஸ் நிலையப் பகுதியில் சிறைச்சாலை அதிகாரிகளின் சீருடையை அணிந்தவாறு சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியதாகத் தெரிவிக்கப்படும் யுவதியொருவர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளதாக அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியதாகத் தெரிவிக்கப்படும் யுவதியிடம் விசாரணை மேற்கொண்டபோது, தான் வெலிக்கடை சிறைச்சாலையில் சேவையாற்றுவதாக கூறினார். இருப்பினும் அவரிடம் எந்தவொரு அடையாள அட்டையும் இல்லாததால் சந்தேகமடைந்த பொலிஸார் வெலிக்கடை சிறைச்சாலையில் விசாரித்தபோது அவ்வாறான ஒருவர் அங்கு சேவையாற்றவில்லையென தெரிவித்துள்ளனர்.

## சர்வதேசத்தின் எதிர்பார்ப்பு...

குறித்து பலர் கேள்வி எழுப்புகின்றனர், இது ஓர் மனிதாபிமான அடிப்படையில் நடைபெற்ற சம்பவமாகும். துமிந்தவை பாதுகாக்க வேண்டிய அவசியம் எதுவும் இல்லை.

முல்லேரியா துப்பாக்கிச்சூட்டு சம்பவம் இடம்பெறுவதற்கு முதல் நாள் துமிந்த தமது அபிவிருத்திப் பணிகளுக்கு உதவிகளை வழங்கியிருந்தார். மறுநாள் அவர் விபத்தொன்றில் சிக்கிய அவரைப் பார்வையிடுவதில் என்ன தவறு?

துமிந்தவை விடவும் பாரதவை எனக்கு நீண்டகாலமாகத் தெரியும். பாரத ஜனாதிபதியின் நெருங்கிய ஆதரவாளர். பாரத படுகொலைச் சம்பவம் தொடர்பில் பிழையான கருத்துக்களை மக்கள் முன் எடுத்துச்செல்ல சிலர் தயங்குகின்றனர்.

அச்சுறுத்தல் இருப்பதாக பாரத எவ்வித முறைப்பாட்டையும் செய்யவில்லை. முறைப்பாடு செய்வதற்கு அவருக்கு போதிய சந்தர்ப்பம் காணப்பட்டது.

அரசியல்வாதிகள் தனியார் பாதுகாப்புப் படையினரை சேவையில் ஈடுபடுத்தக்கூடாது என நீண்டகாலமாக வலியுறுத்தி வருகிறேன் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மீன்பிடித் தடை...

மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்கள், வலைகள் எவையும் கைப்பற்றப்படவில்லை.

எதிர்காலத்தில் தொடர்ந்தும் இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் றோலர் மூலமாக தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறையைப் பயன்படுத்தி மீன்பிடிப்பது கட்டுப்படுத்தப்படவுள்ளதாகவும் ரவீந்திரன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் குடாநாட்டிற்கு விஜயம் செய்த கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்னவிடம், கடற்றொழில் சமாசம் கையளித்த மகஜரில் குருநகர் மற்றும் வல்வெட்டித்துறைப் பகுதியில் மேற்கொள்ளப்படும் றோலர் மீன்பிடியைக் கட்டுப்படுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தும், இது தொடர்பாக நேற்று முதல் சட்டவிரோத மீன்பிடியை கட்டுப்படுத்துமாறு அதிகாரிகளுக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (பா)

# கடற்படையினர் மீதான வழக்கு நவம்பர் மாதத்திற்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

கடற் படையினரின் டீசலை மோசடியாகப் பெற்று விற்றதாகக் குற்றம் சாட்டப்பட்ட நான்கு கடற்படை வீரர்கள் உட்பட ஏழு பேர் மீதான வழக்கு எதிர்வரும் நவம்பர் 2 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

கடற்படையினரின் டீசலைப் பெறுவதற்குரிய உத்தரவு புத்தகத்தை திருடி அதிலிருந்து பதினொரு வவுச்சர்களைப் பயன்படுத்தி பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தில் இருந்து 270.600 லீற்றர் டீசலை பெற்றதாக வெலிசறை கடற்படை முகாமைச் சேர்ந்த நான்கு கடற்படை வீரர்கள், இவர்களுக்கு உதவிய பெற்றோலியக் கூட்டுத்தாபன இரு ஊழியர்கள், இரு எரிபொருள் விற்பனை நிலையங்களின் உரிமையாளர்கள் ஆகியோர் மீது குற்றப் புலனாய்வுப் பொலிஸார் வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர். 2007 மே 30 ஆம் திகதிக்கும் 2007 மார்ச் 25 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் இவர்கள் இக்குற்றத்தை செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

எரிபொருள் விற்பனை உரிமையாளர்கள் மூலம் டீசலை களஞ்சியப்படுத்தி வைத்து விற்றதாகவும், பெற்றோலிய கூட்டுத்தாபன இரு ஊழியர்கள் டீசலை வேறு எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கு கொண்டு சென்றதாகவும் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

பொதுச்சொத்துக்கள் சட்ட விதிகளின் கீழ் இவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. சந்தேக நபர்களை கோட்டை நீதிவான் எதிர்வரும் 2 ஆம் திகதி வரையும் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

## விரிவுரை...

எனவும் இவ்விடத்தில் சுட்டிக்காட்டியதாகவும், இவ்வியடம் குறித்து முறைப்படியான தீர்வொன்றைப் பெற கலந்து கொண்ட சமூகப் பிரதிநிதிகள் உறுதியளித்துள்ளனர்.

எனவே இன்று இது சம்பந்தமாக இடம்பெறும் கூட்டத்தில் முக்கிய தீர்மானங்களை நாங்கள் எடுக்கவுள்ளோம். இந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் அமுலில் இருக்கின்ற வகுப்பு பகிஷ்கரிப்பை எவ்வாறு கையாளுவது என்ற முடிவை எடுக்க தீர்மானித்துள்ளோம் என்றார்.

இக்கலந்துரையாடலில் பல்வேறு தரப்பினரை சேர்ந்த பொதுப் பிரதிநிதிகள், அரசியல் கட்சித் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், வைத்தியர்கள், சமூகப் பிரதிநிதிகள் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சமூகப் பெரியார்கள் எனப் பலரும் கலந்துகொண்டு தங்களது ஆலோசனைகளை கூறினர். (எப்.எஸ்)

# திவிநெகும பயனாளிகளுக்கு விவசாய உள்ளீடுகள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதற்கென பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் திவிநெகும செயற்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ள பயனாளிகளுக்கு மேலும் ஒரு தொகுதி விவசாய உள்ளீடுகள் வழங்கப்படவுள்ளன.

நாடளாவிய ரீதியாக அமுல்படுத்தப்பட்டுவரும் இத்திட்டத்தில் யாழ். மாவட்டப் பயனாளிகளும் பயன்பெற்று வருகின்றனர்.

இதன் அடிப்படையில் இத்திட்டத்திற்கென தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு ஏற்கனவே விவசாய உள்ளீடுகள் வழங்கப்பட்டிருந்தன.

எனினும் தற்போது மேலும் ஒரு தொகுதி விதை இனங்கள் இப்பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளதுடன் எதிர்வரும் 27 ஆம திகதி தேசிய ரீதியில் மர நடுகைத் தினம் காலை 9.00 மணிக்கு சகல பிரதேச செயலர் பிரிவுகளிலும் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. (26)

# ஆசிரியர்களால் பாரபட்சமாக நடத்தப்படுகின்றனர் மாணவர்கள்



(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளில் ஆசிரியர்களால் மாணவர்கள் பாரபட்சமாக நடத்தப்படுவதாக யாழ் அரச அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்ற சிறுவர் உரிமைகளும், செய்தி அறிக்கையிடுதல் எனும் தொனிப்பொருளில் ஊடகவியலாளருக்கான செயலமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தரமான கல்வி மாணவர்களுக்குக் கிடைக்கவேண்டும் என்பது சிறுவர்களது உரிமை ஆனால சில ஆசிரியர்கள், அதிபர்களின் செயற்பாட்டால் சிறுவர்களுக்குத் தரமான கல்வி கிடைப்பதில்லை. குடாநாட்டுப் பாடசாலை ஒன்றில் ஒருசில ஆசிரியர்கள் மாணவர்களை சாதி அடிப்படையில் பாரபட்சம் காட்டுகின்றனர்.

பாரபட்சம் காட்டும் ஆசிரியர்களிடமிருந்து தரமான கல்வி மாணவர்களுக்குக் கிடைக்கமாட்டாது. இதுவுமொரு சிறுவர் உரிமை மீறல் எனவும் தெரிவித்தார்.

8.30 மணிக்கு ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்பட்டு காலை 9.40 ஆரம்பமான நிகழ்வில் தேசிய சிறுவர் சட்டத்தரணி, பாதுகாப்பு அதிகாரசபையின் சார்பில் சட்டத்தரணி இப்ராஹிம், வளவாளர்களாக சட்டத்தரணியும் திறந்த பல்கலைக்கழக விரிவுரையாளருமான சுபாஸ், வலம்புரிப் பிரதம ஆசிரியர். ந.வியஜசுந்தரம், சிறுவர் அபிவிருத்திக்கும் பால்நிலை விருத்திக்கும் என்ற அமைபபின் தலைவி பொன்மலர் இராஜசுந்தரம் மற்றும் வைத்தியக் கலாநிதி சிவயோகன் ஆகியோர் கருததுரைகளை வழங்கினர்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அனுசரணையுடன் மாவட்ட சிறுவர் அபிவிருத்தி அலுவலகம் ஏற்பாடுசெய்த இச் செயலமலமர்வு இன்றும் நடைபெறவுள்ளது. (116)

# கொலைச் சந்தேகநபருக்கு விளக்கமறியல் நீடிப்பு

கிளிநொச்சி வட்டக்கச்சிப் பகுதியில் பெண்ணொருவரைக் கொலை செய்து, அவரிடமிருந்த நகைகளைக் கொள்ளையடித்தார்கள் எனத் தெரிவித்து கைதுசெய்யப்பட்ட மூன்று சந்தேகநபர்களுக்குமான விளக்கமறியல் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த எட்டாம் திகதி இடம் பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்ட இவர்களை நேற்றைய தினம் வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

இந்த நிலையில் நேற்றைய் தினத்துடன் இவர்களின் விளக்கமறியல் காலம் நிறைவுபெறுவதைக் குறித்த சந்தேகநபர்களை நேற்றையதினம், மீளவும் நீதிமன்றலில் ஆஜர்ப்படுத்திய வேளை இவர்களை எதிர்வரும் 7 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (கே)

# சிறுமி மீது துஷ்பிரயோகம் வயோதிபர் சிக்கினார்

மட்டக்களப்பு - கரடியனாறு பகுதியில் சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியதாக சந்தேகிக்கப்படும் 63 வயதுடைய வயோதிபர் கைது செய்யப்பட்டுள்ளார். காடியனாறு பன்குடாவெளி பகுதியில் வைத்து கடந்த மாதம் சிறுமி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டதாக நேற்று முன்தினம் கரடியனாறு பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக கைது செய்யப்பட்ட 63 வயது நபரை பொலிஸார் நேற்று மட்டக்களப்பு நீதிமன்றத்தில் நிறுத்தியபோது சந்தேகநபரை 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்

# சிறைக் கைதிகளுக்கும் காப்புறுதித் திட்டம் அமுல்

நீண்ட காலமாக சிறைத்தண்டனையை எதிர்நோக்கிவரும் கைதிகளுக்கான காப்புறுதி திட்டமொன்றை புனர்வாழ்வு மற்றும் சிறைகள் சீர்திருத்த அமைச்சு அடுத்த மாதத்திலிருந்து அறிமுகப்படுத்தவுள்ளது.

"ஒரு சிறைக்கைதி புரிந்த குற்றத்தின் அடிப்படையிலேயே இந்த காப்புறுதி திட்டம் அமையும். அவர்களின் ஒழுக்கத்தையும் நாம் கவனத்திலெடுப்போம்" என தேசிய காப்புறுதி நம்பிக்கை சபை அதிகாரி ஒருவர் கூறினார்.

"சிறைகள் சீர்திருத்தம் மற்றும் புனர்வாழ்வு அமைச்சும் தேசிய காப்புறுதி நம்பிக்கை சபையும் இணைந்து இந்த திட்டத்தை செயற்படுத்தும். சம்பளம் மற்றும் வேறு வருமானங்களை வைப்பிலிட்டு நாம் ஒரு கணக்கை ஆரம்பித்துள்ளோம். தற்போது கணக்கில் 5 மில்லியன் ரூபா உள்ளது எனவும் அவர் கூறினார்.

ஒருவர் சிறையிலிருக்கும் போது விபத்து ஏற்பாட்டால்; வேறு தீங்கு ஏற்பாட்டால் அவர் குடும்பத்துக்கு இந்த காப்புறுதி திட்டம் நட்டயீடு வழங்கும். பூரணமாக மறியல் தண்டனையை அனுபவித்து செல்வோருக்கு முழு காப்புறுதி தொகையும் வழங்கப்படும்.

சிறையிலிருந்து மீள்வோருக்கு புதிய வாழ்வு ஏற்படுத்தி கொடுக்கவே அமைச்சு இந்த திட்டத்தை கொண்டுவருகிறது என அவர் கூறினார்.

# அதிகாரிகளின் அசமந்தம் கைதி பரிதாப மரணம்

(கொழும்பு)

மட்டக்களப்பு சிறைச்சாலையில் உள்ள தமிழ் கைதி ஒருவர் நோய்வாய்ப்பட்டிருந்தும் சிறைச்சாலை அதிகாரிகள் அவரை உரியமுறையில் கவனிக்காது விட்டதனால் பரிதாபமாக உயிரிழந்துள்ளார். படகு மூலம் சட்டவிரோதமாக ஆட்களை இந்தியாவிற்கு அனுப்பிவைக்க முயன்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 35 வயதுடைய தமிழ்கைதியே இவ்வாறு மரணமானவராவார்.

கடந்த சில தினங்களாக சுகயீனமுற்றிருந்த குறித்த கைதி உணவு உட்கொள்ள முடியாது வாந்தி எடுத்தவாறு இருந்ததாகவும் அது தொடர்பில் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு அறிவித்தும் அவர்கள் அதனை கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை எனவும் சிறைச்சாலையில் உள்ள சக கைதிகள் மூலம் தகவல்கள் கசிந்துள்ளன.

எனினும் சிறைச்சாலை அதிகாரிகள் இது குறித்து தெரிவிக்கையில், திடீர் சுகயீனம் காரணமாக அவர் பாதிக்கப்பட்டதாகவும் தாம் உடனடியாக மட்டக்களப்பு வைத்தியசாலையில் அவரை அனுமதித்தாகவும் கூறியுள்ளனர்.

இதேவேளை, சிறைச்சாலை அதிகாரிகள் கவனம் செலுத்தியிருந்தால் கைதியின் உயிரை காப்பாற்றியிருக்க முடியும் எனத் தெரிவித்துள்ள கைதிகள், சிறைச்சாலை அதிகாரிகளின் கவனயீனத்தைக் கண்டித்து உண்ணாவிரதத்தில் ஈடுபடவுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

# சித்திரவதை சட்டத்தை திருத்துமாறு சர்வதேச ஜுரிகள் குழு வலியுறுத்து

(கொழும்பு)

சித்திரவதைக்கு எதிரான சட்டங்களில் இலங்கை அரசாங்கம திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமென சர்வதேச ஜுரிகள் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

சர்வதேச ஜுரிகள் சபையினால் அண்மையில் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சித்திரவதைக்கு எதிரான ஐக்கிய நாடுகள் பிரகடனத்திற்கு அமைவான வகையிலும் சித்திரவதைகளுக்கு எதிரான சர்வதேச பிரகடனங்களுக்கு ஏற்ற வகையிலும் இலங்கைச் சட்டங்களில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியமானது.

பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசரகால ஒழுங்குகள் போன்றவற்றின் கீழ் கைது செய்யப்பட்டவர்களுக்கு நியாயம் கிட்டக் கூடிய வகையில் சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. குற்றச் செயல்களில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளையும் முழுமையாக பாதுகாக்கும் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

இலங்கையில் சித்திரவதைக்கு எதிரான சட்டங்களில் திருததம் செய்யப்பட வேண்டுமென ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கும் சர்வதேச ஜுரிகள் சபை பரிந்துரை செய்துள்ளது.

# கடாபியின் கொலை விசாரணை ஐ.தே.கட்சியும் வரவேற்பு

லிபியாவின் முன்னாள் அதிபர் கேணல் கடாபியின் மரணம் இடமபெற்ற சூழ்நிலை குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டுமென அரசாங்கம் கோரியுள்ளமைக்கு ஐக்கிய தேசியகட்சி வரவேற்பு தெரிவிததுள்ளது. இக்கொலை தொடர்பில் விசாரணை நடத்த வேண்டுமென அரசாங்கம் கோருவது சரியானது என ஐ.தே.க.யின் பேச்சாளர் கயந்த கருணாதிலக்க செய்தியாளர் மாநாடொன்றில் கூறியுள்ளார்.

அதேவேளை முழுநாட்டையும் அதிர்ச்சிக்குள்ளாக்கிய, ஜனாதிபதியின் ஆலோசகர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர கொலை உட்பட பல சம்பங்கள் குறித்து அரசாங்கம் முறையான விளக்கங்களை வழங்க வேண்டுமெனவும் கயந்த கருணாதிலக்க கூறினார்.

கடந்த காலத்தில் இடம்பெற்ற பல சம்பவங்களுக்குப் பொறுப்பானவர்களுக்கு எதிராக முறையான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

# ஜனாதிபதி மகிந்த அவுஸ்ரேலியா பயணம்



பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அவரது குழுவினரும் நேற்று முற்பகல் அவுஸ்ரேலியாவுக்குப் பயணமாகியுள்ளார்.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ்க்குச் சொந்தமான விசேட விமானத்தில் ஜனாதிபதியும் தூதுக் குழுவினரும் பயணமானதாக தெரிவிக்கப்படுகிறது.

அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில் நடைபெறும் பொதுநலவாய நாடுகள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக 108 பிரதிநிதிகளுடன் கூடிய குழுவொன்று ஜனாதிபதியுடன் அவுஸ்ரேலியா நோக்கி புறப்பட்டுள்ளது.

நாளையதினம் ஆரம்பமாகவுள்ள பொதுநலவாய நாடுகளின் உறுப்பினர்கள் மாநாடு 30 ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பொதுநலவாய நாடுகள் மாநாட்டின் இறுதியில் அமைப்பின் தலைமைப் பொறுப்பு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு வழங்கப்படக் கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதேவேளை, அவுஸ்ரேலியா செல்லும் இலங்கைப் பிரதி நிதிகளுக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக சர்வதேச ஊடகங்கள் ஊகம் வெளியிட்டுள்ளன.

# தாய்லாந்து செல்லும் இலங்கையர் ஆலோசனை பெறுமாறு அறிவுறுத்து

இலங்கையிலிருந்து தாய்லாந்து நாட்டுக்குச் செல்வோர் வெளியுறவுத்துறை அமைச்சிடம் ஆலோசனை பெறவேண்டும் என வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. வெளியுறவுத்துறை அமைச்சின் பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவுக்கான பணிப்பாளர் சரத்திசாநாயக்க இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளார்.

தாய்லாந்தில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தம் காரணமாக இந்தத தீர்மானத்துக்கு அமைச்சு வந்துள்ளது. அந்நாட்டில் வெள்ளப் பெருக்கு காரணமாக 350 இற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளதுடன் ஆயிரக்கணக்கானோர் பாதிப்புற்றுள்ளனர்.

மேலும் இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் தாய்லாந்து நாட்டுக்குச் செல்லும் இலங்கையர்கள் பாதிப்படையக் கூடாது என்பதற்காக அமைச்சிடம் ஆலோசனை பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஒக்டோபர் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.